# தமிழரசு

1-10-1988 ரூ. 1





சதுரங்க ஆட்டவீரர் விஸ்வநாதன் ஆனந்திற்குத் தமிழ்நாடு அரசின் சார்பில் மேதகு ஆளுநர் அவர்கள் தங்கப்பதக்கம் (6.9.88) வழங்கினார்.

மேதகு தமிழக ஆளுநர் டாக்டர் பி.சி. அலெக்சாண்டர், பார்வையற்றோர் தேசிய நலச் சங்கத்திற்கான கொடிநாள் நிதி வழங்கினார் (12.9.88).



மேதகு தமிழக ஆளுநர் டாக்டர் பி.சி. அலெக்சாண்டர், சென்னையில் (12.9.88) கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டத்தைப் பார்வையிட்டார்.



# பொருளாதார வளர்ச்சிக்குத் தீவிர முனைப்புத் திட்டங்கள்

தமிழரசு

1-10-1988

திருவள்ளுவர் ஆண்டு 2019

விபவ - புரட்டாசி 16

மலர்: 19 இதழ்: 7

கடந்த ஏழு மாதங்களாகத் தமிழகத்தில் பொருளாதாரத்தை முன்னேற்றம் அடையச் செய்யப் பல்வேறு முயற்சிகள் செய்து வருகிறோம். குறிப்பாக விவசாயம் தொழில் துறைகளின் வளர்ச்சிக்காகப் பல்வேறு சலுகைகளை அறிவித்தோம். இதன் பலன்கள் சென்ற இரண்டு மாதங்களாகத் தெரிகின்றன. தொழில் வரி ரத்து மற்றும் சலுகைகள் குறித்து விரைவில் மேதகு ஆளுநர் அவர்கள் இரண்டாவது கட்ட அறிவிப்புச் செய்யவிருக்கிறார்.

நலிவடைந்த நிலையில் இருந்த 41 துணி ஆலைகளில் இப்போது நான்கு ஆலைகள் மீண்டும் இயங்க உள்ளன. இன்னும் ஆறு வாரங்களில் மேலும் ஆறு ஆலைகள் இயங்கத் துவங்கும். இதன் மூலம் மேலும் 8,500 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைத்துள்ளது.

காவிரிப் படுகையில் 30 மெகாவாட் சக்திக்கு எரிவாயு கிடைக்கிறது. இந்த எரிவாயு உற்பத்தி, வரும் ஆண்டுகளில் மேலும் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆண்டுதோறும் அரைமில்லியன் டன் பெட்ரோல் எண்ணெய் உற்பத்தி செய்யப்படுகிறது. இதைச் சுத்திகரிப்புச் செய்ய சென்னைக்குக் கொண்டு வருவதால் அதிகம் செலவாகிறது. ஆகையால் காவிரிப்படுகையில் எண்ணெய்ச் சுத்திகரிப்பு ஆலை அமைப்பது பற்றி அரசு தீவிரமாகப் பரிசீலித்து வருகிறது.

அரசின் சொத்து வரிவிதிப்பு குறித்துப் புகார்களும் பாராட்டுகளும் வந்துள்ளன. எனவே, சொத்து வரியை ஒரே சீரான முறையில் விதிக்கஆலோசனை செய்து வருகிறோம். இதற்காகப் புதியதோர் சட்டம் வேறெந்த மாநிலத்திலும் இல்லாதபடி கொண்டு வரப்படவிருக்கிறது.

விவசாயத் துறையில் அரிசி உற்பத்தி அதிகரிக்க நடவடிக்கை மேற்கொண்டு வருகிறோம். சிறப்பு உற்பத்தித் திட்டம் கொண்டு வரப்பட்டு, 54 இலட்சம் டன்னாக இருந்த உற்பத்தி 60 இலட்சம் டன்னாக உயர்ந்துள்ளது. மேலும் தஞ்சை மாவட்டத்தில், பருவ மழைக் காலங்களில் 80 சதவிகிதம் தண்ணீர் வீணாகக் கடலில் கலக்கிறது. இந்த நீரைக் குளங்களில் தேக்கி வைத்துப் பயன்பெறும் நல்லதோர் திட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. தஞ்சை மாவட்டத்தில் தூர்ந்து போயுள்ள வாய்க்கால்களைச் சீரமைக்க நிதி வசதி செய்யப்பட்டிருக்கிறது.

வேலை வாய்ப்பிற்கு முக்கியத்துவம் கொடுத்து 8-வது ஐந்தாண்டுத் திட்டம் தயாரிக்கப்படுகிறது. இதன் மூலம், படித்த மற்றும் படிக்காதவர்களுக்குக் கணிசமான அளவு வேலைவாய்ப்புத் தரமுடியும்.

—மேதகு ஆளுநரின் ஆலோசகர்

**திரு ஜி. வி. இராமகிருஷ்ணா**

(26-9-88ல், இந்துஸ்தான் சேம்பர் ஆப் காமர்ஸ் 42-ஆம் ஆண்டு விழாவில் பேசியதிலிருந்து.)

## காந்தியடிகளின் பிறந்தநாள் விழா-கேரளத்தில் தமிழ்த் திரைப்பட விழா- டில்லி பொருட்காட்சியில் தமிழ்நாடு

அண்ணல் காந்தியடிகளின் பிறந்தநாள் விழா தமிழ்நாடு அரசு சார்பில் ஒருவாரகாலம் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படவிருக்கிறது. சென்னைக் கடற்கரையில், காமராஜர் சாலையில் உள்ள மகாத்மா காந்தி சிலையிலிருந்து அக்டோபர் 2-ஆம் நாளன்று மிகப்பெரிய ஊர்வலம் துவங்கும். மாலை மூன்று மணியளவில் புறப்படும் அந்த ஊர்வலம் அடையாறில் உள்ள சர்தார் வல்லபாய் படேல் சாலையிலிருக்கும் காந்தி மண்டபத்தைச் சென்றடைந்ததிலிருந்து விழா தொடங்கும். விழாவில் முன்னாள் அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் கலந்து கொள்கிறார்.

5-ஆம் நாளன்று நடைபெறும் விழாவில் மேதகு தமிழக ஆளுநர் திரு பி.சி. அலெக்சாண்டர், 9-ஆம் நாள் நடக்கவிருக்கும் நிறைவு நாள் விழாவில் மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. ப. சிதம்பரம் ஆகியோர் பங்கேற்கிறார்கள்.

காந்தியடிகளின் பிறந்தநாள் விழாவையொட்டி, ஒருவார காலக் கண்காட்சியொன்றும் காந்தி மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

அக்டோபர் 13-ஆம் நாள் முதல் ஒரு வார காலம் கேரளத்தில் தமிழ்த் திரைப்பட விழா நடைபெறவிருக்கிறது. திருவனந்தபுரத்தில் உள்ள தாகூர் திரையரங்கில் மேதகு தமிழக ஆளுநர் அவர்கள் முன்னிலையில் தொடங்கும் அவ்விழாவிற்கு மாண்புமிகு கேரள முதல்வர் திரு நாயனார் தலைமை தாங்குகிறார்.

அன்றுமுதல் ஆறுநாட்கள் திருவனந்தபுரத்தில் உள்ள 4 திரையரங்குகளில் தமிழ்த் திரைப்படங்கள் காட்டப்படும்.

வெளி மாநிலத்தில் தமிழ்த் திரைப்பட விழா நடப்பது இதுவே முதன் முறையாகும்.

ஒவ்வோர் ஆண்டும் டில்லியில் நடக்கும் அகில இந்தியத் தொழிற் பொருட்காட்சி, வரும் நவம்பர் 14-ஆம் நாள் முதல் 29-ஆம் நாள் வரை, நடைபெறவிருக்கிறது. அங்கு அமையவிருக்கும் தமிழ்நாடு அரங்கில், தமிழ்நாட்டில் உருவாக்கப்பட்ட பல்வேறு இயந்திரப் பொருட்கள் காட்சிக்கு வைக்கப்படும்.

இந்த ஆண்டு-செய்தி மக்கள் தொடர்புத்துறை மூலமே தமிழ்நாடு அரங்கின் பொருட்காட்சிப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

—திரு சி. ராம்தாஸ், இ.ஆ.ப.,

(சிறப்பு ஆணையர் மற்றும் செயலர், செய்தி — சுற்றுலாத்துறை)

21-9-88 பத்திரிகையாளர் சந்திப்பில்.



# காந்தியடிகளும் இலட்சியமும்

*பெருந்தலைவர் காமராஜர்*

ஒரு இலட்சியத்தை விரைவாக அடையத் துடிக்கும்போது தவறு செய்வது மனித இயல்புதான். ஆனால் தவறை உடனே திருத்திக் கொண்டேயாகவேண்டும். அவ்வாறு இல்லாமல் தவறுகள் பற்றிக் கவலை இல்லாமலேயே இருப்போமானால், மேன்மேலும் தவறுகள் நடந்து அடையவேண்டிய இலட்சியத்தை அடைய முடியாமல் போய் விடுவோம்.

ஆகவேதான், காந்தியடிகள் இலட்சியத்தை மட்டுமே கொள்ளாமல் அதை அடைய வேண்டிய வழிமுறைகளைப் பற்றியும் வலியுறுத்திப் பேசினார். 'இலட்சியம் உயர்ந்ததாக இருந்துவிட்டால் மட்டும் போதாது. அதை அடைவதற்குச் செல்கின்ற பாதையும் நேர்மையானதாக இருக்கவேண்டும்' என்று சொல்லி வந்திருக்கிறார். அதற்கு அவரே ஓர் உதாரண புருஷராகவும் இருந்து வந்தார்.

அகிம்சை வழியில் விடுதலை இயக்கத்தை நடத்தினார் காந்திஜி. சில சமயம் தன் கருத்துக்கு மாறாக விடுதலை இயக்கத்தில் மக்கள் கலவரங்கள் நிகழ்ந்தால் உடனே அதற்கான தண்டனையைத் தனக்குத் தானே விதித்துக் கொண்டார். உண்ணாவிரதம் இருந்து, பாதை மாறிப் போவதை மக்களுக்குத் தெளிவாக உணர்த்தினார். சௌரி சௌராவில் மக்கள் கலகம் செய்தபோது தனது போராட்டத்தையே நிறுத்திவிட்டதாக அறிவித்தார். சி.ஆர்.தாஸ், மோதிலால் நேரு போன்ற தலைவர்கள் அதற்கு எதிர்ப்பு தெரிவித்தும் தனது முடிவை மாற்றிக்கொள்ள மறுத்துவிட்டார் காந்திஜி...

அதுமட்டுமல்ல, இந்தியா வறுமையில் வாழும் நாடாக இருப்பினும்கூட, சுதந்திரமாக வாழமுடியும் என்பதில் ஏழை மக்களுக்கு நம்பிக்கை உண்டாக்க, ஏழைகளுடன் ஏழையாக வாழ்ந்து, பிரச்சாரம் செய்தார் அவர் ஏழைகளின் தொழிலுக்கு உதவிய கைராட்டினமே அவர் போராட்ட ஆயுதமாயிற்று. மகாத்மாவின் வழி நடக்க வந்தவர்களும மிகப் பெரிய அறிவாளியாகப் பட்டம் பதவி பெற்றிருந்தாலும் கூட அவற்றை மறந்து எளிமையாக வாழ்ந்து காட்டினார்கள். மோதிலால் நேரு,சி.ஆர்.தாஸ், ஜவஹர்லால்நேரு, ராஜன்பாபு, ராஜாஜி போன்ற தலைவர்கள் ஆடம்பரத்தை அறவே துறந்து மக்களோடு மக்களாக எளிமையாக வாழவே, இந்தத் 'தலைமை'யில் ஒரு நம்பிக்கையும், அடையவேண்டிய லட்சியத்தில் அசைக்க முடியாத பற்றும் நாட்டு மக்களிடையே ஏற்பட்டது.

தலைவர்களுடைய எளிமையும் தங்களையே அர்ப்பணித்துக் கொண்ட தியாக உள்ளமும் நாட்டு மக்களிடையே பரவி இந்தியாவின் தார்மிகப் பண்பு முன் எப்போதையும்விட மிக உயர்ந்ததாக மலர்ந்தது.

ஆனால், நாம் காந்தியடிகள் பாதையிலிருந்து தவறிச் செல்கிறோம். நாடு இப்படியே சென்று, தார்மிகப் பண்புகளை நாம் இழந்தோமானால், இலட்சியங்கள் ஒரு போதும் வெற்றியடையாது. ஆகவே, சிலரேனும் துணிந்து நமது தார்மிகப் பண்புகளைக் காப்பாற்ற தொடர்ந்து போராடுவதே இன்று மகாத்மாவுக்குச் செய்யும் மிகச் சிறந்த அஞ்சலியாக இருக்கும். ●

## அண்ணலின் அமுத மொழிகள்!

**சத்தியமே என் கடவுள்; அகிம்சையே அதைக் காணும் வழி.**

* * *

**அன்பு என்பது ஒரு போதும் கேட்பதில்லை; எப்பொழுதுமே கொடுக்கும்.**

* * *

**பெண்களின் நிலை உயரும் போது ஆண்களின் நிலையும் உயரும்; இவ்விருவரின் நிலையும் உயரும் போது மனித சமுதாயத்தின் நிலையே உயர்ந்து விடும்.**

* * *

**இந்தியாவிற்குத் தேவையானது ஒரே மாதிரியான நல்ல ஆடை அல்ல; ஒரே மாதிரியான நல்ல இருதயமே!**

* * *

**உங்கள் எண்ணங்களை ஒரு போதும் ஒளித்து வைக்காதீர்கள். அவற்றை வெளியே சொல்வது கேவலமானது என்றால், அவற்றை எண்ணுவது இன்னும் கேவலமானது.**

* * *

**ஏழைகளுக்குத் தொண்டு புரிவதே என் உள்ளத்தில் குடிகொண்டிருந்த பெருவிருப்பமாகும். இவ்விருப்பமே என்னை எப்பொழுதும் ஏழைகளிடத்தில் கொண்டு போய்ச் சேர்த்தது. ஏழைகளுடன் கலந்து அவர்களில் ஒருவனாகும் ஆற்றலையும் எனக்குத் தந்தது.**

* * *

**மனிதனைப் பிடிக்கும் நோய்களிலெல்லாம் மிகமிகக் கொடியது—மோசமானது— அச்சம் எனும் நோய்தான்.**

# நியாயமான அளவு காவிரி நதிநீர் கோருவது தமிழ்நாட்டின் உரிமை மட்டுமல்ல—வாழ்க்கைப் பிரச்னையும்கூட!

## கர்நாடகத்தில் மேதகு தமிழக ஆளுநர் வலியுறுத்தல்

**—காவிரி நதிநீர்ப் பங்கீடுபற்றி பெங்களூரில் (20.9.88) நடந்த கூட்டத்தில் தமிழக ஆளுநர் அளித்த விளக்கம்**

நீண்ட காலமாக இருந்துவரும் காவிரி நதிநீர்ப்பிரச்னை குறித்து பெங்களூரில் பேச்சு வார்த்தை நடத்த இசைவு தந்த கர்நாடக முதல்வர் அவர்களுக்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இந்தப் பிரச்னைக்கு முடிவு காண்பது பல ஆண்டுக்காலமாக முடியாததாக இருந்து வந்த போதிலும், இரண்டு மாநிலங்களுக்கு இடையில் நல்லுறவு இருந்து வருகிறது. அந்த வகையில் பேச்சு வார்த்தைகள் மூலம் இரு தரப்பாரும் ஒப்புக்கொள்ளக்கூடிய தீர்வு காண இயலும் என்ற நம்பிக்கையில் இங்கே நாங்கள் வந்து இருக்கின்றோம்.

மற்றும் 1924ஆம் ஆண்டில் ஏற்பட்ட ஒப்பந்தங்களின் அடிப்படையின் கீழ் நீண்ட காலமாகக் காவிரி நதி கீழ்ப்பாசனப் பகுதிகளுக்குப் பாதுகாப்பு உரிமை அளித்தல் மற்றும் இந்தப் பிரச்னையை ஒரு நடுவர் தீர்ப்புக்கு விட்டுவிட வேண்டுமென்று ஏற்கெனவே வலியுறுத்தி வரும் வேண்டுகோளுக்கும் எவ்வித பாதகமும் ஏற்படாத வகையிலும் பேச்சு வார்த்தை நடத்த நாங்கள் இங்கு வந்துள்ளோம். தமிழ்நாட்டின் பாசனத்தேவைகளைக் கருத்திற்கொள்ளும்போது தென்மாநிலங்களிலேயே தமிழ்நாட்டில் நீர்த்திறம் குறைவு என்பதை இத்தருணத்தில் வலியுறுத்திட விரும்புகின்றேன்.

காவிரி ஒன்றுதான் தமிழ்நாட்டில் பெரிய நதி. 50 விழுக்காட்டிற்கு மேற்பட்ட பாசனப் பரப்பிற்கு நீர் வசதி இந்த ஆற்றினால் கிடைக்கிறது. அரிசிதான் தமிழ்நாட்டு மக்களின் முக்கிய உணவு. பல நூற்றாண்டுக் காலமாக பூகோளப் பருவநிலை சமூக பொருளாதார காரணங்களினால் இப்பகுதியில் நெற்பயிர் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. காவிரியின் கழிமுகப்பகுதி தமிழ்நாட்டின் நெற்களஞ்சியம் ஆகும். இதுவரை நெல் பயிராகும் நிலப்பகுதியைக் குறைக்க இயலாது. இது தமிழ் நாட்டின் உரிமைப் பிரச்னை மட்டுமல்லாமல், ஒரு வாழ்க்கைப் பிரச்னையுமாகும்.

இரு மாநிலங்களின் அதிகாரிகள் இம்மாதம் 3ஆம் தேதி இன்றைய விவாதத்திற்குரிய பிரச்னைக்குத் தீர்வு காண முயற்சி செய்தார்கள். இன்றைய விவாதத்திற்குரிய ஒரு



கருத்துருவை அவர்கள் தயாரிக்க இயலவில்லை. ஆனால் இரு தரப்பாரும் விவாதிக்கக் கூடிய பிரச்னைகளை அவர்கள் அறிந்துள்ளார்கள்.

இன்றைய விவாதத்திற்கு உதவியாக இருக்கும் வகையில் 5-9-88ஆம் நாள் கர்நாடக மாநில அரசு தலைமைச் செயலாளர் அவர்கள் தமிழ்நாடு அரசு தலைமைச் செயலாளர் அவர்களுக்கு அனுப்பிய குறிப்பில் கண்டுள்ள ஏழு அம்சங்கள் பற்றி நான் தனித்தனியாக கருத்துக்களைசொல்ல விரும்புகின்றேன்.

**காவிரிப் படுகைப் பகுதி மாநிலங்களிடையே பாசன நீரைப் பகிர்ந்து கொள்வதற்கான 1924ஆம் ஆண்டு ஒப்பந்தம் செல்லுபடியாதலும் அதனுடைய பொருத்தமும்:**

1924ஆம் ஆண்டு ஏற்பட்ட ஒப்பந்தத்தை இப்போது குறிப்பிட்டுக் கூறக்கூடாது என்று கர்நாடக மாநில அரசு சொல்லுகிறது. 1924ஆம் ஆண்டு ஒப்பந்தம் நிரந்தரமானது என்றும், அந்த ஒப்பந்தத்திற்குக் காலக்கெடு ஏதும் இல்லை யென்றும் தமிழக அரசு கருதுகின்றது. இந்த ஒப்பந்தத்தின் 10-வது விதியில் துணை விதிகள் 4 முதல் 8 வரையில் உள்ளவைகள் மறு ஆய்வு செய்வதற்கான வழிவகைகள் உள்ளன. நீரைப் பங்கிடுவது சமமாக இருக்க வேண்டுமென்று கர்நாடக அரசு கருதுகின்றது.

புதிய உபயோகங்களைக் கருதுவதற்கு முன்னர் ஒப்பந்தத்தின் அடிப்படையில் முன்னர் அமைந்துள்ள தற்போதைய நீர் உபயோகத் தேவையை நியாயமாக நிறைவேற்ற வேண்டுமென்றும், அதனைப் பாதுகாக்க வேண்டுமென்றும், தமிழக அரசு கருதுகின்றது.

வாதத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டிய 80 வருட புள்ளி விவரங்கள் (1901லிருந்து 1981ஆம் ஆண்டு வரை) நீண்ட காலத்தில் கிடைத்த நீர் அளவினைக் கணக்கிட வேண்டுமென்றும், உண்மை நிலை அறியும் குழு தெரிவித்துள்ளவாறு 38 ஆண்டு காலத்திற்கான புள்ளி விவரங்களை கணக்கில எடுத்துக்கொள்ளக் கூடாது என்றும் கர்நாடக அரசு கருதுகின்றது.

1972ஆம் ஆண்டு மே மாதத்தில் இவ்விரு மாநிலங்களைச் சேர்ந்த முதலமைச்சர்கள் இடையே ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது என்பதை நான் தெரிவிக்க விரும்புகின்றேன். அதன் பிரகாரம் காவிரி நீர், அதன் உபயோகம் பற்றிய புள்ளி விவரத்தைச் சேகரிக்க ஒரு குழுவினை அமைக்க வேண்டுமென்றும், அந்தப் புள்ளி விவரத்தின் அடிப்படையில் காவிரி நீரைப் பங்கீடு செய்வது பற்றி முடிவெடுக்க பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமென்றும் அப்போது தீர்மானிக்கப்பட்டது.

1900-1901ஆம் ஆண்டிலிருந்து அக்குழுவிற்கு விவரங்கள் தரப்பட்டன. ஆனால், மேட்டூர், கிருஷ்ணராஜசாகர் அணைகள் 1934-35ஆம் ஆண்டிற்குப் பிறகு அமைக்கப்பட்டன என்றும், அந்த ஆண்டிலிருந்து புள்ளி விவரத் தகவல்களை மேற்கொள்ள வேண்டுமென்றும் அக்குழு முடிவு செய்தது. நீர் ஆய்வின்படி வேறுபாடுகளைக் காண்பதற்கு 30 முதல் 35 ஆண்டு விவரங்கள் போதுமானது என்று நான் நம்புகிறேன். இக்குழு சம்பந்தப்பட்ட மாநிலங்களுடன் கலந்து ஆலோசனை செய்து தனது திட்டத்தை இறுதியாக்கியது. நீண்ட காலத்திற்கான புள்ளிவிவரத்தைக் கர்நாடக மாநிலம் விரும்பினால் அப்போதைய பிரச்னையைக் கர்நாடக மாநிலம் எழுப்பியிருக்கவேண்டும். ஆனால், அவ்வாறு அப்போது கர்நாடக மாநிலம் செய்யவில்லை.

29.4.73-ஆம் ஆண்டில் நடைபெற்ற கூட்டத்தில் இக்குழு காவிரிநீர் பற்றிக் கொடுத்த புள்ளி

# நீர்த்தேவையை நியாயமாக நிறைவேற்றவேண்டுமென்றே தமிழ்நாடு அரசு கருதுகிறது!

விவரத்தை இருமாநில முதலமைச்சர்களும் ஒப்புக் கொண்டார்கள். ஒருகவனஈர்ப்புத் தீர்மானத்திற்குப் பதிலளிக்கையில் மத்திய அரசின் பாசனத்துறை அமைச்சர் அவர்கள் மக்களவையில் 7.5.73 ஆம் நாள் கொடுத்த தனது அறிக்கையில் இதற்கு ஆதரவு அளித்துள்ளார்கள். குழு அறிக்கையில் கூறப்பட்ட நீர் அளவு பற்றிய விவரத்திற்குப் பொதுவான கருத்து ஒற்றுமை இருந்தது. 1973ஆம் ஆண்டு அக்டோபர் 10-ம் நாள் நடைபெற்ற முதலமைச்சர்கள் கூட்டத்தில் பாசனமாகும் பரப்பளவு முதலியவைபற்றி உண்மை நிலை அறியும் குழு அளித்த கூடுதல் அறிக்கையில் சரிபார்த்து ஒப்புக் கொள்ளப்பட்டது.

1974-76 ஆகிய ஆண்டுகளில் காவிரி நீர் பிரச்னை பற்றி மத்திய அரசு தயாரித்த ஒப்பந்த வரைவுகளை பல கூட்டங்களில் முதலமைச்சர்கள் விவாதித்துள்ளார்கள். ஆனால், அப்போதெல்லாம் கர்நாடக மாநிலம் இதுபற்றி ஏதும் கூறவில்லை.

காவிரி நதி நீர் பற்றிய புள்ளி விவரத்தைக் குறித்து கர்நாடக மாநிலம் தன் நிலையை அடிக்கடி மாற்றி வந்திருக்கிறது. 29.4.73 ஆம் நாள் நடந்த கூட்டத்தில் காவிரி நதி நீர் உண்மை நிலை அறியும் குழு ஏற்றுக்கொண்டதாவது; 1934-35 முதல் 1971-72 வரையுள்ள 38 ஆண்டுக்கான புள்ளி விவரம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆனால் 13.6.1973ஆம் நாளன்று கர்நாடக மாநில முதலமைச்சர் அவர்கள் மத்திய அமைச்சருக்கு எழுதிய கடிதத்தில் 1955-56 ஆண்டிலிருந்து கிடைக்கும் புள்ளி விவரத்தை அடிப்படை ஆதாரமாகக் கொள்ளவேண்டுமென்று கூறியுள்ளார் எனத்தெரியவருகிறது. 1980-ஆம் ஆண்டு கர்நாடக மாநிலம் கொடுத்த 10 அம்ச விதிகளில் 60 ஆண்டுகளுக்குக் குறையாத கால வரம்பிற்கான புள்ளி விவரத்தை மேற்கொள்ள வேண்டுமென்று கர்நாடக அரசு கூறியுள்ளது.

1981 ஜனவரியில், கர்நாடக மாநிலத்து வரைவுத் திட்டங்கள், 1900-01லிருந்து 1971-72 வரை உள்ள 72 ஆண்டுகளுக்கான புள்ளி விவரங்களை எடுத்துக்கொள்ளலாம் எனத்தெரிவித்தன. 3.9.88-ல் நடந்த தலைமைச்செயலர்கள் கூட்டத்தில், கர்நாடகம் 1900-1982 வரையுள்ள 82 ஆண்டுகளுக்கான விவரங்களை அடிப்படையாகக் கொள்ளலாம் எனக் கருத்துத் தெரிவித்தது.

1973-74ஆம் ஆண்டுகளுக்குப் பின்னர் 1924 ஒப்பந்தப்படி தண்ணீர் விடவில்லை. இதனால், 1934-35க்கு முன்னதாகவோ அல்லது 1973-74க்கு பின்னர் உள்ள புள்ளி விவரங்களை ஏற்க எந்த முகாந்திரமும் இல்லை. காவிரி நீர் உண்மை நிலை ஆய்வுக்குழு அளித்த விவரங்களை ஏற்றுக்கொள்ளாததாலும் நாம் 16 ஆண்டுகளுக்குப்பின் விவாதிப்பதற்கு எந்த அடிப்படையும் இல்லாத நிலையில் தகராறு ஏற்பட்டுள்ளதால் இப்புள்ளிவிவரங்கள் பயனற்றுப் போயின.

மழைநீரை முழுமையாகப் பயன்படுத்தும் வகையில் விஞ்ஞான முறையில் பயிர்த்திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டுமென்றும், சாகுபடியாகும் பயிர்கள் திட்டமிடப்படவேண்டுமென்றும் கூறப்படுகின்றது. இப்போது உள்ள பயிர்ச் சாகுபடி முறையும், பயிர்ச் சாகுபடி காலமும், நீண்ட நெடுங்காலமாகத் தமிழகத்தில் பின்பற்றப்படுகின்றது என்பதையும், நிலம், பருவநிலை, பொருளாதாரநிலை ஆகியவற்றுக்கு இப்போதுள்ள முறை பொருத்தமுடையது என்பதையும் நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகின்றேன். இம்முறையை மாற்றினால் ஏற்படும் விளைவு மிகவும் பாதகமாக இருக்கும். உணவு உற்பத்தியிலும், பொருளாதார அமைப்பிலும் கடுமையான சீர்குலைவுகள் ஏற்படும் என்பதையும் நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகின்றேன்.

1976-77ஆம் ஆண்டில் தற்போதுள்ள பயிர்ச்சாகுபடி முறைக்குத் தேவைப்படும் தண்ணீர் பற்றி இந்திய அரசு ஒரு தொழில்நுட்பக் குழுவை அமைத்தது. அந்தக்குழு கம்ப்யூட்டர் உதவியுடன் பயிர்களுக்கான தண்ணீர்த் தேவையின் அளவை நிர்ணயித்துள்ளது. 555 டி.எம்.சி தண்ணீர், 28.20 லட்சம் ஏக்கர் ஆயக்கட்டு நிலத்திற்குத் தேவை என்று இக்குழு தெரிவித்துள்ளது. காவிரி ஆறு உண்மைநிலை ஆய்வுக்குழு அளித்த நீர்த்தேவை அளவு 566 டி.எம்.சி. ஆகும். ஏறக்குறைய இரண்டும் ஒரே அளவு உள்ளது.

சார்ந்துள்ள நிலை: அனைத்துலக நியதிப்படியும், தேசிய பாசனக் கமிஷன் குறிப்பிட்டதுபோலவும், 50% சார்ந்துள்ள நிலை முறையைக் கையாள வேண்டும் என்று கர்நாடக அரசு கூறுகின்றது.

காவிரிப்படுகை நீரை மாநிலங்களுக்கு இடையே பயன்படுத்திக் கொள்ள ஏற்படும் ஒப்பந்தத்தில் தற்போதுள்ள பாசன வசதியில் 75% சார்ந்துள்ள நிலை இருக்கவேண்டும் என்ற அடிப்படைக் கொள்கையை ஏற்றுக்கொள்ளவேண்டும்; அதே நேரத்தில், தற்போதுள்ள பாசன வசதியைப் பாதுகாப்பதற்கு, குறைந்த அளவு தண்ணீர் விடுவதற்கான உத்தரவாதம் அளிக்கப்படவேண்டும் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

75% சார்ந்திருக்கும் நிலை விவசாயிகளுக்கு உறுதி செய்யப்பட

மாண்புமிகு கர்நாடக முதல்வர் — மேதகு தமிழக ஆளுநர்



# காவிரி நதிநீர் பற்றிய தனது நிலையைக் கர்நாடக அரசு அடிக்கடி மாற்றி வந்திருக்கிறது

வேண்டும் என்று இரண்டாவது நீர்ப்பாசனக் கமிஷன் கருத்து தெரிவித்திருக்கிறது. 75•/. சார்ந்திருக்கும் நிலையை அடிப்படையாகக் கொண்டுதான் பாசனத்திட்டங்கள் அமைக்கப்படுகின்றன. இதே கருத்தினையே மாநிலங்களுக்கு இடையே நீர்ப் பங்கீடு தீர்ப்பு மன்றம் தெரிவித்துள்ளது. நான்கு ஆண்டுகளில் சராசரியாக மூன்று ஆண்டுகளேனும் சாகுபடிக்கான தண்ணீர் முழுவதும் அளிக்கப்பட வேண்டும் என மத்திய நீர்ப்பாசனக் கமிஷன் கருத்துத் தெரிவித்திருக்கின்றது. தமிழ் நாட்டில் தற்போதுள்ள பெரும்பான்மையான ஆயக்கட்டுகள் 85•/. முதல் 100•/. சார்ந்துள்ள நிலையில் தண்ணீர் வசதி பெறுகின்றன.

தமிழ்நாட்டில் நீர்த்தேக்கங்கள் இல்லாமைதான், பெருமளவில் தண்ணீர் வீணாவதற்குக் காரணம் என்னும் கருத்தைக் கர்நாடக அரசு தெரிவித்தது.

மேட்டூரை அடுத்து நீர்த்தேக்கங்கள் அமைக்க சரியான இடங்கள் இல்லை. எனினும், சிறிய நீர்த்தேக்கங்கள் அமைத்திட சில இடங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. மேட்டூருக்கும், பவானி நதி சங்கமத்திற்கும் இடையே நான்கு சிறிய நீர்த்தேக்கங்கள் கட்டப்பட்டுள்ளன. இவற்றின் கொள்ளளவு 2.1 டி.எம்.சி. ஆகும். பவானிக்கும், கட்டளை நில நீர்ப்படுகைக்கும் இடையே மூன்று சிறிய நீர்த்தேக்கங்கள் கட்டுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. 1.8 டி.எம்.சி. கொள்ளளவு கொண்டதாக இவை அமையும். இந்த நீர்த்தேக்கங்கள் அமைக்கப்பட்டதன் நோக்கம் மின் உற்பத்தியே ஆகும். பிற பயன் கருதி இவை அமைக்கப்படவில்லை.

மேல் அணைக்கட்டு அல்லது கல்லணை இவற்றில் நீர்த்தேக்க அளவை உயர்த்துவது என்பது இயலாத ஒன்று. அவ்வாறு செய்தால் ஆற்றங்கரையிலுள்ள நகரங்களும், கிராமங்களும் மட்டுமல்லாது ஏராளமான நல்ல விளைச்சல் நிலங்களும் மூழ்கிப் போகும்.


காவிரி பற்றிய உண்மைநிலை ஆய்வுக்குழுவால், இந்த விஷயம் நன்கு விவாதிக்கப்பட்டு தமிழ்நாடு அரசு சொன்ன விளக்கங்களும் ஒப்புக்கொள்ளப்பட்டு உள்ளன என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

நீர் பயன்படுத்துதல் விவரம்: தமிழ்நாடு பயன்படுத்தும் தண்ணீர் தொடர்பாகக் காவிரி பற்றிய உண்மைநிலை ஆய்வுக்குழு தெரிவித்துள்ள விவரங்களைக் கர்நாடக அரசு ஏற்றுக்கொள்ளவில்லை.

பெய்கின்ற மழையை முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ள ஏதுவாக விளைச்சல் பருவங்கள், பயிர் வகைகள் இவற்றுடன் விஞ்ஞான விவசாய முறை ஆகியவற்றின் அடிப்படையில்தான் தண்ணீர் பயன்படுத்தும் அளவைக் கணக்கீடு செய்தல் வேண்டும் என்று கர்நாடக அரசு கூறுகிறது. இதற்கு நான் தக்க விடை எனது உரையில் அளித்துள்ளேன்.

மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் விடுதல்: 15 நாட்களுக்கு ஒரு முறை மேட்டூரிலிருந்து கண்டிப்பாகத் தண்ணீர் விடப்படும் சாத்தியக்கூறுகள் தென்படவில்லை எனக் கர்நாடக அரசு கூறுகின்றது.

தமிழகத்தில் தற்போதுள்ள ஆயக்கட்டுகளின் பாதுகாப்புக்காக, தென் மேற்குப் பருவமழை தண்ணீர் விடப்படுவது உறுதி செய்யப்பட வேண்டும்.



## வைக்கம் வீரரும் காந்தியடிகளும்

ஒத்துழையாமைக் கிளர்ச்சி நடைபெற்ற சமயம். கள்ளுக்கடை மறியல் பல முக்கிய நடவடிக்கைகளில் ஒன்று. 1922இல் காந்திஜி தமிழ் நாட்டுக்கு வந்தபோது ஈரோட்டில் பெரியார் வீட்டில் தங்கினார். இந்த இடத்தில்தான் கள்ளுக்கடை மறியல் பற்றி முடிவு செய்யப்பட்டது. அக்காலத்தில் பெரியாருக்குத் தாடி கிடையாது. மீசை மட்டுமே வைத்திருந்தார்.

ஒத்துழையாமை இயக்கத்தை நிறுத்த மாளவியாவும, சர் சங்கரன் நாயரும் கூடிப் பேசி காந்திஜியிடம் மறியலை நிறுத்த வேண்டுமாய்க கேட்டுக் கொண்டாகள். ''மறியலை நிறுத்துவது என் கையில் இல்லை; ஈரோட்டில் உள்ள நாகம்மை (ஈ.வே.ரா. மனைவி) யிடமும் கண்ணம்மாவிடமும் தான் (ஈ.வே.ரா சகோதரி) இருக்கிறது'' என்று மகாத்மா அவர்களுக்குத் தெரிவித்துவிட்டார்.

வைக்கம் சத்தியாக்கிரகத்தின்போது மகாத்மா, பெரியாரை இரண்டாம் முறையாகவைக்கத்தில் சந்தித்தார். ஈ.வே.ரா.வைப் பார்த்துச் சிரித்துக் கொண்டே, ''எனக்குத் தெரியும். தமிழர்கள் இம்மாதிரி சத்தியாக்கிரக இயக்கங்களில் துணிந்து ஈடுபடுவர் என்று. தீண்டாமை ஒழிப்புக்காக ஒரு தமிழர் முன்வந்து இதை நடத்துவது பெருமைப்பட வேண்டிய விஷயம் ''என்றார்.

1927இல் மூன்றாவது முறையாக பெங்களூரில் ஈ.வே.ரா. காந்தியைச் சந்தித்துப் பேசினார்.

ஆதாரம்: 'கல்கி' (காந்திமலர் 1969)



# அண்ணல் காந்தியடிகள் அனுபவ மொழிகள்

"மனிதன் என்றால், வெறும் அறிவு மாத்திரமல்ல; அல்லது ஸ்தூல உடலுமல்ல; உணர்ச்சி மட்டுமோ; அதுவும் அல்ல, அறிவு, உடல், உணர்ச்சி ஆகிய மூன்றும் அழகிய முறையிலே ஒன்று கூடினால்தான் மனிதன் ஆகிறான். இவை மூன்றையும் வளர்ப்பதே உண்மையான கல்வி முறையாகும்''.

நிலையான எந்தச் செயலையும், அல்லது உண்மையான எந்தச் செயலையும் சாதிப்பதற்கு முதல் படியாக, நமது நெஞ்சத்தில் அஞ்சாமை வேரூன்றி நிற்க வேணடும் என்பது எனது தாழ்மையான கருத்து. சமய உணர்ச்சி விழிப்படைந்தாலன்றி, அஞ்சாமை என்ற நிலையை நாம் அடைய முடியாது. இனிகடவுள் ஒருவருக்கே அஞ்சுவோம்; எந்த மனிதனுக்கும் அஞ்ச மாட்டோம்.

நான், இலையுதிர்க் காலத்தில் ஒரு மரத்தில் இருக்கும் இலைக்குச் சமமாயிருக்கிறேன். இந்த இலை எந்தச் சமயத்திலும் கீழே உதிர்ந்து விடலாம். ஆசிரியர்களே, இப்பொழுது தளிர்த்த இளந்தளிர்கள். இந்தத் தளிர்களும் முற்றிய பறகு, காலப்போக்கில் உதிர்ந்து விடும். ஆனால், மாணவர்களாகிய நீங்களோ, பழுத்த இலைகளுக்குப் பதிலாகப் புதிய இலைகளைத் தளிர்க்கச் செய்யவல்ல கிளைகள் ஆவீர்கள்.

''சத்தியத்தில் நிற்பதென்பது, பஞ்சணையில் படுத்திருப்பதல்ல. உண்மையைக் கடைப்பிடிப்பதற்கு எவ்வளவோ தியாகம் செய்யவேண்டி இருக்கிறது; அதிலே எவ்வளவோ கஷ்டம்; எவ்வளவோ கட்டுப்பாடுகள்; இப்படியெல்லாம் இராமல், ஆனந்தமான காரியமாக மட்டும் இருக்குமானால், அதிலே இவ்வளவு அழகுக்கு இடமில்லை. வானமே இடிந்து தலையில் விழுவதாயிருந்தாலும், நாம் உண்மையைக் கடைப்பிடித்து ஒழுக வேண்டும்''.

எந்தப் பெரிய செயலை வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளுங்கள். அதைச் சாதிப்பதற்கு எத்தனைப் பேர் முன்வருகிறார்கள் என்பது முக்கியமல்ல; எத்தகைய உள்ளப் பண்பு வாய்ந்தவர்கள் முன்வருகிறார்கள் என்பதே இறுதியில் வெற்றியை நிர்ணயிக்கும் அம்சமாகும். உலகத்தில் மகத்தான செயல்களைச் சாதித்த பெரியார் அனைவரும் எப்போதும் தனித்து நின்றே போராடி இருக்கிறார்கள்''.

எண்ணிக்கை உயர்ந்தால் பலம் அதிகரிக்கிறது என்று எண்ணி, கோழைகள் மகிழ்ச்சி அடைகிறார்கள்; ஆனால், தீர நெஞ்சு படைத்தவர்களோ, போர் புரிவது ஒன்றிலேயே நம்பிக்கை வைத்து, அதிலேயே திளைக்கிறார்கள். நீங்கள் ஒருவராய் இருந்தாலும் சரி, பலராய் இருந்தாலும் சரி, அது முக்கியமல்ல; அதனால், பலமோ பலக்குறைவோ ஏற்பட்டுவிடாது; உள்ளத்தில் தீரமுடைமையே 'உண்மையான தீரம்; மற்றவை யாவும் போலி.

எப்படிக் கருதினாலும், பள்ளிகளும், கல்லூரிகளும் புனிதமான இடங்கள் அல்லவா? அங்கே புனிதமற்ற, இழிவான எந்தச் செயலுக்காவது இடமுண்டோ? பள்ளிகளும், கல்லூரிகளும் தொழிற்சாலைகள்-ஆங்கே சிறந்த, பண்புவாய்ந்த மனிதத்தன்மை என்னும் அரிய பொருள் உற்பத்தி செய்யப்படுகிறது.

இசை எனக்குச் சாந்தி அளிக்கிறது. ஏதாவது ஒரு விஷயத்தைப் பற்றி நான் பெரிதும் பரபரப்படைந்திருந்த காலத்தில், சங்கீதம் என் மனதுக்கு உடனே அமைதியை அளித்ததுண்டு.

புகழுரை ஒன்றே உண்மையான அன்பைக் காட்டி விடாது. தொண்டின் மூலமே அதை நாம் காட்டலாம். ஆத்ம சுத்தியே உண்மையான தொண்டு செய்வதற்கு முதற் படியாகும்; இன்றியமையாத நிபந்தனையும் ஆகும்.

**தொகுப்பு: பி. வி. கிரி**

## பார்த்தோம் படித்தோம்!

1.9.88 இதழில் வ.உ.சி.யின் வாழ்க்கைக் குறிப்பு, வருங்கால இளைஞர்கள் தியாக உணர்வு பெறவும், தேசிய இயக்க வளர்ச்சி பெறவும் வழிகோலுகிறது.

நா. அருணாசலன்,
கண்டவராயன்பட்டி,
(பசும்பொன்முத்துராமலிங்கம் மாவட்டம்)

நமது பிரதமரின் தமிழக வருகை குறித்துத் தந்துள்ள நிகழ்ச்சித் தொகுப்பு அருமை. மேலும் தியாக செம்மல் கேசவப்பிள்ளை, வ.உ.சி; டாக்டர் ராதாகிருஷ்ணன் ஆகியோர் பற்றிய செய்திகள் பயனுள்ளவையாக இருந்தன.

—எஸ்.பி.சந்தானராஜ,
கோபால்
களப்பாள்,

டாக்டர் சிவஅரசி முத்துக் காளத்தியின் 'உணர்வுகள் விழித்த போது' கதையும், படமும் அருமை.

எஸ். பிரபாகரன்,
மேல்பானந்தல்,
(தெ.ஆ.மாவட்டம்)

தியாகச் செம்மல் கேசவப் பிள்ளை போன்ற மாமனிதர்களின் வரலாறுகள் இதுவரை எங்களுக்குத் தெரியாமலே இருந்தன. தமிழரசு தியாகச் சுடர்களை அவ்வப்போது எடுத்துச் சொல்வது அருமையினும் அருமை!

—அரிமா. பூபாளம் ப.
முருகேசபாண்டியன்
கரப்பாடி,
(கோவை மாவட்டம்)

கேசவப்பிள்ளை வரலாறு படித்தேன். அவர் பெருமை, வட ஆர்க்காடு மாவட்டத்திற்கும் பெருமை. கேசவப்பிள்ளை போல வருங்காலச் சந்ததியினர் பாடுபட வேண்டும்.

தா. பத்மாவதி,
செதுவாலைக் கிராமம்.

1.9.88 இதழ் முகப்பு நன்றாக இருந்தது. தியாகச் சுடர்களின் வாழ்க்கைக் குறிப்புகள் பயனுள்ளவையாக இருந்தன.

—பி.ரமேஷ்
வந்தவாசி,
(வ.ஆ.மாவட்டம்)

பிரதமர் அவர்களின் தமிழகச் சுற்றுப் பயணம் பற்றிய 'கவர் ஸ்டோரி' கட்டுரை எங்களை மகிழ்ச்சிக்குள்ளாக்கியது.


—பி.கோவிந்தசாமி,
பேதாதம்பட்டிபுதூர்,
(தருமபுரி மாவட்டம்)

'தமிழகத்தை முன்னேற்ற ஆதரவு தாரீர்' என்னும் பிரதமர் அவர்களின் வேண்டுகோள், ஏழை எளிய மக்களின் கண்ணீரைத் துடைக்கக்கூடிய நம்பிக்கை.

எஸ்.கதிர்காமன்,
பி. வேலாங்குளம்,
(பசும்பொன்முத்துராமலிங்கம் மாவட்டம்)

# நற்காலம்

## — பேரறிஞர் அண்ணா



உலக உத்தமர் காந்தி அடிகளின் பிறந்த நாள் நாடெங்கும் நன்னாளாகக் கொண்டாடப்படுகிறது. அவரவர் தத்தமக்கு விருப்பமான முறையில் காந்தி அடிகளுக்குத் தமது அன்பினைக் காணிக்கையாக்கி அளிக்கின்றனர். அவருடைய திருவுருவப் படத்திற்கு மாலைகளிட்டும், அவர் புகழ்பற்றிய பாடல்களை இசைத்தும், பஜனை நடத்தியும், நூற்புத் தொண்டாற்றியும், சேரிகளைத் திருத்தும் பணிபுரிந்தும் இந் நாளைக் கொண்டாடுகின்றனர்.

அவர் ஓர் தூயவர், நமது மார்க்கத்தின் மாசு துடைத்திட வந்த மகான் என்பாரும்,

அவர் ஓர் விடுதலை வீரர், நமது நாட்டு அடிமைத் தளைகளை உடைத்தெறிந்த அஞ்சாநெஞ்சினர் என்பாரும்,

அவர் ஓர் வேதாந்தி, பழைய தத்துவம் பலவற்றுக்குப் புதிய விளக்கமளித்தவர் என்பாரும்,

அவர் ஓர் சமதர்மவாதி, ஏழை பங்காளர், ஏழைகள் புது வாழ்வு பெற வழி வகுத்தவர் என்பாரும்,

அவர் கிராம ராஜ்யம் அமைத்திட முனைந்தவர் என்பாரும், இதுபோல, அவரிடம் அவரவர் கண்டவற்றினைக்கொண்டு அளவிட்டு, வியந்து பாராட்டுவோர் பல்வேறு வகையினர் உளர். இவர்களில், எவருடைய பார்வையில் முழு காந்தியடிகள் தெரிகிறார் என்பது, காலமெல்லாம் ஆராய்ந்தறிந்து கொள்ள வேண்டிய ஒரு பிரச்சினையாகும். காரணம், ஒரு தனிமனிதர் என்ற முறையிலே மட்டும் கவனிக்க வேண்டியவர் அல்லர்; அவர் காலத்தின் சின்னம்; ஓர் எழுச்சியின் அடையாளம்; ஒரு மறுமலர்ச்சியின் உருவகம்.

அரசியல் கண்ணோட்டத்துடன் மட்டும் திருப்தி அடைய விரும்பினால் அவருடைய அறப்போர் மாண்பினை மட்டும் வியந்து பாராட்டுவதுடன் இருந்துவிடத் தோன்றும்.

ஆனால் அரசியல் துறையிலே மட்டும் அரும்பெரும் வெற்றி பெற்று, மற்ற துறைகளிலே ஈடுபடாதிருந்தவர் அல்லர் அவர்; எல்லாத் துறைகளிலும் தமது முத்திரையைப் பொறித்துச் சென்றவர்; எல்லாத் துறையினரும், எமக்காகவே காந்தி அடிகள் வாழ்ந்தார், எமக்காகவே பணி புரிந்தார் என்று சொந்தம் கொள்ளத்தக்க முறையிலே, அவருடைய வாழ்க்கையும் தொண்டும் அமைந்திருந்தன.

இன்று, அவருடைய பிறந்த நாள், எல்லாத் துறைகளிலே உள்ளவர்களாலும் கொண்டாடப்படுவதற்கான காரணம் இதுவே. அவர் ஒரு நாட்டின் காலம்; ஒரே ஒரு துறைக்கு அல்ல; எல்லாத் துறைகளுக்கும் ஒரு திருப்பத்தை, ஒரு புதிய பொலிவை, வலிவைக் கொடுத்தவர்.

ஒரு நாட்டின் முன்னேற்றம் ஏதோ ஒரு துறையிலே மட்டும் பெறப்படுகிற வெற்றியைப் பொறுத்தது அன்று. எல்லாத் துறைகளிலும் வெற்றி காண வேண்டும். அவைகளில் ஒட்டு மொத்தத்தைக் கொண்டே, அந்நாடு முன்னேற்றம் அடைந்திருக்கிறதா என்ற கணக்குப் பார்க்க வேண்டும். ஒரு நாட்டின் வரலாற்றிலே அவ்விதமான ஒரு கணக்கு, அடிக்கடி கிடைக்காது; ஒரு நூற்றாண்டுக்கு ஒரு முறை கிடைக்கும் என்றும் கூறிவிட முடியாது. அந்தக் கணக்கு, இந் நாட்டுக்குக் காந்தி அடிகள் வடிவத்திலே கிடைத்தது. எனவேதான், இந்நாள் ஒரு மாபெரும் தலைவரின் பிறந்த நாளாக மட்டுமின்றி, ஒரு நாட்டுக்குக் கிடைத்த 'நற்காலம்' என்ற முறையிலே சிறப்பும் பெறுகிறது.

### தமிழர்கள் - தமிழ்மொழி

'இந்த டிரான்ஸ்வால் கிளர்ச்சியில் தமிழர்கள் செய்த தொண்டுபோல வேறு எந்த இந்திய வகுப்பினரும் செய்யவில்லை. என் நன்றியை அவர்களுக்குத் தெரிவிப்பதற்காகவே நான் அவர்கள் மொழியை ஊன்றிப் படிக்கவேண்டும். இந்தியா முழுவதும் ஒருமைப் பாடடைய வேண்டும் என்றால் தமிழ்நாட்டுக்கு வெளியிலுள்ளவர்கள் தமிழ் மொழியை விரும்பிக் கற்க வேண்டும்'.

—காந்தியடிகள்

'மாடர்ன் ரிவ்யூ' (கல்கத்தா)

12.5.1910

# மாநில முதன்மைக் கணக்காயர் அலுவலகம்
( கணக்கு மற்றும் பணிவரவு )
சென்னை - 18.

## ''தமிழக அரசு ஊழியர்கள் கவனத்திற்கு''

தமிழக அரசு ஊழியர்களின் பொது வருங்கால வைப்பு நிதியின் 1987-88ஆம் ஆண்டிற்கான கணக்கு அறிக்கைகள் (GPF அக்கவுண்ட் ஸ்லிப்) அனுப்பப்பட்டு வருகின்றன என்பதையும், அவை 1988-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் இறுதிக்குள் உங்களுக்கு அனுப்பப்பட்டுவிடும் என்பதையும் மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறோம். இந்தக் கணக்கு அறிக்கைகள், பிப்ரவரி மாதம் 1988-ஆம் ஆண்டு நீங்கள் பணி புரிந்த அலுவலகங்களுக்கு அனுப்பப்பட்டு வருகின்றன.

கணக்கு அறிக்கைகளை மிக்க கவனத்துடன் எந்தவிதக் குறைபாடும் இல்லாமல் தயாரிக்கத் தேவையான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எனினும், தவிர்க்க இயலாத காரணங்களால் குறைகள் காணப்பட்டால், சம்பளப் பட்டியல் விவரங்களுடன், தங்கள் அலுவலக அதிகாரிகள் மூலமாகக் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதவும்:-

"திரு எஸ். நடராஜன்
கணக்கு அலுவலர்,
எப்.எம். ஐ. பிரிவு, (FMI Section)
மாநில முதன்மைக் கணக்காயர் அலுவலகம்,
261, அண்ணா சாலை, சென்னை-600 018.''

என்றும் தங்களுக்காகப் பணிபுரிய காத்திருக்கிறோம்.

''தங்கள் பொது வருங்கால வைப்புநிதியின்
''நியமனப் பத்திரம்" (நாமினேஷன்)
தாக்கல் செய்து விட்டீர்களா ?

சு. நடராஜன்
(ஒ-ம்)
கணக்கு அலுவலர்.



# காந்தியடிகளின் தமிழக வருகை

அண்ணல் காந்தியடிகள் 14 தடவை தமிழ் நாட்டிற்கு வருகை தந்திருக்கிறார்.

*(1) 1896* அக்டோபர் *11-16* முதல்தடவை சென்னைக்கு வந்தார். பச்சையப்பன் மண்டபத்தில் சொற்பொழிவு.

*(2) 1915* தென்னாப்பிரிக்காவிலிருந்து இந்தியா திரும்பியபின் சென்னைக்கு வந்தார். ஏப்ரல் *21*-மே *28*, தில்லையாடி கிராமத்திற்குச் சென்று வள்ளியம்மையின் உறவினர்களைச் சந்தித்தார்.

*(3) 1916* பிப்ரவரி சென்னைக்கு வருகை. சுதேசி இயக்கப் பிரசாரம்.

*(4)* அதே ஆண்டு மீண்டும் ஏப்ரலில் சென்னை வந்தார்.

*(5) 1919* மார்ச் *16-30* ரௌலட் சட்டத்தை எதிர்க்க சாத்விகஒத்துழையாமை எண்ணம் சென்னையில் அவருக்கு உதித்தது. இந்தத் தடவைதான் பாரதியார் மகாத்மாவை முதன் முதலில் சந்தித்தார். காந்திக்கு ராஜாஜியின் நட்பு கிடைத்ததும் இந்தச் சமயத்தில்தான்.

*(6) 1920* ஆகஸ்டு *12* முதல் செப். *10* வரை கிலாபத் இயக்கத்திற்கு ஆதரவு தேட திருமதி முகம்மதுஅலி, ஷவ்கத் அலியுடன் சென்னை வந்தார்.

*(7) 1921* செப். *14*—அக். *3* மதுரையில் காந்தியடிகள் ஒரே ஆடை அணியும் விரதத்தை மேற்கொண்டார்.

*(8) 1925* மார்ச் வைக்கம் சத்யாகிரகத்திற்கு ஆசி அளிக்கச் செல்கையில் தமிழகம் வருகை.

*(9)* வைக்கத்திலிருந்து திரும்பியபோதும் வருகை.

*(10) 1927* அக்டோபர் இலங்கை செல்லும் வழியில் சென்னை வருகை.

*(11) 1927* டிசம்பர் இலங்கையிலிருந்து திரும்புகையில் சென்னையில் நடைபெற்ற காங்கிரஸ் மகாசபைக் கூட்டத்தில் கலந்து கொள்ள வந்தார்.

*(12) 1934* ஜனவரி முதல் மார்ச் வரை தமிழகத்தில் ஹரிஜன யாத்திரை. *112* ஊர்களுக்குச் சென்றார்.

*(13) 1937* மார்ச் *26* பாரதீய ஸாகித்ய பரிஷத் கூட்டத்திற்கு வந்தார்.

*(14) 1946* ஜனவரி சென்னையில் தக்ஷிண பாரத இந்திப் பிரச்சாரசபை வெள்ளி விழாவுக்குத் தலைமை வகித்தார். மதுரை, பழநி ஆலயங்களுக்குச் சென்றார்.

ஆதாரம்:

**அண்ணல் காந்தி மலரஞ்சலி.**

## அரிய உண்மை

காந்தியடிகளின் வாழ்க்கை கடவுள் தியானத்தில் அழுந்தி அனுபவித்துக் கொண்டிருந்த வாழ்க்கை. அந்த அனுபவம் குழந்தைகளிடத்திலுள்ள பிரீதியிலும், உல்லாசமான பேச்சாலும் உலகத்துக்குத் தெரிய வந்தது.

எவ்வளவோ கஷ்டங்களுக்கு உள்ளாயிருந்தும் வாழ்க்கையில் ஒரு ஆனந்த ஒளி விட்டுக் கொண்டிருந்தது அடிகளுக்கு; காரணம், இறைவனுடைய நாமத்திலும் தியானத்திலும் அவரது உள்ளம் தோய்ந்திருந்ததுதான்.

பெரியாழ்வார், பட்டினத்தடிகள் முதலிய ஞானிகளுடைய வாழ்க்கை இலட்சியம் காந்தியடிகளுக்குக் கிட்டியது. நம்முடைய வாழ்க்கைக்கு ஒளிதர ஒரு அரிய உண்மை கிடைத்தது.

—டி.கே.சி.



# தமிழ் இலக்கியங்கள் கூறும் சட்ட நெறிகள்

காரைக்குடி ஓ. எம். சிராஜ்

'இலக்கு' என்ற சொல்லும், 'இயம்' என்ற சொலலும் புணர்ந்து தான் 'இலக்கியம்' என்ற சொல் பிறந்துள்ளது. 'இலக்கு' என்றால் குறிக்கோள். 'இயம்' என்றால் இயம்புதல். இவ்வாறு இலக்கினை இயம்புவதையே நாம் இலக்கியம் என்று கூறுகிறோம். இந்த இலக்கியங்கள் பல அறநெறிகளை இயம்புகின்றன. அந்த அறநெறிகளில் எண்ணற்ற சட்ட நெறிகளை நாம் காணலாம். 'சட்டம்' என்பது, "நியாயம் செலுத்தும் முறையில் அரசால் ஒப்புக்கொள்ளப்பட்டு நடைமுறையில் இருக்கும் கொள்கைகளின் தொகுதி" என்று 'சாமண்ட் (SALMOND) எனும் சட்ட மேதை குறிப்பிடுகிறார்.

**திருக்குறள்**

திருக்குறளை ஒரு நீதி இலக்கியம் என்றே டாக்டர் மு.வ. அவர்கள் குறிப்பிடுகிறார்கள். வழக்கினை ஆராய்ந்து எவரிடமும் கண்ணோட்டம் காட்டாமல், நடுநிலைமை தவறாது, தேர்ந்து முடிவு செய்தலே முறை செய்தல் எனபதை,

"ஓர்ந்து கண்ணோடாது
இறைபுரிந்து யார்மாட்டும்
தேர்ந்து செய்வதே முறை"

என்று வள்ளுவர் குறிப்பிடுகிறார்.

இன்றைய சட்டநூல்களிலும் கூட இவ்வளவு திட்பமாக 'Administration of Justice' என்று சொல்லப்படும் "முறை செய்தல்" கூறப்படவில்லை. வள்ளுவர் "சமன் செய்து சீர்தூக்குங்கோல் போல் அமைந்து ஒருபால் கோடாமை சான்றோர்க்கு அணி" என்கிறார். இக்கருத்தை நெஞ்சில் நிறுத்தியே இன்றைய நீதிபதிகள் செயல்பட்டு வருகின்றனர்.

அரசு தன் வலிமைகொண்டு மக்களின் உரிமைகளை நீதிமன்றங்கள் வழியாகப் பாதுகாத்து, முறையான வாழ்வைச் சமுதாயத்தில் நிலை நிறுத்துகிறது. இதையே முறை செய்தல் அல்லது நீதிவழங்குதல் என்று நாம் கூறுகிறோம். வள்ளுவரோ "நீதி வழங்குதலை". இறைமாட்சி என்று குறிப்பிடுகிறார்.

"முறைசெய்து காப்பாற்றும்
மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும்"

என்று இறைமாட்சியில் அவர் கூறுகிறார்.

மனிதக் கொலையைச் சட்டம் தடுக்கிறது. ஆனால் இலக்கியநெறிகளோ உயிர்க் கொலையே கூடாது என்கிறது. மது அருந்துபவர்களைச் சட்டம் தடுக்கிறதோ இல்லையோ, இலக்கிய நெறிகள் தடுக்கின்றன. திருக்குறளில் பல அதிகாரங்களிலும் சட்டநெறிகளின் படிமங்களை நாம் காணலாம்.

**பெரியபுராணம்**

பெரியபுராணத்தில் சேக்கிழார் "தருமம் தன் வழிச் செல்லும்" என்ற கருத்தையே அறிவுறுத்துகிறார். தற்போது Civil cases என்று கூறப்படும் உரிமை இயல் வழக்குகளில், வழக்காறு ஆவணங்கள், சாட்சி ஆகிய மூன்றும் முக்கியக் கூறுகளாகக் கருதப்படுகின்றன. இக்கூறுகளின் அடிப்படையில்தான் முடிவுகளும் வழங்கப்படுகின்றன. இந்த மூன்று கூறுகளும் பெரியபுராண காலந்தொட்டு போற்றப்பட்டு வந்தன என்பதை,

"ஆட்சியில் ஆவணத்தில்
அன்றி அயலார்தம்
காட்சியில்"

என்ற பெரியபுராணப் பாடலினால் நாம் அறியலாம். 'ஆட்சி' என்றால் இங்கே 'மரபு' என்று பொருள். 'காட்சி' என்றால் இங்கே 'Eve Witness' என்று கூறப்படும் சாட்சியம் என்று கொள்ளலாம்.

**சிலப்பதிகாரம்**

சிலப்பதிகாரமும், மதுரைக்காஞ்சியும் அக்காலத்தில் "அறங்கூறவையங்கள்" இருந்தன என்று கூறுகின்றன. சிலப்பதிகாரத்தில் கூறப்படும் வழக்குரை காதை இக்காலக் குற்றவியல் வழக்குகளுடன்ஒப்பிடத் தக்க நல்லதோர் இலக்கியச்சான்று. மன்னனிடம் நீதி கேட்க வந்த கண்ணகியானவள், 'புறாவின் உயிருக்குக் கருணை காட்டித் தசையை அரிந்து கொடுத்த சிபிச் சக்கரவர்த்தியும், தமது அரும்பெறல் புதல்வனை ஆழியின் மடித்த மனுநீதிச் சோழனும் வாழ்ந்த புகார் எனும் பதியினின்றும், நின் நகர் வந்து என் காற் சிலம்பு விற்றல் வேண்டி, நின் பாற் கொலைக்களப்பட்ட கோவலன் மனைவியான கண்ணகி என்பது என் பெயரே' என்கிறாள். பாண்டிய மன்னனோ "கள்வனைக் கோறல் கடுங்கோல் அன்று" என்கிறான். கண்ணகியோ தன் காற்சிலம்பை உடைத்துத் தன் கணவன் குற்றமற்றவன் என்பதை நிறுவுகிறாள். அம்மன்னன் அக்கணமே,

"பொன்செய் கொல்லன்
தன் சொற் கேட்ட
யானோ அரசன்? யானே கள்வன்!...
கெடுக என் ஆயுள்" எனக் கூறி வீழ்ந்து மடிகிறான். கோப்பெருந்தேவியும் அவன் காலடியில் வீழ்ந்து மடிகிறாள்.

இவ்வழக்குரை காதையினால் அக்கால மன்னர்கள் நீதி வழுவாது முறை செய்தனர் என்பதும், சட்டத்தின் முன் யாவரும் சமம் என்ற நெறி போற்றப்பட்டது என்பதும், சான்றுகளின் அடிப்படையில் நீதி வழங்கப்பட்டது என்பதும், ஊறுபாடுற்றவர்கள் பட்ட துன்பத்திற்கிணையான துன்பத்தை ஊறு விளைவித்தவரும் பட்டாகவேண்டும் என்ற அடிப்படையில் நீதி வழங்கப்பட்டது என்பதும், வாதிகளே மன்னரிடம் சென்று வழக்காடினர் என்பதும் புலனாகின்றன.

**மணிமேகலை**

'மணிமேகலை' என்னும் காப்பியத்தின் வாயிலாக "ககந்தன்" என்னும் மன்னன், பத்தினிப் பெண்டிர்தம் பின்புறம் போக்கிப் பிழை செய்த தம் மக்களிருவரை வாளோச்சிக் கொன்றான் என்ற செய்தியினை அறியும்பொழுது அம் மன்னன் மனுநீதிச் சோழனையும் விஞ்சினான் என நாம் உணர்கிறோம்.

**வளையாபதி**

இந்தியக் குற்றவியல் சட்டம் தண்டிக்கும் களவு, பொய், கொலை

முதலானவற்றை வளையாபதி என்ற காப்பியமும் கண்டிக்கிறது.

**குண்டலகேசி**

'நீதி வழங்குதல்' என்று சட்ட வியல் கூறப்படுவதை 'இறைமாட்சி' என்ற பொருளில் குண்டலகேசி கூறுகிறது.

**சீவகசிந்தாமணி**

'சீவகசிந்தாமணி'யில் புலால் உண்ணாமையையும், கொல்லாமையையும் போதிக்கும் போதகனாகச் சீவகனைச் சித்திரித்துள்ளார் திருத்தக்க தேவர்.

**சிறுகாப்பியங்கள்**

யசோதர காவியம், நீலகேசி போன்ற சிறு காப்பியங்களிலும் கொல்லாமைக் கோட்பாடு நெறி வலியுறுத்தப்படுகிறது.

**பாஞ்சாலி சபதம்**

பாரதியார் பாடிய 'பாஞ்சாலி சபதத்திலே இன்றைய நீதிமன்றங்களில் கருதுகை செய்யப்படும் Question of Law' என்று கூறப்படும் சட்டப பற்றிய வினாவையும், ''Question of Fact'' என்று கூறப்படும் பொருண்மை பற்றிய வினாவையும் நாம் காண்கிறோம். அதாவது 'சட்டம்' இடம் தருகிறதா என்பதை, 'சட்டம் பற்றிய வினாவும்', 'நடந்த உண்மை என்ன' என்பதை, 'பொருண்மை பற்றிய வினாவும்' கருதுகிறது.

பாண்டவர் பாஞ்சாலியைப் பணயம் வைத்துப் பகடையாடித் தோற்றுவிடுகின்றனர். அவளைச் சபைக்கு அழைத்து வருமாறு பாகனிடம் கட்டளையிடுகிறான் துரியோதனன். பாகனும் வந்து விவரங் கூறி பாஞ்சாலியைச் சபைக்கு அழைக்கிறான். அப்போது பாஞ்சாலியானவள்,

''வல்ல சகுனிக்கு மாண்பிழந்த
நாயகர்தாம்
என்னை முன்னே கூறியிழந்தாரா
தம்மையே
முன்னமிழந்து முடித்தென்னைத்
தோற்றாரா?
சென்று சபையில் இச்செய்தி
தெரிந்துவா-என்று
அப் பாகனிடம் கூறுகிறாள்.
மேலும்,
நாயகர் தாந்தமைத் தோற்றபின்
என்னை
நல்கு முரிமை அவர்க்கில்லை-
புலைத்
தாயத்தி லேவிலைப் பட்டபின்
என்ன
சாத்திரத் தாலெனைத் தோற்
றிட்டார்?, என்றும்
கூறி, மேலும்,
நிலைசாயப் புலைத் தொண்டு
சார்ந்திட்டால்—பின்பு
தார முடைமை அவர்க்குண்டோ?"

என்று கேட்கிறாள்.




நீதிபதிகள் கருதுகை செய்யும் சட்டம் பற்றிய வினாவையும், பொருண்மை பற்றிய வினாவையும் விளக்குவதற்கு இப்பாடல் சரியான ஓர் எடுத்துக்காட்டு.

**கம்பராமாயணம்**

கம்பராமாயணத்தில், மந்தரையின் போதனையால் மதிமயங்கிக் கைகேயி மஞ்சள் குங்குமம் இழந்த கதையைப் படிக்கும்பொழுது இக்காலத்தில் நிகழும் குற்றங்களான 'Abetment' என்று கூறப்படும் ''குற்ற உடந்தை', 'Crimi nal Conspiracy' என்று கூறப்படும் சதிக் குற்றம்'', 'Joint Criminal Liability' என்று கூறப்படும் ''கூட்டுக் குற்றப் பொறுப்பு,' ஆகிய ''குற்ற இயல் சட்டம்'' குறிப்பிடும் குற்றங்கள் நம் மனக் கண்முன் வருகின்றன.

கம்பராமாயணத்தில் இராவணன் தம்பியாகிய வீடணன், தன் அண்ணன், சீதையைக் கடத்திவந்து சிறைவைத்தது குற்றம் என இடித்துரைக்கிறான். இன்றையக் குற்றவியல் சட்டத்தில் 'Abduction என்று கூறப்படும் ''ஆட் கடத்துதல்'' 'Kidnapping' என்று கூறப்படும் ''கவர்ந்து கடத்துதல்'', 'Wrongful Confinement என்று கூறப்படும் ''முறையின்றிச் சிறைவைத்தல், ஆகியவைகள் கடுங்குற்றங்களெனக் கூறப்படுகின்றன என்பதை இராமாயணத்துடன் ஒப்பு நோக்கினால் இலக்கியங்கள் கூறும் அறநெறிகளைத்தான் சட்டமும் இன்று கூறுகிறது என்பதை நாம் அறியலாம்.

வாலியானவன் தன் தம்பி மனைவியுடன் Adultry' என்று கூறப்படும் ''பிறன் மனைப் புணர்ச்சிக் குற்றத்தை''ச் செய்ததாலேதான் இராமபிரானால் கொல்லப்படுகிறான். தவிர சுக்ரீவனுக்குக் கொடுக்கப்பட்ட 'Promise' என்று கூறப்படும் வாக்குறுதியைக் காப்பாற்றுவதற்காகவே, மறைந்திருந்து இராமபிரான் வாலியின்மீது கணை செலுத்தினார் என இலக்குவன் கூறுகிறான். இதி





## நம்புவீர்களா?

''காந்திஜி வெளி அதிகாரத்தின் ஆதரவு எதுவும் இன்றி மக்களுக்குத் தலைவராக வந்தவர். சூதுவாதுகளும் தந்திரங்களும் இன்றித் தம்முடைய சொந்த ஒழுக்கத்தின் சக்தியையே துணையாகக் கொண்டு அரசியலில் வெற்றி கண்டவர். என்றும் எக்காலத்தும் பலாத்காரத்தைப் புறக்கணித்த வீரர். விவேகமும் தன்னடக்கமும் மிகுந்து உறுதியும், அசைக்க முடியாத மன வலிமையும் நிறைந்து, மக்களின் க்ஷேமத்துக்காகத் தம்முடைய சக்தி முழுவதையும் அர்ப்பணம் செய்தவர். ஐரோப்பாவின் மிருக பலத்தை எதிர்த்து வெற்றி பெற்று எக்காலத்தும் உன்னத ஸ்தானத்தை அடைந்தவர்.

—ஐன்ஸ்டீன்

---

லிருந்து ' Promise என்று கூறப்படும் வாக்குறுதியை அக்கால இலக்கியம் பெரிதும் போற்றியது என்பதை நாம் அறியலாம்.

### நரைமுடித்து முறைசெய்தவன்

''பட்டறிவுமிக்க முதியோரே நன்கு நீதி வழங்குவர்'' என்று மக்கள் நம்பியிருந்த காலத்தில், வயதில் இளைய மன்னனொருவன் நரைமுடித்து முதியவர்போல் வேடந்தாங்கி வந்து எல்லோரும் பாராட்டத்தக்க வகையில் வழக்கொன்றுக்கு நீதி வழங்கினான் என்றும், அமமன்னனே ''நரை முடித்து முறை செய்த கரிகால் பெருவளத்தான்'' என்றும், சங்கப் பாடல் ஒன்று கூறுகின்றது.

அந்த ''நரை முடித்து முறை செய்த கரிகால் பெருவளத்தான்' என்ற மன்னன் தோற்றுவித்த மரபைப் பின்பற்றித்தான் ஆங்கிலேய நீதிபதிகள் தங்கள் அறிவின் முதிர்ச்சியைக் காட்டுவதற்காகத் தங்கள் தலைகளிலே 'WIG' என்று கூறப்படும் பொய் முடியான வெண்முடியைத் தாங்கி வருகின்றனரோ என்ற எண்ணம் இக்கால இளைஞர்களின் உள்ளங்களில் எழுந்துள்ளன.

### சட்டத்தின் முன் எல்லோரும் சமம்

நக்கீரர் எனும் பெரும்புலவர் இறைவன் இயற்றிய பாடலொன்றில் குற்றமிருப்பதாக வாதாடும் பொழுது, அப்பாடலியற்றிய இறைவனே அவர் முன் தோன்றிய போதும் ''நீரே முக்கண் முதல்வராகி உமது நெற்றிக்கண் திறந்து எம்மைச் சுட்டெரித்தாலும் குற்றம் குற்றமே", என்று வாதிட்டார்.

''வள்ளுவர்செய் திருக்குறளை மறுவற நன்குணர்ந்தோர் உள்ளுவரோ மனுஆதி ஒரு குலத்துக்கொரு நீதி'' என்று மனோன்மணியம் சுந்தரம்பிள்ளையவர்கள் பாடினார். இவ்விலக்கிய வரிகளில் ''சட்டத்தின் முன் எல்லோரும் சமம்'' எனும் சட்டவியல் கோட்பாடு மிளிர்வதை நாம் காணலாம்.

### பழைய நீதி நூல்கள் மற்றும் முதுரைகள்

அறநெறிச்சாரம், நான்மணிக்கடிகை, இன்னா நாற்பது, இனியவை நாற்பது, திரிகடுகம், நாலடியார், பழமொழி போன்ற பல்வகை நீதிநூல்களும், மூதுரைகளும் நீதி இயம்புகின்றன.

''பாருக்குள்ளே சமத்தன்மை-
தொடர்
பற்றுஞ் சகோதரத்தன்மை''

எனவும்,

'சாதிகள் இல்லையடி பாப்பா-
குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொலல் பாவம்'


எனவும், மாக்கவி பாரதி பாடியுள்ள கருத்துக்களையே இன்று 'இந்திய அரசமைப்புச் சட்டமும்' தன் முகப்புரையிலேயே (Preamble) விளம்புகிறது.

### அறத்தின் ஆணை

ஆக, இலக்கியங்கள் கூறும் அறநெறிகளின் அடியொற்றித்தான் இன்றைய சட்ட நெறிகள் பிறந்துள்ளன. அறிவுறுத்தி நல்வழிப்படுத்துகிறது அறம். அச்சுறுத்தி நல்வழிப்படுத்துகிறது சட்டம். அளவறிந்த சான்றோர் கூறுவது அறமாவதுபோல, அரசு முறையறிந்தோர் கூறுவது சட்டமாகிறது, சட்டத்திற்கும் அரசிற்கும் நெருங்கிய தொடர்புண்டு. அரசின்றிச் சட்டம் இயங்காது. சட்டமின்றி அரசும் நிலைக்காது. 'சட்டம்' என்பது அரசின் ஆணை மட்டுமல்ல, அறத்தின் ஆணையுமாகும் என்று சட்டவியல் கூறுகிறது. எப்படிக் கரையில்லாததொரு நீரோட்டம் நதியாக முடியாதோ, எப்படி வரப்பில்லாததொரு நிலம் வயலாக முடியாதோ, அதே போன்று சட்டமில்லாத வாழ்வு சமுதாய வாழ்வாகாது. 'Adultry' என்று கூறப்படும் பிறன் மனைப் புணர்ச்சியைத்தான் குற்றமென இன்றைய குற்றவியல் சட்டம் கூறுகிறது. ஆனால் கம்பராமாயணம், திருக்குறள் போன்ற இலக்கியங்கள் பிறர்மனையை மனத்தால் நினைத்தலையே குற்றம் என இயம்புகின்றன. சட்டநெறிகள் குற்றம் செய்தபின்னர்தான் தண்டிக்கின்றன. ஆனால் இலக்கிய நெறிகள் குற்றத்தை மனதில் எண்ணும் பொழுதே கண்டிக்கின்றன. 'Mensrea' எனப்படும் குற்றமனமே கூடாது என்கிறது இலக்கியம்.

இவ்வாறு இலக்கியங்கள் கூறும் அறநெறிகளானவை சட்ட நெறிகளையும் விஞ்சி நிற்கின்றன. சட்டம் கூறும் சட்டநெறிகளையும், இலக்கியங் கூறும் அறநெறிகளையும் ஒப்பு நோக்கினால் இலக்கிய நெறிகள் பரந்தும், விரிந்தும், செறிந்தும், ஆழமிக்கனவாயுமிருப்பதை நாம் அறியலாம்.







# ராமேஸ்வரம் தீவுக்கு





# ரூ.5 கோடியில் மாஸ்டர் பிளான்

**ரா**மேஸ்வரம் தீவு வளர்ச்சிக்கு ரூ. 5 கோடி செலவில் மாஸ்டர் பிளான் போடப்பட்டுள்ளது.

நான்கு பக்கமும் கடல் அலைகளால் தாலாட்டப்பெறும் அற்புதத் தீவு ராமேஸ்வரம். இந்தத் தீவை இந்திய நிலப்பகுதியில் இருந்து 2 கிலோமீட்டர் தூரத்திற்குக் கடல் பிரிக்கிறது.

ராமேஸ்வரம் தீவில் பாம்பன், தங்கச்சிமடம், தனுஷ்கோடி போன்ற ஊர்களும் பல சிறு குடியிருப்புகளும் உள்ளன. இங்கு அமைந்துள்ள ராமநாதசுவாமி கோயில் சரித்திரப்புகழ் பெற்றது.

இங்கு வாழும் மக்கள் வடநாட்டு யாத்ரீகர்களை நம்பியே உள்ளனர். இங்கு ஒவ்வொரு மாதமும் ஒரு இலட்சத்து 10 ஆயிரம் பேர் வருகிறார்கள். ஜனவரி, மார்ச், மே, ஜூன், ஜூலை, அக்டோபர் மாதங்களில் அதிகம் பேர் வந்து செல்கிறார்கள்.

பலமணி நேரம் ரயிலுக்கு காத்திருந்து பலவித அசௌகரியங்களை ஏற்றுக்கொண்டுதான் இவ்வளவு பேர் வந்து செல்கிறார்கள். இங்கு வரக்கூடிய சுற்றுலா பயணிகளுக்கும், பக்தர்களுக்கும் நல்ல வசதிகளைச் செய்தால் பக்தர்களின் கூட்டம் அலைமோதும். இதைக் கருத்தில் கொண்டே 1974ல், அன்றைய பிரதமர் இந்திராகாந்தி 'கடலைக் கடக்க ரோடு பாலம் அமைக்கும் திட்டத்திற்கு' அடிக்கல்நாட்டினார். பலவிதக் காரணங்களால் பால வேலைக்கு அவ்வப்போது தடை ஏற்பட்டாலும், 20 கோடி ரூபாய் செலவில் இன்று பெரும்பாலான பணி முடிக்கப்பட்டு, பாலம் கம்பீரமாக உயர்ந்து நிற்கிறது.

இந்தப்பாலம் திறக்கப்பட்டவுடன் ராமேஸ்வரம் தீவிற்கு வந்து போகக்கூடிய மக்களின் எண்ணிக்கை பல மடங்கு உயரும். அவர்களைச் சிறப்பாக வரவேற்கும் நிலையில் ராமேஸ்வரத்தைத் தயார் செய்ய வேண்டும். நீண்ட காலத் திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டும். அதோடு இப்பகுதிக்கு வரும் யாத்ரீகர்கள் கோயிலுக்குச் சென்றுவிட்டு கண்டுகளிக்க சில உல்லாசப் பகுதிகளை ஏற்படுத்த வேண்டும்.

தற்போது மாநில அரசு ரூ. 5 கோடி செலவில் ஒரு பெருந்திட்டம் தீட்டியுள்ளது. இதில் பேருந்து நிலையம, தங்கும் விடுதிகள், நவீன கழிப்பறைகள், ரோடுவசதி, குடிநீர், மின்விளக்கு போன்ற அடிப்படை தேவைகளுக்கு இந்தத் திட்டம் போடப்பட்டுள்ளது.

இதில் பேருந்து நிலையம் அமைக்க ரூ. 0.25 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது. விரைவில் மற்ற பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு எதிர்பார்க்கப்படுகிறது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சார்பில் வளைகுடாப்பகுதியில் 'பீச்' அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

—அ. மருது.

# பால் உபபொருட்களின் பயன்கள்

**டாக்டர் சி. ஆர். லட்சுமி நரசிம்மன்**

பால் சத்துக்கள் மிகுந்த பானம். தற்போது நம்நாட்டில பால்வளம் பெருகி வருகின்றது. பால் உற்பத்தியில் அகில உலக அளவில் மூன்றாவது இடத்தில் நாம் இருக்கின்றோம். உற்பத்தியாகும் பால் பெரும்பாலும் அப்படியே பானமாகப் பருகுவதில்லை. காபி, டீ, பானங்களாகவும், தயிர், மோர் வெண்ணெய், நெய் போன்ற இதர பொருட்களாகவும் உபயோகிக்கிறோம். சுவையான இனிப்புப் பண்டங்கள் செய்யவும், ஐஸ்கிரீம் தயாரிக்கவும் பால்பயன் படுத்துகிறோம். நேரே பானமாகப் பருகாமல் இவ்வாறு பலவகைப் பொருட்களாக மாற்றி உபயோகிக்கும் போது, பல தரப்பட்ட உபபொருட்கள் பாலிலிருந்து கிடைக்கின்றன. பலவற்றை உபயோகித்தாலும் ஒரு சிலவற்றை வீணாக்குகிறோம். உபயோகப்படுத்தக் கூடிய பொருட்களை வீணாக்குவதன் மூலம் அதில் உள்ள சத்துப் பொருட்களும் வீணாகின்றன. இந்தச்சத்துப் பொருட்களைப் பெற்று, நமது உணவுக்கும், உடல் வளர்ச்சிக்கும் தேவையானவற்றைப் பெறுவதோடு, சுற்றுப்புறச் சூழலும் கெடாமல் பாதுகாக்கலாம். இந்த அடிப்படையில் உபயோகப்படுத்தக்கூடிய சில உபபொருட்களைப் பற்றி விரிவாகக் காண்போம்.

பாலைத் தயிராக உறைய வைத்து உபயோகிக்கும்போது, தயிரின் ஊடே சிறிது நீர்ப்பாகம் இருக்கும். இதனை ஆங்கிலத்தில் ( whey ) 'வே' எனக் கூறுவர். இது பாலை மூலப் பொருளாகக் கொண்டு இயங்கும் சீஸ், பனீர், கேஸின் போன்ற தொழிலகங்களில் உபபொருளாகக் கிடைக்கும். இந்த நீர்ச்சத்துக்கள் நிறைந்ததால், பயிர்களுக்குப் பாய்ச்சுவதால் கூடுதல் விளைச்சல் பெறலாம். குறிப்பாக மக்காச் சோளம் போன்ற தானியப் பயிர்கள் நன்கு செழித்து வளர்வதோடு, பயிரின் தன்மையிலும் கூடுதல் நன்மை கிடைக்கிறது என அறியப்பட்டுள்ளது. தொடர்ந்து பல ஆண்டுகள் பாயும் நிலங்களில் மணிச்சத்து மற்றும் சாம்பல் சத்து கூடுவதைக் காணமுடிந்தது. கால் நடைகளுக்கும் இந்தப் பொருள் (வே) ஏற்ற உணவாகும். புரதம் கலந்த நிலையில் இதனைக் கால் நடைகளுக்கு உணவாகக் கொடுப்பதால் அவை நல்ல வளர்ச்சியைப் பெறுகின்றன. சிறிது புளிப்பு (காடி) ஏற்றிய நிலையில், இந்த 'வே' அம்மோனியா வாயுவுடன் கலந்து நிலத்திற்கு அளிக்கும் போது யூரியாவை விடச் சிறந்த உரமாகப் பலனளிக்கும்.

மற்றும் ஈரமில்லாத குழந்தை உணவுப் பொருட்கள், பானங்கள், சூப் வகைகள், பேக்கரி தயாரிப்புகள், உறையவைத்த உலர்பொருட்கள், சீஸ் உணவு வகைகள், முதலானவற்றில் 'வே' நன்கு பயன்படுத்த முடியும். இதனைக் கொண்டு குலாப்ஜாமுன் மற்றும் சந்தோஷ் எனப்படும் புகழ்பெற்ற இனிப்புப் பண்டங்களும் தயாரிக்கலாம். குளிர்ந்த மற்றும் மது பானங்களில் கரைத்து உபயோகிக்கலாம். இத்தகைய பானங்கள் ரஷ்யாவிலும், ஐரோப்பாவிலும் பலராலும் விரும்பப்படுகின்றன.

'வே'யில் சர்க்கரைப்பொருள் மிகுந்துள்ளது. எனவே இதனைப் புளிக்கச்செய்து 'வைன்' எனப்படும் மது தயாரிக்கவும் செய்கிறார்கள்.

பேக்கரி தயாரிப்புக்களில் மொறு மொறுப்பு, நல்ல நிறம், மற்றும் வாசனை கிடைக்க 'வே' பயன்படுத்தலாம். 'வே' கலந்த ரொட்டி சத்துக்கள் நிறைந்ததாகக் கொள்ளப்படுகிறது. ஐஸ்கிரீம் தயாரிப்பில் 25வரை எளிதில் உபயோகித்து, கூடுதலான சுவையும் உண்பவருக்குத் திருப்தியும் ஏற்படுத்தலாம்.


'வே'யில் உள்ள லாக்டோஸ் எனப்படும் சர்க்கரைப் பொருளை மூலப்பொருளாகக் கொண்டு பல இரசாயன மாற்றங்கள் மூலம் மேலும் பல புதிய உபபொருட்களைப் பெற முடியும். இவற்றை உணவு தயாரிப்புக்கள், இனிப்புக்கள் புளிக்க வைத்தல் மற்றும் கெடாமல் காத்தல் போன்ற பலவற்றிலும் பயன்படுத்தலாம். கண்ணாடிகளுக்கு ரசம்பூசும் தொழிலிலும், பற்பசை தயாரிப்புகளிலும், மருந்துக்குப்பி (capsule) மற்றும் வில்லைகள் தயாரிப்புக்களிலும் பயன்படுத்தலாம்.

அடுத்து மோர், பாலில் இருந்து கிடைக்கும் மற்றொரு உபபொருளாகும். மோர் எளிதில் செரிக்கக் கூடியது. இதனைக் குளிர்பானமாகவும், ஐஸ்கிரீம் மற்றும் பேக்கரி தயாரிப்புக்களிலும் உபயோகிக்கலாம். மோர் திரவநிலையில் அல்லது உலரவைத்துப் பொடியாகவோ பயன்படுத்தலாம். கால்நடைத் தீவனங்களில் மோர் 3:1 பங்கு என்ற விகிதத்தில் உபயோகமாகும். உலர வைத்த பொடியைக்கொண்டு வளரும் கன்றுகளின் (மாடு, குதிரை, பன்றி) உணவுத் தேவையைச் சமாளிக்கலாம்.

மோர் கலந்த ரொட்டிகள் கொள்ளளவில் பெருகியும், வாசனை, மொறுமொறுப்பு, வண்ணம், பதம் இவை கூடியும், நாட்பட கெடாமலும் இருக்கும். மேலும் ரொட்டியை சிறு துண்டங்களாக அரியும் போதும் உடையாமலும், நீர் உறிஞ்சும் தன்மை கூடியும், சத்துக்கள் நிறைந்தும் இருக்கும்.

நெய்தயாரிக்கும் போது கிடைக்கும் கசடு சாக்லேட் சர்க்கரை இவற்றுடன்கலந்து சாக்லேட் பர்பி செய்யப்பயன்படும். இதுபோன்ற வேறு தின்பண்டங்கள் செய்யவும் உபயோகமாகும்.

இத்துறையில் தேவையான தொழில் நுட்பங்கள் ஏற்கெனவே அபிவிருத்தியடைந்துள்ள நிலையில் வீணாகும் உபபொருட்களை உரிய முறையில் பக்குவப்படுத்திப் பயன்படுத்துவதால், நமது வாழ்வு மேம்பாடு அடைவதுடன் சுற்றுப்புறச் சூழலும் கெடாமல் பாதுகாக்கப்படும்.



# அண்ணா மாவட்டத்தில் வளர்ச்சிப் பணிகள்



அண்ணா மாவட்டம், குஜிலியம் பாறை ஊராட்சி ஒன்றியம், லந்த கோட்டையில் கனரா வங்கியும், கால்நடைப் பராமரிப்புத் துறையும் இணைந்து நடத்திய கன்றுகள் வழங்கும் விழாவும், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் கடன்கள் வழங்கும் விழாவும், அண்ணா மாவட்டக் கூடுதல் ஆட்சித் தலைவர் மற்றும் திட்ட அலுவலர் திரு அம்புஜ சர்மா, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றன.

விழாவில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 66 நபர்களுக்கு ஆடு, மாடுகள் வாங்க ரூ.3 இலட்சத்து 15 ஆயிரம் கடன்களை, கூடுதல் ஆட்சித் தலைவர் வழங்கினார். கன்றுகள் வளர்க்கும் திட்டத்தின்கீழ் இரண்டு சங்கங்களுக்கு ரூ.33 ஆயிரம் கடனாக வழங்கப்பட்டது.

"அண்ணா மாவட்டத்தில் உள்ள ஏழை எளிய மீன் வளர்ப்போர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், இம்மாவட்ட நீர்நிலைகளில் துரித வளர்ச்சி அடையக்கூடிய மீன் குஞ்சுகளைக் கொண்டு, மீன் உற்பத்தியை அதிகரிக்கவும், திண்டுக்கல் ஏ.கே.எம்.ஜி. நகரில் 'மீன் வளர்ப்போர் மேம்பாட்டுக் கழகம்' அலுவலகம் துவக்கப்பட்டுள்ளது.

இதன் முதல் கட்டமாக அண்ணா மாவட்டத்தில் திண்டுக்கல், நிலக்கோட்டை, பழனி மற்றும் நத்தம் ஆகிய நான்கு வட்டங்களில் 54 குளங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. இக்குளங்களில், முகமை உடனடியாக மீன் வளர்ப்பு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் தற்போது எக்டேருக்கு 35 கிலோ மீன் உற்பத்தி அளவினை, 1,500 கிலோ வரை உயர்த்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் 1989-90ம் ஆண்டில் 300 எக்டேர் வரை மீன் வளர்ப்பு செய்ய இம்முகமை உத்தேசித்துள்ளது." இதனால் மீன் உற்பத்தி 450 டன் வரை அதிகரிக்கும், என அண்ணா மாவட்ட ஆட்சித் தலைவர் திரு மிருத்யுஞ்சய் சாரங்கி, இ.ஆ.ப., அவர்கள் அறிவிக்கிறார்கள்.

அண்ணா மாவட்டம், நத்தம் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் ரூ.5 லட்சத்து 55 ஆயிரம் செலவில் ஆதிதிராவிடர்களுக்காகக் கட்டப்பட்ட குடியிருப்புகளை அண்ணா மாவட்ட ஆட்சித் தலைவர் திரு மிருத்யுஞ்சய் சாரங்கி அவர்கள் திறந்து வைத்தார்.

நத்தம் ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர் திரு இரா.விஸ்வநாதன் தலைமையில் குடகிப்பட்டி ஊராட்சியைச் சேர்ந்த மணக்காட்டூரில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் இரண்டு ஆதிதிராவிடர்களுக்குக் கறவை மாடுகள் வாங்க ரூ. 4 ஆயிரத்து 332க்கான கடன் தொகைகளையும், காசம்பட்டியில் 12 ஆதிதிராவிடர்களுக்கு கறவை மாடுகள் மற்றும் அரசின் நலத்திட்ட உதவிகளுக்காக ரூ.39 ஆயிரத்து 888-க்கான கடன் தொகைகளையும், வத்திப்பட்டி கிராமத்தில் 9 ஆதிதிராவிடர்களுக்கு அரசின் நலத்திட்ட உதவிகளுக்காக ரூ. 24 ஆயிரத்து 266-க்கான கடன் தொகைகளையும், லிங்கவாடி கிராமத்தில் 3 ஆதிதிராவிடர்களுக்குக் கறவை மாடுகள் வாங்குவதற்காக ரூ. 6 ஆயிரத்து 600-க்கான கடன் தொகைகளையும் மாவட்ட ஆட்சித் தலைவர் வழங்கினார்.

நத்தம் ஊராட்சி ஒன்றியப் பகுதியில் உள்ள குடகிப்பட்டியில் ரூ. 40 ஆயிரம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட சமுதாயக் கூடத்தையும் ரெட்டியபட்டிக் கிராமத்தில் ரூ. 42 ஆயிரம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட சமுதாயக் கூடத்தையும், பரளிக் கிராமத்தில் ரூ. 40 ஆயிரத்து 500 மதிப்பீட்டில் கட்டப்பட்ட சமுதாயக் கூடத்தையும், லிங்கவாடி கிராமத்தில் ரூ.38 ஆயிரம் மதிப்பில் கட்டப்பட்ட சமுதாயக் கூடத்தையும் திறந்து வைத்தார்.

குடகிப்பட்டி கிராமத்தில் 20 ஆதிதிராவிடர் குடும்பங்களுக்கு ரூ. 1.72 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்ட ஆதிதிராவிடர் குடியிருப்புகளையும், ரெட்டியபட்டி கிராமத்தில் 20 ஆதிதிராவிடர் குடும்பங்களுக்கு ரூ.1.72 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்ட ஆதிதிராவிடர் குடியிருப்புகளையும், லிங்கவாடிக் கிராமத்தில் 24 ஆதிதிராவிடர் குடும்பங்களுக்கு ரூ.2.11 இலட்சம் செலவில் கட்டப்பட்ட ஆதிதிராவிடர் குடியிருப்புகளையும் திறந்து வைத்தார்.

நத்தம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த காசம்பட்டி, மதுக்காரன்பட்டி ஆகிய கிராமத்திற்கு இதுவரை நகரப் பேருந்து வசதி இல்லாமல் இருந்தது. இப்பகுதி மக்களின் வசதியைப் பெருக்கும் வகையில் நத்தத்திலிருந்து காசம்பட்டிக்கும், நத்தத்திலிருந்து மதுக்காரன்பட்டிக்கும் புதிய நகரப் பேருந்து வழித்தடங்களை மாவட்ட ஆட்சித் தலைவர் துவக்கிவைத்தார்.

குடகிப்பட்டி ஊராட்சித் தலைவர் கே.வீரன் செட்டியார், ரெட்டியபட்டி ஊராட்சித் தலைவர் வீ.மாயழகன், லிங்கவாடி ஊராட்சித் தலைவர் கே.நடராசன், குட்டுப்பட்டி ஊராட்சி ஒன்றிய உறுப்பினர் ஷாஜஹான், கோட்ட வளர்ச்சி அலுவலர் திரு ஏ.பி.கருப்பையா, பரளிபுதூர் ஊராட்சித் தலைவர் சின்னக்காளை, நத்தம் வட்டாச்சியர் காளிதாஸ், இராணி மங்கம்மாள் போக்குவரத்துக் கழகப் பொது மேலாளர் பரமசிவம் ஆகியோர் வாழ்த்துரைவழங்கினார்கள்.

அண்ணா மாவட்டம், ஆத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் ரூ. 20 லட்சம் செலவில் கட்டப்பட்ட 202 ஆதிதிராவிடர்களுக்கான இலவசக் குடியிருப்புகளை மாவட்ட ஆட்சித் தலைவர் திறந்து வைத்தார்.

ஆத்தூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த பஞ்சம்பட்டி, கலிக்கம்பட்டி, சீவல்சரகு, போடிகாமன்வாடி, கதிர்நாயக்கன்பட்டி, மற்றும் சொர்ணபுரம் ஆகிய கிராமங்களின் புதிதாகக் கட்டப்பட்டுள்ள ஆதிதிராவிடர் குடியிருப்புகளின் திறப்பு விழா கஞ்சம்பட்டியில் நடைபெற்றது.

**த. இளங்கோவன்,**
**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்,**
**திண்டுக்கல்.**

# அறிவுச் சுடர்

மாணவர் பக்கம்

அஞ்சல் குறியீட்டு எண் (Pincode) முறை இந்தியாவில் எந்த ஆண்டு வந்தது?

1972 ஆம் ஆண்டு.

முகமது நபி பிறந்த ஊர் எது?

மெக்கா.

இன்சாட் 1-இ விண்வெளியில் செலுத்த உதவிய அமெரிக்க விண்கலம் எது?

சாலஞ்சர்.

'மெயின் கேம்ப்' என்ற நூலை எழுதியவர் யார்?

ஹிட்லர்.

மனித உடலில் உள்ள இரத்தத்தின் அளவு எவ்வளவு?

5.6 லிட்டர்கள்.

செய்தித் தொடர்புக்கான இந்தியாவின் முதல் செயற்கைச் சந்திரன் எது?

ஆப்பிள்.

ஒரு முழு வட்டத்திலுள்ள கோணம் எவ்வளவு?

360 டிகிரி.

மக்கள் தொகையில் ஆடவரை விட, மகளிர் அதிகமாக உள்ள மாநிலம் எது?

கேரளம் மாநிலம்



## இறை வணக்கம்

அன்றாட வாழ்க்கையில் ஏற்படும் குழப்பங்களும் துயர்ங்களும் நீங்கி, உள்ளத்தில் அமைதி உண்டாவதற்கு இறை வணக்கத்தைக் காட்டிலும் சிறந்த கருவி வேறு இல்லை.

— மகாத்மா காந்தி



## அன்பை வளர்க்க வேண்டும்!

—வ. நித்தியானந்தம்

பணிவு தலைகாக்கும் தம்பி மறவாதே
பண்பு நிலைமாறி என்றும் போகாதே
துணிவு மனமின்றித் துயரை அழைக்காதே!
தூங்கியே வாழ்வுதனில் தோல்வி கொள்ளாதே!

உயர்வான எண்ணத்தை ஒதுக்கி விலக்காதே!
உன்றனை நீயேதான் உயர்த்திப் பேசாதே
தயவில்லாப் பேச்சினால் உலகைப் பகைக்காதே
தவறான வழியினிலே சென்றிட முனையாதே!

அறிவு நூல்களைநீ பயின்றிடத் தவறாதே
அறிஞர் சொற்களையே மீறிட முயலாதே
நெறிமிகு பாதைகள் நீங்கியே விலகாதே
நெஞ்சினில் அன்புப்பயிர் நிறைத்திடத் தயங்காதே!

மீன் பிடிப்பதில் உலகில் முதலிடம் பெறும் நாடு எது?

ஜப்பான்.

வெறி நாய்க் கடிக்கு மருந்து கண்டறிந்தவர் யார்?

லூயி பாஸ்டர்

வில்வத்தின் காய் கனிகளிலிருந்து எந்த மருந்து தயாரிக்கப்படுகிறது? அது எந்த நோயைக் குணப்படுத்த உதவும்?

பேல், வயிற்றுக் கழிவு நோய்.

மின்னல் எவ்வளவு நேரம் மின்னுகிறது?

மின்னல் குறைந்த பட்சம் 0.1 வினாடி முதல், அதிகபட்சம் 1.6 வினாடி வரை மின்னுகிறது.

தசைகளின் பயன் யாது?

உடல் உறுப்புகளின் அசைவிற்கும், இயக்கத்திற்கும், இணைப்பிற்கும் பயன்படுகிறது.

பென்சிலினுக்குப் பதிலாகக் கொடுக்கப்படும் மாற்று மருந்து எது?

எரித்ரோமைசின்.

ஒரு செல் பூஞ்சைக்கு எடுத்துக் காட்டு கொடு:

ஈஸ்டு.

இன்குபேட்டர் என்பது என்ன?

முட்டைகளை அடை காக்க உதவும் கருவி.

பாலைப் பதப்படுத்தும் முறை யாது?

பாஸ்டியர் முறை.

கோழி முட்டையிலிருந்து குஞ்சுகள் வெளிவர எத்தனை நாட்களாகும்?

21 நாட்கள்

மீன்களிலேயே அதிவேகமாக நீந்தும் மீன் எது?

சுறா மீன்.

தண்டு, நார்கள் கொண்ட தாவரங்களுக்கு எடுத்துக்காட்டுகள் கொடு:

சணல், ஹெம்ப், சணல் பை.

பட்டுப் பூச்சியின் உணவு யாது?

முசுக்கொட்டை இலை.

இந்துஸ்தான் போட்டோ பிலிம் தொழிற்சாலை எங்குள்ளது?

ஊட்டியில்.

இந்திய விண்வெளி ஆய்வுக் கழகம் (ISRO) எங்குள்ளது?

பெங்களூர்.

இந்தியாவில் உள்ள மாநிலங்களின் எண்ணிக்கை என்ன?


இருபத்திரண்டு

பரப்பளவில் பெரிய இந்திய மாநிலம் எது?

உத்திரப்பிரதேசம்.

# சிரிக்கத் தெரிந்தவர் சிரிக்க வைத்தவர்

—புலவர் தமிழ்ப்பித்தன்



இலக்கியங்களில் சொல்லப்படும் ஒன்பது வகைச் சுவைகளில் நகைச்சுவை சிறப்பிடம் பெறுகிறது. மனித வாழ்க்கையில் நகைச்சுவைக்குத் தனி மதிப்பு இருந்து வருகிறது. பொதுக் கூட்டங்களில் நகைச்சுவை உணர்வுடன் உரையாற்றுகின்ற பேச்சாளர்கள், பொதுமக்களின் பாராட்டுகளை எளிதில் பெறுகிறார்கள்.

நாடகத்திலும் சரி, திரைப்படத்திலும் சரி, நகைச் சுவைக் காட்சிகளை மக்கள் மிகவும் ரசிக்கிறார்கள். நகைச் சுவைக் கலைஞர்கள் மிகுந்த பாராட்டை எளிதில் பெற்றுவிடுகிறார்கள். தமிழகத் திரையுலக நகைச்சுவை நடிகரான கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன், மேல்நாட்டு நகைச்சுவை நடிகர் சார்லி சாப்ளின் ஆகிய இருவருக்கும் சிலை எடுத்துப் பெருமை சேர்த்திருக்கிறார்கள், ரசிகப் பெருமக்கள்.

நமது நாட்டில் பல அரசியல் தலைவர்களிடம் நகைச்சுவை உணர்வு பொங்கித் ததும்பியிருக்கிறது. அண்ணல் காந்தியடிகளிடம் நகைச்சுவை உணர்வு பெருகியிருந்திருக்கிறது.

வாழ்நாள் முழுதும் அறப்போரிலும் அரசியல் நிகழ்ச்சிகளிலும் ஆவேசச் சொற்பொழிவுகளிலும் ஆன்மீக போதனைகளிலும் பிரார்த்தனைக் கூட்டங்களிலும் கலந்து கொண்ட அண்ணல், நகைச்சுவை உணர்வையும் சுவிகரித்துக் கொண்டிருந்தார் என்னும் செய்தி பலரையும் வியப்பில் ஆழ்த்தும்.

ஒரு முறை காந்தி அடிகளிடம் ஓர் அன்பர் கேட்டார்:

''வாழ்க்கைக்கு நகைச்சுவை அவசியம் என்று நீங்கள் கருதுகிறீர்களா?''

''அந்த இயல்பு என்னிடம் இல்லாவிட்டால் நான் என்றோ தற்கொலை செய்து கொண்டிருப்பேன்''—காந்தியடிகள் அளித்த பதில் இது.

நகைச்சுவையை, சந்தர்ப்பம் கிடைத்த போதெல்லாம் காந்தியடிகள் பயன்படுத்தி இருக்கிறார் என்பது அவரது நெடிய வரலாறு தெரிவிக்கிறது.

காந்தியடிகள், 'வட்டமேஜை மாநாட்டில் கலந்து கொள்வதற்காகக் கப்பலில் பயணம் செய்து கொண்டிருந்தார். அதே கப்பலில் பயணம் செய்த ஒரு வெள்ளைக்காரன், தான் எழுதிய கவிதை ஒன்றினை அடிகளிடம் கொடுத்து, ''இது நான் எழுதிய கவிதை; இதைப் படித்துப் பார்த்து எப்படி இருக்கிறதென்று சொல்லுங்கள்'' என்றான். அந்தக் கவிதையைப் படித்துப் பார்த்தார் காந்தி அடிகள். தம்மைப் பற்றிக் கேலி செய்து அந்தக் கவிதையில் எழுதப்பட்டிருப்பதைப் புரிந்து கொண்டார்.

சிறுது நேரம் கழித்து அந்த வெள்ளைக்காரன் அடிகளிடம் வந்தான்.

''கவிதை எப்படி இருந்தது?''-அவன் கேட்டான்.

''கவிதையின் சாரத்தை மட்டும் நான் தனியாக எடுத்து வைத்திருக்கிறேன்''-அடிகள் பதில் சொன்னார்.


வெள்ளைக்காரனுக்குப் புரியவில்லை; திகைப்பு ஏற்பட்டது.

''இதுதான் நான் குறிப்பிட்ட சாரம்'' என்று சொல்லியபடி ஒரு குண்டூசியை எடுத்துக் காண்பித்தார் காந்தியடிகள்.

'அந்த வெள்ளைக்காரன் எழுதிய கவிதையினால் பயன் எதுவும் கிடையாது. ஆனால் அந்தக் காகிதத்தில் இணைக்கப்பட்டிருந்த குண்டூசிதான் பயன்படக் கூடியது'' என்பதை நகைச்சுவை ததும்ப காந்தியடிகள் எடுத்துரைத்தார்.

ஒருமுறை திபெத்தின் முனிவரான 13-வது தலாய் லாமா, டான்ஷ்யூன்ஷான் என்னும் சீன அறிஞரின் மூலம் காந்தி அடிகளுக்கு ஒரு கடிதத்தை அனுப்பியிருந்தார். கடிதத்தைப் பிரித்துப் பார்த்த அண்ணல், அது திபெத் மொழியில் எழுதப்பட்டிருப்பதை அறிந்தார். வந்திருப்பவருக்கும் திபெத் மொழி தெரியாது என்பதை அண்ணல் அறிந்து கொண்டார்.

''தயவு செய்து கடிதம் கிடைத்த விவரத்துக்குப் பதில் எழுதுவீர்களா?''-சீன அறிஞர் காந்தி அடிகளைக் கேட்டார்.



''நிச்சயம எழுதுகிறேன்! நான் குஜராத் மொழியில் பதில் எழுதிப் போடப்போகிறேன். அப்போது தான் தலாய்மாலாவும் என்னைப் போல மொழி தெரியாமல் விழித்துத் திண்டாடுவார்! நான் இங்கே திண்டாடிச் சிரிப்பது போல அவரும் சிரிப்பார்''-நகைச்சுவை ததும்பும் விதத்திலும் பொருள் பொதிந்த முறையிலும் பதிலளித்தார் காந்தி அடிகள்.

ஒரு முறை சிறையில் இருந்தபோது காந்தி அடிகளுக்குக் கடுமையாகச் சளிப்பிடித்துக் கொண்டது. டாக்டர் அவரது உடல் நிலையைச் சோதித்துப்பார்த்தார்.

''ஊசி போட்டுக் கொண்டால் மூன்றே நாளில் சளி ஓடிப்போகும்! இல்லாவிடில் குணமாவதற்கு மூன்று வாரமாவது ஆகும்''-டாக்டர் சொன்னார்.

''ஊசி எதற்கு? வேண்டாம்! மெதுவாய்க் குணமாகட்டும்! எனக்கு இப்போது அவசரமில்லை'' -காந்தி அடிகள் சொன்னார்.

''உங்களுக்கு அவசரம் இல்லாதிருக்கலாம். உங்கள் சளி, மற்றவர்களுக்குப் பரவக் கூடும் அல்லவா?'' டாக்டர் கேட்டார்.

''அப்படி என்றால் அவர்களுக்குப் போடுங்கள் ஊசியை!''-காந்தியடிகள் சட்டென்று சொன்னார்.

டாக்டரும் சிரித்துவிட்டார், நகைச்சுவை நிறைந்த இந்தப் பதிலைக் கேட்டு!

காந்தி அடிகள் இலண்டனுக்குப் போயிருந்த போது பிரிட்டிஷ் மன்னர் ஐந்தாம் ஜார்ஜ், அவரை விருந்துக்கு அழைத்திருந்தார். மன்னரைச் சந்திக்கச் செல்லும் காந்தி அடிகள் எத்தகைய ஆடை அணிந்து கொள்வார் என்று அந்த நாட்டுப் பத்திரிகைகள் பிரச்சனையைக் கிளப்பியிருந்தன.

காந்தி அடிகள் எந்த விதமான சிறப்பான உடைகளையும் அணியாமல், வழக்கம் போல் நான்கு முழ வேட்டி அணிந்து, மேலே ஒரு வேட்டியைப் போர்த்திய வாறு சென்றார்.

விருந்துக்கு மறுநாள்; ஒரு பத்திரிகை நிருபர் காந்தி அடிகளைச் சந்தித்து,

''நீங்கள் நேற்று மன்னரைச் சந்திக்க என்ன வகை உடை அணிந்து சென்றீர்கள்?'' என்று வினவினார்.

''எப்பொழுதும் அணிந்துவரும் இதே உடையுடன் தான் சென்றேன்'' - தமது வேட்டியையும் மேல் துண்டையும் கட்டிக் காண்பித்தார் காந்திஅடிகள்.

''வெறும் வேட்டி மாத்திரம் தானா?'' வியப்புடன் கேட்டார் நிருபர்.

''ஆம்! அது போதாதா? உங்கள் அரசர்தான் எனக்கும் சேர்த்து உடை அணிந்திருந்தாரே''-நகைச்சுவை ததும்பப் பதில் தந்தார் காந்தி அடிகள்.

சிறையிலிருந்த போது ஒரு முறை கவியரசி சரோஜினி தேவியாருடன் பேட்மின்டன் விளையாட விரும்பினார் காந்தி அடிகள். ஆனால் தனக்கு நன்கு விளையாடத் தெரியும் என்று சொன்ன அண்ணல் மட்டையை இடது கையில் பிடித்திருந்தார்.

''மட்டையை எந்தக் கையில் பிடிப்பதென்பது கூடத் தெரியவில்லை! நீங்கள் எப்படி விளையாடுவீர்கள்?'' -சரோஜினி கேலி செய்தார்.

அண்ணல் சமாளித்துக்கொண்டு, மட்டையை வலது கையில் பிடித்துக் கொண்டார். சில விநாடிகள் கழித்துப் பார்த்தபோது, சரோஜினி மட்டையைத் தமது இடக்கரத்தில் வைத்திருப்பதைக் கண்டார்.


''நீங்கள் மட்டும் மட்டையை இடக்கையில் ஏந்தியிருக்கிறீர்களே''-சந்தேகத்துடன் கேட்டார் அண்ணல்.

''அதுவா! எனது வலக்கரம் சுளுக்கிக்கொண்டு விட்டது. அதனால்தான் இடக்கரத்தில் மட்டையைப் பிடித்திருக்கிறேன்''-சரோஜினி பதில் தந்தார்.

சில விநாடிகள் கழிந்தன. அண்ணல் மறுபடியும் மட்டையை இடக்கரத்தில் ஏந்திக் கொண்டார். அதனைப் பார்த்த சரோஜினி, ''இன்னமும் உங்கள் தவறைத் திருத்திக் கொள்ளாதிருக்கிறீர்களே'' என்று கேட்டார்.

''முன்பு அது தவறாக இருந்திருக்கலாம். இப்போது அது தவறல்ல! ஒரு பெண்மணி -இடக்கரத்தில் மட்டையைப் பிடித்துக் கொண்டு சிரமத்துடன் விளையாடும்போது, நான் மட்டும் வலக்கரத்தில் பிடித்து ஆடுவதை விரும்பவில்லை''-என்று அண்ணல் பதிலளித்த போது சரோஜினி சிரித்துவிட்டார்.

ஓயாத அரசியல் போராட்டங்களிலும், எண்ண முடியாத சத்தியாக்கிரகங்களிலும் ஈடுபட்டு -காவல் துறையினரின் கெடுபிடிக்கும் ஒற்றர்களின் கண்காணிப்புக்கும் அடிக்கடி ஆளாகி வந்த காந்தியடிகள் நகைச்சுவைக் கனிகளையும் உதிர்த்திருக்கிறார். அண்ணல் சிரிக்கத் தெரிந்தவர் மட்டுமல்லர்; பிறரைச் சிரிக்க வைக்கவும் தெரிந்தவர்.



# சிக்கல் தந்த சிகிச்சை!

இராமநாதபுரம் மாவட்டத்தில் 27.8.88 அன்று மருத்துவர்கள் சிக்கல் கிராமத்தில் திரண்டனர். ஒருபுறம் மருத்துவ உதவியாளர்கள் மருந்துகளை வேக வேகமாக ஒழுங்குபடுத்திக் கொண்டிருந்தனர். திடீர்ச் சிகிச்சைப் பிரிவுகள் அங்கே உதயமாயின.

மருத்துவப் பரிசோதனைக்கான தடுப்பு அறை ஒன்றும் உடனடியாக ஏற்படுத்தப்பட்டது.

அந்த இடத்தைச் சுற்றிலும் ஓர் பரபரப்பு! மக்கள் முற்றுகை!!

இதுவரை இந்தக் கிராமத்தில் இப்படி ஒரு நிகழ்ச்சி நடைபெறவில்லை என்ற முணுமுணுப்புகள்!

இந்தச் சந்தடியில் மருத்துவ ஊர்திகளின் ஓட்டத்தினால் மண்ணிலே வேறு சிராய்ப்புக்கள்!

இவையனைத்தும் ஏதோ ஒரு விபரீதத்தினால் கிராமத்தைத் தேடி வந்த மருத்துவ உதவிகள் அல்ல!

மனிதாபிமானத்தால் வந்தவை!

நல்லோர் ஆட்சியில் -நலிவுற்ற மக்களைத் தேடி வந்தவை.

இரத்தம் உறைந்தாலும்—
நாடி குறைந்தாலும்—
நரம்பு தளர்ந்தாலும்—
இருதயமே நின்றாலும்—

மாட்டு வண்டியைப் பூட்டி மருத்துவமனை நோக்கிச் சென்ற கிராமத்து மக்களின் வரலாறுகளைத் தான் நாம் படித்து வருகிறோம்.

அந்த வரலாறுகளில்—

இப்பொழுது புதிய அத்தியாயங்கள் மலர்ந்துள்ளன.

அப்படி பூத்திட்ட நறுமலரில் ஒன்றாகத் தான் இராமநாதபுரத்தைச் சார்ந்த சிக்கல் என்னும் கிராமத்தில் ஆகஸ்டு 27 மற்றும் 28 தேதிகளில் இலவச மருத்துவ முகாம் நடைபெற்றது.

இம் முகாமிற்கு அருகிலுள்ள கிராமத்து மக்கள் எல்லாம் பெருமளவில் வருகை தந்தனர்.

இராமநாதபுரம் மாவட்டத்தின் சேவா சங்கத்தின் தலைவரும், மாவட்ட ஆட்சித் தலைவருமான திரு அஜய்பட்டாச்சார்யா அவர்கள் இந்த மருத்துவ முகாமின் நிறைவு விழாவில் பங்கேற்றார். மக்கள் நல்வாழ்விற்கான இது போன்ற மருத்துவ முகாம்கள் மாவட்டம் முழுவதும் நடத்தப் பெறுமென அறிவித்தார்.

இவ்விழாவிற்கான சிறப்பு ஏற்பாடுகளை மாவட்ட வருவாய் அலுவலர் திரு சுப்பிரமணியம் செய்திருந்தார். விழாவில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் சீனு. அரங்கநாதன் வரவேற்புரையாற்றினார். மாவட்ட செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர் இரா.பா. கார்மேகம், மாவட்ட உதவி மருத்துவ அலுவலர் பழனியப்பன் மற்றும் அலுவலர்கள் சிறப்புரையாற்றினர். முதுகுளத்தூர் வட்டாட்சியர் செந்தில்குமார் நன்றி கூறினார்.


இனி இராமநாதபுரம் மாவட்டத்தில் சிக்கல் காட்டிய வழியில் —சிக்கல் நீங்கலான கிராமங்களிலும் இலவச மருத்துவ முகாம்கள் இனிதே நடைபெறும்.

**இரா. பா. கார்மேகம்**
**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்,**
**இராமநாதபுரம்.**

## காந்தியடிகளின் வைராக்கியம்!

**தம்முடைய அரசியல்குரு என்று, மகாத்மா காந்தியடிகளே கோபாலகிருஷ்ண கோகலேயைக் குறிப்பிடுவது உண்டு.**

**1914 பிப்ரவரியில் கோகலே இறந்து போனார். அன்னாரின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்ட காந்தியார், ஒரு புதுமாதிரியான விரதம் மேற்கொண்டார். ஓராண்டுக் காலம், செருப்பணிவதில்லை என்பதே அந்த விரதம். இதன் காரணமாகக் கால்களுக்குப் பலவிதத் துன்பங்கள் நேர்ந்தபோதும், அதற்காக அவர் கவலைப்பட்டாரில்லை; ஓராண்டுக் காலமும் வைராக்கியமாகச் செருப்பு போட்டுக் கொள்ளாமலே இருந்தார்.**



## மதுரை மாவட்டத்தில்

# மேதகு ஆளுநர் ஆலோசகர் பயணம்

மேதகு தமிழக ஆளுநரின் ஆலோசகர் திரு ஜி.வி. இராமகிருஷ்ணா அவர்கள் 29.8.88 முதல் 31.8.88 முடிய மதுரை மாவட்டத்தில் சுற்றுப்பயணம் செய்தார்.

29.8.88 காலை 10 மணியளவில் மதுரை வேளாண்மைக் கல்லூரியில் ரூ. 20 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்ட மனையியல் கட்டடத்தைத் திறந்துவைத்தார். இந்நிகழ்ச்சிக்கு வேளாண்மைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் டாக்டர் வி.இராஜகோபாலன் தலைமை வகித்தார். ஆலோசகர் திரு ஜி.வி.இராமகிருஷ்ணா பேசும்போது-

''இப்போது படித்து விட்டு வேலையில்லாமல் பலர் உள்ளனர். அதேபோல் படிக்காமல் எந்த வேலைவாய்ப்பும் பெறாதோரும உள்ளனர். இந்த இரண்டுமே நாட்டுக்கு அபாயகரமானதாகும். உதாரணமாக கடந்த 3 ஆண்டுகளில் தோட்டக்கலை படித்து விவசாயக் கல்லூரியில் தேறியவர்களுக்கு வேலைவாய்ப்பில்லை. பெரும்பாலோர் அரசிடம்தான் வேலையை எதிர்பார்க்கிறார்கள். இன்னும் 10 ஆண்டுகளுக்கு எந்தமாதிரியான வேலை காலியாக இருக்கும், எந்த வேலையில் சேர ஆட்கள் தேவைப்படுவார்கள் என்பதைக் கண்டறிந்து, அதற்கேற்றவாறு மாணவர்கள் தொழிற்கல்லூரிகளில சேர்க்கப்பட வேணடும். அதற்குரிய வேலைவாய்ப்பு உள்ள கல்வியை அதிகரிக்க வேண்டும். வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதில் பல்கலைக்கழகங்களுக்கு முக்கியப் பங்குள்ளது. படித்து வேலையில்லாமல் இருப்பது நாட்டின் பொருளாதாரத்திற்கு ஆபத்தானது'' என்று குறிப்பிட்டார்.

மேலும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு காமராஜர் பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு கிருஷ்ணசாமி, மாவட்ட ஆட்சித் தலைவர் திரு மா. தேவராஜ், ஆகியோர் பேசினார்கள்.

30.8.88 அன்று தேவதானப்பட்டி அருகேயுள்ள மூங்கிலணை மகா காமாட்சி அம்மன் கோயிலில் ரூ. 65,000 மதிப்பில் கட்டப்பட்ட நெய்மண்டபத்தைத் திறந்து வைத்தார்.

மாவட்ட ஆட்சித்தலைவர் திரு மா. தேவராஜ், அறுபடை வீடு சித்திரக் கூடத்தைத் திறந்து வைத்துப் பேசும்போது, ''கோவிலுக்கு ராணி மங்கம்மாள் போக்குவரத்துக் கழக பஸ் வந்து செல்ல ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது'' என்றார். விழாவில் அறநிலையத்துறை ஆணையர் மற்றும் செயலர் திரு கு.ஆளுடையபிள்ளை, ஆணையர் திரு டி.ஆர். கல்யாண சுந்தரம், ஆகியோர் கலந்து கொண்டனர்.

31.8.88 அன்று பொம்மிநாயக்கன்பட்டி கிராமத்தில் அன்னை இந்திரா நினைவு ஆதிதிராவிடர் குடியிருப்பு திறப்பு விழா மாவட்ட ஆட்சியர் திரு மா.தேவராஜ் தலைமையில் நடைபெற்றது.


விழாவில் 60 ஆதிதிராவிடர் குடியிருப்புகளைத் திறந்துவைத்து, ஆலோசகர் திரு ஜி. வி. ராமகிருஷ்ணா அவர்கள் பேசுகையில்-

''இந்தியா சுதந்திரம் அடைந்த போது அரசியல் சுதந்திரத்தைப் பெற்றது. 40 ஆண்டுகள் அரசியல் சுதநதிரத்துடன், பொருளாதாரச் சுதநதிரததையும் நிலைநிறுத்தச் செய்யும் வகையில் மத்திய மாநில அரசுகள் ஏழை எளியமக்களுக்கான திட்டங்களை நிறைவேற்றி வருகின்றன, உண்ண உணவும், உடுக்க உடையும், இருக்க வீடும் கிடைக்க பல திட்டங்கள் படிப்படியாக

# கிராம நலம் காப்போம்!

**நா**ம், கிராமவாசிகளுக்கெல்லாம் மிகப்பெரிய கொடுமை இழைத்து குற்றம் புரிந்திருக்கிறோம். இக் குற்றத்திற்கு நாம் செய்யக்கூடிய ஒரே ஒரு பரிகாரம், அவர்களுடைய அழிந்துபோன கைத்தொழில்களையும், கலைகளையும் மீண்டும் உயிர்ப்பிக்கச் செய்து, அவ்வகையில் உண்டாக்கப்படும் பண்டங்கள் உடனுக்குடன் விற்பனையாவதற்கு ஏற்பாடு செய்வதேயாகும். கடவுள் மிகப்பெரிய பொறுமைசாலி; ஆனால் அவர் பொறுமைக்கும் ஓர் எல்லை உண்டு.

நாம் கிராமங்களிடம் நமக்குள்ள கடமையை மறந்து வாழ்ந்தால் அது கடவுளுக்கே பொறுக்காமல் போய்விடவும் கூடும்!



**ஸ்ரீ**கிருஷ்ணனுக்கு அடுத்தாற்போல் மகாத்மாவைத்தான் சொல்லலாம். ஒவ்வொருவரும் அவரைச் சமமாகக் கொண்டாடுகிறார்கள். மகாத்மா இந்திய ராஜீய துறையில் இறங்கிய பின் தேசத்தில் ஏற்பட்டிருக்கிற உணர்ச்சி எல்லோருக்கும் தெரியும். உருவப்படம் திறந்து வைப்பது தற்காலச் சம்பிரதாயம். முன்னாளில் விக்கிரகம் வைத்துப் பூசை செய்வதுண்டு. ஆனால் உண்மையான மகாத்மாவின் கொள்கைகளை நீங்கள் பின்பற்றி நடப்பதுதான் சரியாக அவரைக் கொண்டாடுவதாகும்.

**—மூதறிஞர் ராஜாஜி**

நிறைவேற்றப்பட்டு வருகின்றன. தமிழகத்தில் 7-வது ஐந்தாண்டுத் திட்ட இறுதிக் காலத்திற்குள் அனைத்துக் கிராமங்களுக்கும் குடிநீர்த்திட்டம் அமல் படுத்தப்பட்டு விடும். இந்த ஆண்டு மட்டும் தமிழகத்தில் குடிநீர்த் திட்டத்திற்காக ரூ. 150 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு மட்டும் 70,000 வீடுகள் கட்டித் தரப்படவுள்ளன. மதுரை மாவட்டத்திற்குக் கூடுதல் நிதி ஒதுக்கவேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக் கொண்டார். இந்த ஆண்டு நமது மாநிலம் மிகுந்த நிதி நெருக்கடியில் உள்ளது. எவ்வளவு முடியுமோ அந்த அளவு இம் மாவட்டத்திற்கு ஒதுக்கித் தரப்படும். இங்கே பொதுமக்கள் கொடுத்த மனுக்கள் முறையாகப் பரிசீலிக்கப்பட்டு உரிய நடவடிக்கை உடன் எடுக்கப்படும்'' என்று குறிப்பிட்டார்.

பின்னர் ஆண்டிப்பட்டியில் ரூ.15 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள ஆதிதிராவிடர் மாணவியர் விடுதியைத் திறந்து வைத்தார். இந்த விடுதியில் 60 மாணவிகள் தங்கிப் படிக்க வசதியுள்ளது. இவ்விழாவில் கலந்து கொண்டு ஆலோசகர் பேசுகையில்-

''இந்த ஆண்டு ஆதிதிராவிடர்களுக்குத் தமிழக அரசு ரூ.250 கோடிக்கு நல்வாழ்வுத் திட்டங்களைத் தீட்டியுள்ளது. இப்பகுதியில் மிகவும் பின்தங்கியுள்ள ஆதிதிராவிட சமுதாயம் மேலும் முன்னேற வேண்டும். எந்த ஒரு திட்டம் ஆனாலும் குறிப்பிட்ட காலத்தில் முடித்து அதனை மக்கள் பயன் பெற நடவடிக்கை எடுத்து வருகிறோம். உங்கள் முன்னேற்றம் உங்கள் கையில்தான் உள்ளது'' என்று கூறினார். மேலும் இவ்விழாவில் 193 ஆதிதிராவிடர்களுக்கு வீட்டு மனைப்பட்டாவும், சலவைப் பெட்டிகள் 10 பேருக்கும், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 15 பேருக்கு ரூ. 86 ஆயிரம், தீவிபத்தில் வீடிழந்த 44 பேருக்கு ரூ. 50 ஆயிரத்தையும் ஆலோசகர் வழங்கினார். 29.9.88 அன்று மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ரூ. 5 இலட்சம் மதிப்பில் உருவாக்கப்பட்டுள்ள கம்ப்யூட்டர் மையத்தையும் ஆலோசகர் திறந்து வைத்தார். சென்னையில் உள்ள தலைமைச் செயலகத்துடன் தொடர்பு கொள்ளும் வகையில் இந்த மையம் அமைக்கப்பட்டுள்ளது. இம்மையத்தில் மாவட்டத்தில் உள்ள அனைத்துத் துறை பற்றிய குறிப்புகள் சேகரித்து வைக்கப்பட்டுள்ளன. விவரம் தேவைப்படும்போது, உடனே பெற்றுக் கொள்ள இது உதவும்.

**ரெ. இராவணன்,**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்**
**மதுரை மாவட்டம்**

# புதுக்கோட்டை மாவட்டத்தில் தொழில் வளர்ச்சி

கி.பி. 1640ஆம் ஆண்டு முதல் 1948 வரை தொண்டைமான் மன்னர்கள் ஆட்சியின் கீழ் இருந்த புதுக்கோட்டை சமஸ்தானத்தில் பலவினைத் தொழில்கள் பிரதானமாக இருந்து வந்திருக்கின்றன. பட்டு நெசவு, சாயம் பூசுதல், சரிகை வேலை, வாசனைத் திரவியங்கள் தயாரித்தல், இசைக் கருவிகள் தயாரிப்பு, கல் மற்றும் மர வேலைப் பாடுகள், பனை ஓலை வேலைகள் மற்றும் போர்வைகள் தயாரிப்பு, சுடு மண் பொம்மைகள் தயாரிப்பு ஆகியவை குறிப்பிடத்தக்க தொழில்களாக இருந்து வந்துள்ளன.

## தொழில்முன்னேற்ற நடவடிக்கைகள்

1948இல் புதுக்கோட்டை சமஸ்தானம் இந்திய யூனியனுடன் இணைந்து, திருச்சி மாவட்டத்தில் ஒரு பகுதியாக இருந்து வந்தது. 1974 ஜனவரித் திங்கள் 14ம் நாள் முதல் தனி மாவட்டமாகச் செயல்படத் தொடங்கியது. தொழில் துறையில் மிகவும் பின்தங்கிய மாவட்டமாக அறிவித்து, புதுக்கோட்டை மாவட்டத்தை முன்னேற்றும் முகத்தான் பல்வேறு முன்னேற்ற நடவடிக்கைகளை மத்திய, மாநில அரசுகள் எடுத்தன.



## மாவட்டத் தொழில் மையம்

தொழில் துறையில் தத்திச் செல்லும் குழந்தை போல் அடி எடுத்து வைத்த இம்மாவட்டம், இன்று அரசு தொழில் வளர்ச்சி நிறுவனங்கள் மற்றும் நிதி நிறுவனங்கள், தொழில் முனைவோர் ஆகியோரின் கூட்டு முயற்சியால் தொழில் துறையில் கட்டிளங் காளையென நடைபோடத் துவங்கியுள்ளது.

இம்மாவட்டம் குறிப்பாகக் கிராமப்புறப் பகுதிகள்-முன்னேற்றம் அடைய மாவட்டத் தொழில் மையம் 1978ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் நிறுவப்பட்டது. தொழில் புதிதாக துவங்குவோருக்கு உள்ளாட்சி மன்றம், நகரமைப்புத் துறை, மின்வாரியத்துறை, தொழில் ஆய்வாளர், மாசுக்கட்டுப்பாடு வாரியத்துறை, மாவட்ட சுகாதாரத்துறை ஆகிய துறைகளில் பெறவேண்டிய உரிமங்களை ஒரு முனைத் தீர்வுக்குழு மூலம் விரைவில் பெற மாவட்டத் தொழில் மையம் வழிவகுக்கிறது. இம்மாவட்டத்தில் இதன் மூலம் 100 தொழில் நிறுவனங்கள் பயனடைந்துள்ளன.

1983ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் சுயவேலைவாய்ப்புத்திட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் 18 வயது முதல் 35 வயதிற்குட்பட்டவர்கள் 10ஆம் வகுப்பு தேர்ச்சிபெற்று, வேலையில்லாமல் இருந்தால், அவர்களுக்கு உற்பத்தியை அடிப்படையாகக் கொண்டு, தொழில் துவங்க ரூ. 35,000 வழங்கப்படுகிறது. தொழில் சேவா நிலையங்களுக்கு ரூ. 25,000ம் வணிக நிறுவனங்களுக்கு ரூ. 15,000-ம், 25 சதவீத மானியத்துடன் வங்கிகள் மூலம் கடனுதவி வழங்கப்படுகிறது.

மாவட்டத் தொழில் மையப் பொது மேலாளரை அங்கத்தினராகக் கொண்ட சிறப்புப் பணிப் பிரிவு நபர்களைத் தேர்ந்தெடுத்து வங்கிகளுக்குச் சிபாரிசு செய்து அனுப்புகிறது. கடந்த 1987-88ம் ஆண்டில் விதிக்கப்பட்டகுறியீடான 250ல் 194 நபர்களுக்கு ரூ. 23.84 லட்சம் கடனுதவி வங்கிகளால் வழங்கப்பட்டுள்ளது. 1988-89ம் ஆண்டு 500 பேருக்குக்கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. புதுக்கோட்டை மாவட்டத்தில் மரத்திருகாணிகள், வெல்டிங் எலக்ட்ரோடு, ஆக்சிஜன் வாயு, சைக்கிள் மற்றும் மொபெட் உதிரி பாகங்கள், பிளாஸ்டிக் ஒயர்கள் தயாரித்தல், பைகள், சூட்கேஸ்கள் செய்தல், பழைய பிளாஸ்டிக் பொருட்களை உருக்கி மீண்டும் புதிய பொருட்கள் தயாரித்தல், பிளாஸ்டிக் குடங்கள், மருத்துவ ஊசிகள், பலவிதமான தையல் மற்றும் தைக்கும் ஊசிகள், சிராமிக் பொருட்கள், பெல் நிறுவனத்திற்குத் தேவைப்படும் உதிரி பாகங்கள் தயாரித்தல், கம்பி இழுத்தல், இரும்பு உருட்டாலைகள், ரசாயன

பெயிண்ட் தயாரித்தல் ஆகிய தொழில்கள் துவங்கி நடைபெற்று வருகின்றன.

சிறுதொழில் நிரந்தரச்சான்றிதழ் வழங்கும் திட்டத்தில் கடந்த 30.6.88 முடிய இம்மாவட்டத்தில் 2,177 சிறுதொழிலகங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவைகளில் 21,490 நபர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்கப்பட்டுள்ளது. இத்தொழிலகங்கள் ரூ.1,705 இலட்சம் முதலீடு செய்துள்ளன. தொழில் நுட்ப வளர்ச்சி உரிமம் பெற்ற 25 பெரிய மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் இம்மாவட்டத்தில் செயல்படுகின்றன. இந்நிறுவனங்களுக்கு நிதி முதலீடு செய்த தொகை ரூ. 3,807 லட்சம். இந்நிறுவனங்கள் மூலம் 4,287 பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இதுதவிர கிராமப்புறங்களில் குடிசை மற்றும் கைவினைத் தொழில்கள் 673 பதிவு பெற்றுள்ளன. அவை 1,570 நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கியுள்ளன.

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் புதிய தொழில்களை இம்மாவட்டத்தில் ஆரம்பிக்க பல்வேறு சலுகைகள் அளித்து வருகிறது. புதுக்கோட்டையில் தஞ்சாவூர் சாலையிலும், மற்றும் திருச்சி சாலை மாத்தூர்பகுதியிலும் ஏற்கெனவே தொழிற்பேட்டைகள் துவங்கப்பட்டுச் செயல்பட்டு வருகின்றன. புதுக்கோட்டையிலுள்ள தொழிற்பேட்டையில் அரசினால் 18 தொழிற்கூடங்கள், சிறுதொழில் மேம்பாட்டுக் கழகத்தினால் 15 தொழிற்கூடங்கள், ஆக மொத்தம் 33 தொழிற்கூடங்கள் கட்டப்பட்டு, தொழிலதிபர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. மாத்தூர் பகுதியில் 17 தொழிற்கூடங்களும், 22 பிளாட்டுகளும் அமைக்கப்பட்டு அவை அனைத்தும் தொழில் தொடங்கும் தொழிலதிபர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுவிட்டன. இவையல்லாது மாநிலத்தொழில் வளர்ச்சி நிறுவனம் மூலம், திருச்சி சாலையிலுள்ள சிப்காட் தொழிற்பேட்டையில், 51.45 ஏக்கர் நிலத்தில், தொழிற்கூடங்கள் கட்டும் பொருட்டு, நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம்

இந்த நிறுவனம் சிறுதொழில், நடுத்தர மற்றும் பெரிய தொழில்களுக்குக் கடனுதவிகள் அளித்து வருகின்றன. இந்நிறுவனத்தாரால் சிறுதொழில் துவங்குவோருக்குக் கட்டடம் கட்டவும், இயந்திரங்கள் வாங்கவும் ரூ. 1 லட்சம வரை கிளை நிறுவனம் கடன் அளித்து வருகிறது. இந்நிறுவனங்கள் மண்டல அலுவலகம் ரூ. 3 லட்சம் வரையிலும் தலைமை அலுவலகம் அதற்கு மேற்பட்ட தொகையினையும் கடனாக அளித்து வருகிறது.

தமிழ்நாடு சிறுதொழில் மேம்பாட்டுக் கழகமும் தொழில் வளர்ச்சியில் அரிய பணிகளை ஆற்றி வருகிறது. இந்நிறுவனம் புதுக்கோட்டை திருச்சி நெடுஞ்சாலையில், தொழிற்பேட்டை அமைக்கும் பொருட்டு சுமார் 412 ஏக்கர் நிலம் கையகப்படுத்தியுள்ளது. இந்த நிலத்தில் தொழில் துவங்க ஆர்வமுள்ளவர்களுக்கு நிலம் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இதுவரை 30 தொழிலதிபர்களுக்கு 41 பிளாட்டுகள் சுமார் 136.2 ஏக்கர் நிலத்தில் அமைத்துக்கொடுக்கப்பட்டுள்ளன.

இது தவிர சுமார் 51.45 ஏக்கர் நிலம் தொழிற்பேட்டைகள் அமைக்கும் பொருட்டு சிறுதொழில் மேம்பாட்டுக் கழகத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஒரு பிளாட்டின் விலை ரூ. 30,000 என விலை நிர்ணயம் செய்து ஒதுக்கீடு செய்து வருகின்றனர். இத்தொழிற்பேட்டையில் தொழில்நிறுவனங்களுக்குத் தேவைப்படும் சாலை வசதிகள் அனைத்தும் இந்நிறுவனத்தின் சொந்தச் செலவிலேயே அமைத்துத் தரப்படுகிறது. இவை தவிர தொழிலகங்களுக்குத் தேவைப்படும் தண்ணீர் வசதி, மின்சாரம், தொலைபேசி, முதலுதவி, சிற்றுண்டிச் சாலை ஆகியவைகளையும் அமைத்துக் கொடுக்க நிறுவனம் முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்படி கிராமங்களில் துவங்கப்படும் தொழில் திட்டங்களுக்கு அத்திட்ட முதலீட்டில் 25% அல்லது அதிகப்படியாக ரூ.25,000 வரை 6¼% வட்டிவிகிதத்தில் விதைப் பணக் கடனுதவி மாவட்ட தொழில் மையம் மூலம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில் இதுவரை 560 சிறுதொழில் நிறுவனங்களுக்கு ரூ. 32.5 லட்சம் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது. பிற்படுத்தப்பட்டோர் தொழில் ஆரம்பிக்க இது வரை 26 நபர்களுக்கு ரூ. 15 லட்சம் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.


கிராமக் கைவினைஞர் பயிற்சித் திட்டத்தின் கீழ் கிராமக் கைவினைஞர்களுக்குத் தொழில்நுட்பக் கலைகளில் பயிற்சி கொடுக்கப்பட்டுள்ளது. கிராமக் கைவினைஞர் பயிற்சி திட்டத்தின் கீழ், கடந்த 1987-88ம் ஆண்டு நிதியாண்டில், அரசு ரூ.37,000 நிதிஒதுக்கீடு செய்து, 35 கிராமப்புறக் கைவினைஞர்களுக்கு கயிறு மற்றும் தையல் தொழில் பயிற்சி அளித்துள்ளது.

மின்வாரியத் திட்டத்தின் கீழ், மாவட்டத் தொழில்மையம் முதல் வருடத்திற்கு 30 சதவீதமும், 2வது வருடத்தில் 20 சதவீதமும், 3வது வருடத்தில் 10 சதவீதமும் மின் கட்டணத் தொகையில் மான்யம் அளித்து, குறைந்த மின்அழுத்தம் பயன்படுத்தும் சிறுதொழில் நிறுவனங்களுக்கு உதவி செய்கிறது.

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி வட்டத்தில் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை துவங்க அரசு அனுமதியளித்துள்ளது. இந்த ஆலை சர்க்கரைத்துறை இயக்குநர் கட்டுப்பாட்டில் இயங்கும். இந்த ஆலையின் நிறுவன மதிப்பு ரூ.22 கோடியாக இருக்கும். மேற்படி முதலீட்டுத் தொகையில் சுமார் 8 கோடி அளவிற்குத் தமிழ்நாடு அரசின் மூலதனமாகவும், மீதமுள்ள ரூ. 12 கோடி மூலதனம் நிதியுதவி நிறுவனங்கள் உதவியுடனும் பெறப்படவுள்ளன.

புதுக்கோட்டை மாவட்டத்தில் இலுப்பூர், மலைக்குடிப்பட்டி, விராலிமலை, பெரம்பூர் மற்றும் திருவப்பூர் பகுதிகளில் கடந்த 60 வருடங்களாக செயற்கை வைரத் தொழில் குடிசைத் தொழிலாக நடைபெற்று வருகிறது. இதில் 10,000 மக்கள் ஈடுபட்டுள்ளார்கள். இத்தொழிலை முன்னேற்றும் வகையில், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 100 இளைஞர்களைத் தேர்ந்தெடுத்து நான்கு இடங்களில் நவீன முறையில் நவீனக்கருவிகளைக்கையாண்டு செயற்கை வைரத் தொழிலில் பயிற்சி கொடுக்கத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. பினனர் அந்தப் பயிற்சி இடங்கள், தொழிற்கூடங்களாக மாற்றப்படும். இதற்கான வேலைகள் நடைபெற்று வருகின்றன.

**ஆ. கோபாலன்**
**உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (விளம்பரம்)**
**புதுக்கோட்டை**



## மகாத்மா

மகாகவி ரவீந்திரநாத் தாகூர் மகாத்மாவிடம் அளவற்ற மரியாதையும் பெரு மதிப்பும் வைத்திருந்தார். காந்திஜி உண்ணாவிரதம் இருந்தது போன்ற பல சந்தர்ப்பங்களில் மகாகவி அவருக்கு ஆறுதல் கூறியிருக்கிறார். பின்வரும் பொன்மொழியைப் படித்தால் காந்திஜியின் பெருமையை உள்ளது உள்ளபடி கணித்தவர் மகாகவி தாகூர்தான் என்பது தோன்றும்.

''எல்லா மனிதர்களுடைய இதயங்களிலும் குடிகொண்டு இருக்கும் ஆண்டவனை, உபநிஷதங்கள் 'மகாத்மா' என்று அழைக்கின்றன என்பது நமக்குத் தெரியும். 'மகாத்மா' என்ற அந்த அடைமொழி இன்று நாம் மதித்துப் போற்றும் தெய்வத் தன்மை வாய்ந்த மகாபுருஷனுக்குக் கொடுக்கப்பட்டிருப்பது முற்றிலும் பொருத்தமே யாகும். ஏனெனில், காந்தி என்ற அந்த மகாத்மா, எண்ணிறந்த மக்களுடைய உள்ளங்களில் குடிகொண்டிருக்கிறார்.


—இரவீந்திரநாத் தாகூர்




தந்தை பெரியார் பிறந்த நாளையொட்டி (17.9.88) சென்னையில்-அண்ணா மேம்பாலம் அருகில் உள்ள அண்ணாரின் திருவுருவச் சிலைக்கு மேதகு ஆளுநரின் ஆலோசகர்கள் திரு ஜி.வி. இராமகிருஷ்ணா, திரு ஆ. பத்மநாபன் ஆகியோர் மாலையணிவித்தார்கள்.

# படமும் செய்தியும்

மேதகு ஆளுநரின் ஆலோசகர் திரு ஆ. பத்மநாபன், சென்னை, கல்லூரிச் சாலையில் உள்ள பாடநூல் நிறுவன வளாகத்தில் அனைத்திந்தியத் தமிழ் எழுத்தாளர் சங்க அலுவலகத்தைத் திறந்து வைத்தார்.



மகாகவி பாரதி நினைவு நாளன்று (11.9.88) சென்னை- காமராசர் சாலையில் உள்ள அண்ணாரின் திருவுருவச் சிலைக்கு மேதகு ஆளுநரின் ஆலோசகர் திரு ஆ. பத்மநாபன், தமிழ வளர்ச்சி உயர்நிலைக் குழுத் தலைவர் டாக்டர் ம.பொ.சி., ஆகியோர் மாலை யணிவித்தார்கள்.







சென்னை மாநகராட்சியின் பத்து புதிய வட்ட அமைப்பு களை, 15.9.88 அன்று சென்னை ரிச்சர்ட்ஸ் பூங்காவில் நடைபெற்ற விழாவில் மேதகு ஆளுநரின் ஆலோசகர் திரு ஜி. வி. இராமகிருஷ்ணா துவக்கிவைத்தார்.



மதுரையில் 13.9.88ல் வ.உ.சி. பிறந்த நாள் விழா நடைபெற்ற போது, அண்ணாரின் திருவுருவப் படத்தைத் தமிழ் வளர்ச்சி உயர் நிலைக் குழுத்தலைவர் டாக்டர் ம.பொ.சி. திறந்து வைத்தார் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. மா. தேவராஜ், செய்தித்துறை இயக்குநர் திரு. நா. கிருஷ்ணபாரதி ஆகியோரும் விழாவில் பங்கேற் றார்கள்.



அறிஞர் அண்ணா பிறந்தநாளன்று (15.9.88) சென்னை அண்ணா சாலையில் உள்ள அவரது திருவுருவச் சிலைக்கு, மேதகு ஆளுநரின் ஆலோசகர்கள் திரு ஜி.வி. இராமகிருஷ்ணா, திரு ஆ. பத்மநாபன், சிறப்பு ஆணையர் மற்றும் செயலாளர் செய்தி-சுற்றுலாத்துறை திரு செ. ராம்தாஸ், செய்தித்துறை இயக்குநர் திரு நா. கிருஷ்ணபாரதி ஆகியோர் மாலையணிவித்தார்கள்.

# பல் மருத்துவம்

## நேற்று இன்று நாளை

டாக்டர் அ. பரமேஸ்வரன்,
பேராசிரியர், பல்பாதுகாப்புப் பகுதி,

டாக்டர் குருச்சரன்,
பட்டமேற்படிப்பு மாணவா
பல் மருத்துவக் கல்லூரி,
சென்னை.


## நேற்று

முதல் முதலில் முடி திருத்துபவர்கள்தான் பல் மருத்துவர்களாகப் பணியாற்றினார்கள் என்று வரலாறு கூறுகிறது.

எலியோலிதிக் (Heliolithic) பண்பாட்டில் பற்குழிகளுக்குக் காரணம் புழுக்கள் எனக் கூறப்பட்டது. இதனால் பற் குழிகளுக்கு மருந்து 'புகைமூட்ட' மருத்துவமாக அளிக்கப்பட்டது.

ஆசிரியன் காலத்திலேயே (கி.மு. 8வது நூற்றாண்டு) பல் நோய் மற்ற நோய்களுக்குக் காரணமாக இருக்கலாம். ( Focal Infection) எனக் கருதப்பட்டது. அந்தக் காலத்தில், மருந்து, களிமண் பலகைகளில் எழுதிக் கொடுக்கப்பட்டது.

பாபிலோனியர் காலத்தில் கை விரலில் துணியைச் சுற்றி பல்லைச்



பழங்காலத்தில் பல் துளைபோடும் கருவிகள்

சுத்தம் செய்தார்கள். இப்போது உள்ள பிரஷ் சீனர்களால் 15-ஆம் நூற்றாண்டில் உபயோகத்திற்குக் கொண்டு வரப்பட்டது. ஆனால் தங்கத்தாலும் வெள்ளியாலும் ஆன பல் குத்தி 5,000 ஆண்டுகளுக்கு முன்பே உபயோகத்தில் இருந்தது.

அரிஸ்-டி-அக்கினிஸ் என்ற அரசர் கி.மு.2697ஆம் ஆண்டு, ஈறு வீக்கத் தீர்க்கும் ஈறுகளில் இரத்தம் வடிவதற்கும் மற்றும் பல் வலிக்கும் குழந்தைகளின் சிறுநீரை வாய் கொப்பளிக்கும் மருந்தாக உபயோகப்படுத்தினார். அது கி.பி. 1728ஆம் ஆண்டு வரை வழக்கில் இருந்தது.

சீனாவில் 'அக்குபஞ்சர்' முறை மூலம் பல் வலியை நீக்குவதற்கு முறைகள் விளக்கப்பட்டு இருந்தன. 26 முக்கிய இடங்களும் ஊசி குத்துவதற்குக் குறிக்கப்பட்டு இருந்தன.

மார்க்கபோலோவின் பயணக் கட்டுரையில் (கி.பி.1280) சீனாவில் தங்கத் தகடு மூலம் பற்களை அழகு படுத்திக் கொள்ளும் முறை இருந்தது பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

கி.மு. 2500ஆம் ஆண்டிலேயே எகிப்தியர்கள் பொற்பற்களைத் தங்கக் கம்பிகளின் மூலம் கட்டி உபயோகித்தார்கள். எகிப்திய 'மம்மி'களில் வெண்கலத்தினால் ஆன பற்கள் செதுக்கப்பட்ட மரத்தில் இணைக்கப்பட்டு இருந்தது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தங்கத்தினால் அடைக்கப்பட்ட பற்களும், யானைத் தந்தத்தினால் செய்யப்பட்ட பற்கள், தங்கத் தகட்டில் இணைக்கப்பட்டவை ஆகியவைகளும் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன.

முதன் முதலில் நிலையான (Fixed) பொய்ப் பற்கள் கி.மு. 600ஆம் வருடத்திலேயே உபயோகத்தில் இருந்து வந்தது. அதில் தங்கத்தால் ஆன வளையங்கள் மூலம் பற்களில் இணைக்கப்பட்டு இருந்தன.

பல் துளை போடும் கருவி பற்றி முதலில் ஹிப்போகிரட்டஸ் கூறியுள்ளார். அவர் கூறியுள்ள கருவி இரும்பால் ஆனது. கம்பியின் முனை கூறாகவும் வட்டமாகவும், இருந்தது. அதில் கயிறு சுற்றப்பட்டு அரை வட்ட வடிவமுள்ள கைப்பிடியுடன் இணைந்து இருந்தது.


''டென்டிஸ்ட்'' என்ற பெயர் முதலில் நவீன பல் மருத்துவத் தந்தை எனப்படும் பியரி பார்ச்சர்டுவினால் வழக்கத்திற்குக் கொண்டு வரப்பட்டது.

கி.பி. 1560ம் ஆண்டிலேயே பல் மருத்துவப் படிப்பு பல்கலைக் கழகப் படிப்பாக ஏற்றுக் கொள்ளப் பட்டது.

முதன் முதலாக ஆங்கிலத்தில் பல் மருத்துவப் புத்தகம் ஒன்று இ.பி.1685ஆம் ஆண்டு வெளியிடப் பட்டிருக்கிறது.


கி.மு. 10ஆம் நூற்றாண்டில் முடி திருத்துவோர்கள் பல் எடுக்க, பல் மருத்துவம் செய்ய அனுமதிக்கப் பட்டார்கள். பிறகு கி.பி.12-ஆம் நூற்றாண்டில், அவர்கள் சாதாரண முடி திருத்துபவர்கள், அறுவை சிகிச்சை முடி திருத்துபவர்கள் எனத் திரிக்கப்பட்டார்கள். அவர்களுக்குச் சட்ட திட்டங்களும் வகுக்கப்பட்டன.

ரோமானியர்கள் காலத்தில் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில், பிளாஸ்டிக் சிமெண்டாலும் தங்கம் மற்றும்



மின்சாரத்தால் இயங்கும் பல்துளைபோடும் கருவி

காரீயத்தினால் பற்கள் அமைக்கப் பட்டன. அப்பொழுது உபயோகத்தில் இருந்த பல் உபகரணங்கள் மர வேலை செய்பவர்களின் உபகரணங்களை ஒத்து இருந்தது.



**காற்றழுத்த உராய்பொருள் மற்றும் மிகையொலி துளைக் கருவிகள்**

முதல் துளை போடும் கருவி கைகளினால் சுற்றக் கூடியது, முனை வட்ட வடிவமாகவோ, நீள் வட்டமாகவோ இருந்தது.

கி.பி.1790ஆம் ஆண்டு ஜான்கிரீன் என்பவர் முதன் முதலில் கால்களினால் இயக்கப்படும் துளைக் கருவி (Foot Engine) யைக் கண்டு பிடித்தார். ஆனால் அது 1870-ம் ஆண்டு உபயோகத்திற்கு வந்தது.

ராபர்ட் பென் டேல் என்பவா பற்கூழ் (Pulp) வெளிப்படுத்தப் பட்டால் அதற்குக் கிராம்புத் தைலம் மற்றும் 'கேம்பர்'(கற்பூரம்) கொண்டு 'காட்டரைஸ்' பண்ணுவது பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

ஹண்டர் என்பவர் தான் பற்களை இடம் பெயர்த்து வைப்பது பற்றி (Transplanation) முதலில் கூறியுள்ளார். அவரே பிறகு இதனுடைய வெற்றி பெறும் சதவிகிதம் குறைவாக இருக்கிறது என்றும் பல்லை எடுத்துவிட்டுத் திரும்ப அதே இடத்தில் அந்தப் பல்லை வைப்பது, ( Re-implantation ) வெற்றி சதவிகிதம் நன்றாக இருப்பதாகவும் கூறியுள்ளார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் பீங்கான் பற்கள் செய்யப்பட்டன. இவைகள் வல்கனைட் எனப்படும் பிளாஸ்டிக் மூலம் பொருத்தப்பட்டன. இந்த வல்கனைட் நாட்பட வாயில் இருக்கும் போது துர் நாற்றம் வீசத்தொடங்கும், பிறகு அக்ரலிக் எனப்படும் ரெசின் பிளாஸ்டிக் அறிமுகப்படுத்தப்பட்டது.

# இன்று


அதிவேகப் பல் துளைபோடும் கருவி, காற்றழுத்த மின்னோடி (Airotor) இப்போது உபயோகத்தில் உள்ளது. இது நிமிடத்திற்கு 2 முதல் 4 இலட்சம் முறை சுற்றும் மற்றும் பல் சூடாகாமல் இருக்க தண்ணீர் தொடர்ந்து வந்து கொண்டிருக்கும்.

உட்கார்ந்து பல் மருத்துவம் செய்யும் முறை (Sitting dentistry) நான்கு கைகள் பல் மருத்துவ முறையில் (Four hand dentistry) இரண்டு மருத்துவருடைய கைகள், இரண்டு உதவியாளர்கள் கைகள் இப்போது உபயோகத்தில் உள்ளது. இது பல் மருத்துவரின் வேலையை எளிதாக்குவதோடு அவர்கள் களைப்படைதலையும் ஒத்திப்போடுகிறது. அதன் மூலமம் சிறந்த வைத்தியத்தைத் தொடர்ந்து அளிக்க முடிகிறது.

உடல் வடிவமைக்கப்பட்ட (Body contour) நாற்காலிகள் நோயாளிகளுக்கு உபயோகப்படுத்தப்படுகின்றன. இது அவர்களின் வசதியை அதிகமாக்குவதோடு, களைப்படைதலையும் ஒத்திப் போடுகிறது.

ஒளிநார் விளக்கு (Fbtro-optc light) உபயோகத்தில் உள்ளது. இதனால் இருட்டாக உள்ள வாயில் நல்ல வெளிச்சம் கொடுக்க முடிகிறது.

மிகையொலிக் கருவி (Ultra sonic) மூலம் பற் காரையைச் சுத்தம் செய்தல் முறை-வலியற்ற அதே சமயத்தில் பல் மருத்துவருக்குக் களைப்பு ஏற்படுத்தாத வகையில் பற் காரையை நீக்க உதவுகிறது. மிகையொலி பல் உட்கருவி (Endosonic) யுடன் இணைந்த பிளீச்சிங் கரைசல் கொண்டு கழுவுவதன் மூலம் பல்லின் உட்பகுதியைச் சுத்தம் செய்யும் முறை மிகவும் பயனுள்ளது. இது பல்லின் உட்பகுதியில் உள்ள நுண் கிருமிகளை அழிக்கிறது.




**கம்ப்யூட்டருடன் இணைந்த பீங்கான் உலை**

'பல்' எக்ஸ் கதிர்கள் படம் பல் மற்றும் பற்புறத் திசுவின் நோய்களைக் காண உதவுகிறது.

உலோகத்துடன் இணைந்த பீங்கான், நிலையான பொய்ப்பற்கள் செய்வதற்கும் பல்லுக்கு உறை போடுவதற்கும் பயன்படுத்தப்படுகின்றது. இதில் ஏனைய பற்களின் நிறத்தைஅப்படியே உருவாக்கலாம். அத்துடன் இது மிகவும் நிரந்தரமானது. உலோகத்துடன் இணைந்த பீங்கானானதால் இது மெல்லும் சக்தியை எதிர்த்து உடையாமல் நெடு நாட்கள் உபயோகப்படக் கூடியது. பீங்கான் பல் செய்வதற்கு கம்ப்யூட்டருடன் இணைந்த நவீன உலை உபயோகப்படுத்தப்படுகிறது.

பற் திசு நோய் வந்தாலும், பற்களைத் தாங்கும் எலும்பில் கட்டி வந்து விட்டாலும் கூட பற்களை, பற்கூழ் அகற்றி, மருந்து அடைக்கும் சிகிச்சையின் மூலம் காப்பாற்றும் முறை மிக வளர்ச்சியுற்று உள்ளது. பற்களின் வேர் மட்டுமே இருந்தாலும் அந்த வேரை வைத்துப் பற்களைக் கட்டும் முறை இப்போது நடைமுறையில் உள்ளது.

பற்களைத் தாங்கும் எலும்பு ( Alveolar bone ) கரைந்து விட்டாலும் பற்களை எடுக்காமல், எலும்புக்கூட்டு (Bonegraft) அல்லது வேறு சில பொருட்களை உபயோகித்துக் காப்பாற்ற முடிகிறது.

எல்லா பற்களையும் கட்டும் போது எலும்பில் பதித்துக் (Implant) கட்டும் முறை உபயோகப்படுத்தப்படுகிறது. இதனால் பற்கள் ஸ்திரமாக எலும்பில் பொருத்தி வைக்கப்படுகின்றன.

மின் சக்தியைக் கொண்டுஅறுவை சிகிச்சை (Electro surgery) மற்றும் குளிரூட்டப்பட்ட கருவியைக் கொண்டு அறுவைச் சிகிச்சை ( Cryo surgery ) முறையினால் இரத்தச் சேதம் குறைகிறது. இத்துடன் இரத்தக் குழாய்களை நூலினால் கட்ட வேண்டிய அவசியம் இல்லாததால்(இரத்தத்தை உறைய வைத்து விடுகிறது) அறுவைச் சிகிச்சைக்குத் தேவையான காலம் குறைகிறது. மற்றும் மிக நுண்ணிய முறையில் சிகிச்சையும் செய்ய முடிகிறது.

தொடர் அழுத்தத் தகடுகள் ( Dynamic compression plates ) மூலம், தாடை, எலும்பு முறிவுக்கு சிகிச்சை செய்யப்படுவதால் தாடைக்கு ஓய்வு காலம் மிகவும் குறைக்கப்பட்டுள்ளது. அதிக நாட்கள் ஓய்வு கொடுக்கத் தேவையில்லாததால், உபயோகப்படுத்தாததால் ஏற்படும் தசையிறுக்கத்தைத் தவிர்க்கலாம்.

ஒளியினால் திடமாகக் கூடிய பொருட்களின் (Light cure filling) உதவியால் பற்களை அடைப்பதும், உடைந்த பற்களைச் சரி செய்யவும் கறைபடிந்த சுருங்கிய சிறு பற்களையும் சரி செய்ய முடியும். இவைகள் பற்களின் நிறத்தை அப்படியே ஒத்து இருக்கும்.

பெரியதாக மற்றும் மிகச் சிறியதாக விகாரமாக இருக்கும் தாடை எலும்புகளை அறுவைச் சிகிச்சை ( Orthognatic surgery ) மூலம் சரி செய்யலாம்.

பொருத்தப்பட்ட பற் கிளிப்புகளின் மூலம் கோணலான பற்

கள் நல்ல முறையில் சீரமைக்கப் படுகின்றன.

பற்கூச்சத்திற்கு மின் உந்து சக்தியினால் அனுப்பப்பட (Iontophoresis) மருந்து மூலம் குணமாக்கப்படுகிறது.

புதிதாக உபயோகத்திற்கு வந்திருக்கும் பல்மானி (Dentometer) மூலம் பல் களின் நிலைமை மற்றும் பல் வேரின் ஆழம், பல்லில் இட்ட துணையின் முனை எங்கு இருக்கிறது என்பது பற்றியும் அறியலாம்.

சீரோ எக்ஸ்-கதிர் படம் (Xero-Radiography) மூலம் எக்ஸ்-ரே படம்பிடிக்கும் முறையில் தசைகள் மற்றும் எலும்புகள் இரண்டின் படமும் ஒரே படத்தில் இருக்கும். மற்றும் கதிரியக்கம் மூன்றில் இரண்டு பங்கு குறைவு. அத்துடன், படம் மிக நுண்ணிய முறையில் தெளிவாக இருக்கும். இதற்கு பிலிம் தேவையில்லை. சாதாரண காகிதத்திலேயே அச்சில் கிடைக்கும்.

வாயில் உள்ள நுண்ணுயிர்களின் உட்கரு அமிலங்களின் (D.N.A.) வகையினைக் கண்டறிந்து அதன் மூலம் ஒருவர் ஈறு நோய் வருவதற்கு வாய்ப்புகள் எவ்வளவு எனக் கண்டறியலாம். இதன் மூலம் நோய் வருவதற்கு முன்பே தடுத்து விடலாம்.

பற்களில் உள்ள படிவுகளில், நுண்ணுயிர்களின் வகையின் சத விகிதத்தைக் கண்டறிவதன் மூலம் ஈறு நோய் குணமாகின்றதா எனக் கண்டறியலாம்.

மரத்துப் போகப் போடப்படும் ஊசியை நரம்புக்கு அருகில் போடுவதற்குப் பதிலாக, பற்புறத் திசுக்களிலேயே செலுத்தும் கருவி உள்ளது. இதனால் ரத்தப் போக்கு நோய் உள்ளவர்களுக்கு, ஊசி போடுவதால் வரும் ரத்தக் கட்டி (Hematoma) வருவதில்லை.

ஒரே கதிரியக்க வீச்சில் ஒரே படத்தில் எல்லா பற்கள் மற்றும் தாடை எலும்புகள் மூக்கு எலும்புகளைப் படம் பிடித்துத் தரும் கருவி (Orthopantamograph) உபயோகத்தில் உள்ளது.

மிகப் பெரியதாகவோ சிறியதாகவோ பொருத்தமற்ற உள்ள தாடை எலும்புகளைச் சீராக்க அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டுமானால் எந்த அளவிற்கு எங்கு எலும்பை ஒட்டவோ, சேர்க்கவோ வேண்டும் என்பது பற்றியும் சிகிச்சைக்குப் பிறகு எந்த அளவிற்கு முன்னேற்றம் இருக்கும் என்பது பற்றியும் கம்ப்யூட்டர் உதவியுடன் ஆராய்ந்து தெரிந்து கொள்ளலாம்.



## உறுதியான பல்!

**காந்திஜி லண்டனில் தங்கியிருந்த போது டாக்டர் ஜோஸய்யா ஒல்ட்ஃபீல்ட் என்பவர் மிகவும் நெருங்கிப் பழகியவர் ஆவார். இவர் காந்திஜியைப் பற்றி எழுதிய ஓர் நூலில் குறிப்பிட்டிருப்பதாவது:**

**"லண்டனில் ஒரு சமயம் மகாத்மா காந்திஜிக்குப் பல்வலி உபாதை கொடுத்துக்கொண்டிருந்தது. அதைப் பிடுங்கிவிட அவர் என்னிடம் வந்தார். நானும் பல்லைப் பிடுங்கும் ஆயுதத்தைக்கொண்டு அவருக்கு வலிதந்த அந்த பல்லைப் பிடுங்க முயன்றேன். அப்பா! என்ன அழுத்தம்! என்ன உறுதி! இவ்வளவு அழுத்தமான பல்லை நான் அதுவரை பிடுங்கினதே இல்லை பாவம்! காந்திஜிக்கு என்ன வலிக்குமோ? என்று கவலைப் பட்டேன். ஆனால் அவர் 'உஸ்' என்று கூட சொன்னதில்லை. உடம்பையும் ஆட்டவோ, அசைக்கவோ இல்லை. அத்தனைப் பொறுமையுடனிருந்தார். பிரமித்துவிட்டேன்! அடேயப்பா! என்ன மன உறுதி அவருக்கு? யாருக்குத் தலைமுடியும், பல்லும் எவ்வளவுக்கெவ்வளவு உறுதியாக இருக்கின்றதோ அவர்கள் அவ்வளவுக்கவ்வளவு மனஉறுதியுடன் இருப்பார்கள் என்று கூறுவதை நான் அப்போதுதான் உணர்ந்தேன்!"**

**தகவல்:**

**ரகமி**

# நாளை

கம்ப்யூட்டரின் உபயோகம் பல் மருத்துவத்தில் மிக அதிகமாக இருக்கும். பற்களுக்கு உறை போட வேண்டுமென்றால் பல்லைத் தேய்த்த பிறகு ஒரு கம்ப்யூட்டரின் உதவியால் அளவு எடுத்து அதுவே பல்லுறை செய்து கொடுத்துவிடும். அதை சிமெண்டின் மூலம் ஒட்டி விட்டால் போதும்.

பற்குழி நோய் முற்றிலுமாக அழிக்கப்பட்டு இருக்கும். இது புளூரைடு உபயோகத்தினாலும், பற் குழிகளுக்கு எதிர் சக்தியூட்டும் மருந்துகளினாலும் சாதிக்கப்பட்டிருக்கும்.

பற்களில் வேதியியல் முறைப்படி ஒட்டக் கூடிய பொருட்களினால் பல் அடைக்கப்படும். இதனால் பற்களில் துவாரம் செய்வது மிகவும் குறையும்.

லேசரின் உபயோகம் மிக அதிகமாக இருக்கும். லேசர் பற் சூழ் கால்வாயின் நுண் கிருமிகளை அழிக்கவும், வேர் துளை மற்றும் அதிகப் படியான துளைகளையும் மூடவும் உபயோகப்படுத்தப்படும். பல்லின் ஓரத்தை உருக்கி பல் அடைக்கும் பொருளை வைத்து இரண்டையும் ஒன்றாக வேதியியல் முறையில் இணைக்க லேசர் பயன்படுத்தப்படும்.

நுண் காந்த அலை மானி (Nuclear Magnetic Resonence) யின் உபயோகம் பல் மருத்துவத்தில் அதிகமாக இருக்கும். இதன் மூலம் பற் குழி மற்றும் பிற பல் நோய்களைப் பற்றி மிக முன்பே தெரிந்து கொள்ள முடிவதோடு அதைத் தடுக்கவும் முடியும்.

தடுப்புப் பல் சீரமைப்பு முறையும், மற்றும் பிற பல் சீரமைப்பு முறையும் மிகவும் முன்னேற்றம் அடைந்திருக்கும்.

கம்ப்யூட்டர் உதவியுடன் பல் மற்றும் பல்புற திசுக்களை (Three diamentional immaging) முகப்பரிமாண படம் எடுப்பதால் மூன்று அளவுகளில் பல் சூழ் கால்வாயை அடைக்க மற்றும் வேர் ஆழத்தின் மதிப்பை அறிந்து கொள்ளலாம்.

எலும்பு முறிந்தால் அதற்கு அறுவை சிகிச்சை மூலம் சேர்த்தல் அல்லது எலும்புக்கு ஓய்வு கொடுத்து சரி செய்வதற்குப் பதிலாக சையனோ அக்கிரிலேட் (Cyand acrylate) என்ற திசுக்களுக்கு உகந்த பிளாஸ்டிக்கால் உடைந்த எலும்பை ஒட்ட வைத்து விடலாம். இதன மூலம் எலும்புகளுக்கு ஓய்வு கொடுக்கத் தேவையில்லை.


செயற்கை வகை எலும்பு போன்றவற்றை உபயோகித்து, இழக்கப்பட்ட எலும்பின் பகுதியை நிவர்த்தி செய்து விடலாம்.

அழகியல் அறுவைச் சிகிச்சையில் (Cosmetic surgery) சையலாஸ்டிக் (Sialastic) என்ற பொருளை உபயோகித்து, ஒட்டிய தாடைகள், குறைந்த வளர்ச்சியுற்ற கீழ்த்தாடை போன்றவற்றைச் சரி செய்யலாம். இந்த சையலாஸ்டிக் திசுக்களுக்கு மிகவும் உகந்த பொருள். இவற்றைத் திசுக்கள் எதிரியாகக் கருதாது.

'Fibronectn' எனப்படும் ஒரு செல் சுவரில் உள்ள புரதத்தை உபயோகித்து நோய்வாய்ப்பட்ட ஈற்றையும் பல்லையும் திரும்பவும் இணைக்கும் வாய்ப்பு உள்ளது.

பற்காரைகளைக் கரைக்கும் திறன் வாய்ந்த மருந்து, பற்களையோ, ஈறுகளையோ பாதிக்காமல் பல்லில் படர்ந்துள்ள காரையைக் கரைக்கும்.

பல் எக்ஸ்-கதிர் மானிட்டர் உபயோகத்தில் இருக்கும். இதன் உதவியுடன் பல் சூழ் கால்வாயைப் பெரிதாக்கும் போதும், அதை அடைக்கும் போதும் உட் பல் உபகரணங்கள் மற்றும் பற் சூழ் கால்வாய் அடைக்கும் பொருள்கள், பல் வேரின் முனையில் சரியாகப் பொருந்துகிறதா எனத் தொடர்ந்து பார்க்க முடியும்.



# அரசின் அரும்பணிகள்

✻ ''இந்தியாவிலேயே, தொழிற்சாலைகளில் ஏற்படும் விபத்துக்களின் அளவு, தமிழகத்தில்தான் மிகக் குறைவு'' என்று தொழிற்சாலைகளுக்கான தலைமை ஆய்வாளர் திரு எம்.டி. தண்டபாணி தெரிவித்தார்.

✻ சிதம்பரனார் மாவட்டத்திலுள்ள திருச்செந்தூர் நகரப் பஞ்சாயத்துக்குக் குடிநீர் மேம்பாட்டுத திட்டத்திற்கு ரூ. 71 இலட்சத்து 20 ஆயிரம் தமிழக அரசு வழங்கியுள்ளது.

✻ ஓய்வுபெற்ற ஆசிரியர்களுக்கு மருத்துவ 'இன்சூரன்ஸ் திட்டம்' கொணடுவருவது பற்றி அரசு பரிசீலனை செய்து வருகிறது.

✻ தென் ஆர்க்காடு மாவட்டம், பரங்கிப்பேட்டை அருகே கடலில் பெட்ரோல் ஊற்று இருப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. சுமார் 13 ஆயிரம் அடி ஆழத்திற்கு ''ரிக்'' எந்திரம் மூலம் கடலுக்குள் துழாய்க் கிணறு தோண்டப்பட்டட்து. பெட்ரோல் பீறிட்டு வருகிறது. அந்தப் பகுதியில் 29 கிலோ மீட்டர் பரப்பளவுக்குக் கடலுக்குள் பெட்ரோல் இருப்பது தெரியவந்துள்ளது. அதிலிருந்து தினமும் 2,470 பீப்பாய் டன் தினமும் 55 ஆயிரத்து 868 கியூபிக் மீட்டர் எரிவாயுவும் அங்கு கிடைக்கிறது.

✻ சிறு தொழில்களுக்கு இந்த ஆண்டு ரூ. 150 கோடி நிதி உதவி அளிக்க தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் திட்டமிட்டுள்ளது.


✻ சென்னைக் கடற்கரை காமராஜர் சாலையில் உள்ள மீனவர்குப்பம் மற்றும் குடிசைப் பகுதிகளில் வாழும் மக்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீரை அந்தக் குப்பம் அல்லது குடிசைப் பகுதியிலேயே வழங்குவதற்கான திட்டம் ரூ 15 இலட்சம் செலவில் நிறைவேற்றி முடிக்கப்படும்.

✻ சேலத்தில் 150 ஏக்கர் பரப்பில் மருத்துவக்கல்லூரி ரூ. 6.50 கோடி செலவில் கட்டப்பட உள்ளது. நிலம் கையகப்படுத்தும் பணி முடிந்துவிட்டது.

✻ பல ஊழியர்கள் சேர்ந்து பல நாட்கள் சிரமப்பட்டு எடுக்கும் குப்பைக் கூளங்களை ஏறத்தாழ ஒரு மணி நேரத்தில் 10 டன் குப்பைகளை அகற்றிடும் ஆற்றல் கொண்ட 'பிரண்டுஎன்ட் லோடர்' என்ற புல்டோசர் இயந்திரத்தைச் சென்னை மாநகராட்சி வாங்கியுள்ளது. சாலை ஆக்கிரமிப்புகளை அகற்றவும் இந்த இயந்திரம் பயன் படுத்தப்படுகிறது.

✻ சென்னை ஏற்றுமதி பதனீட்டு மண்டபத்தில் (எம்.இ.பி.இ.ஸப்) இரண்டாவது திட்டப் பணிகளைத் தொடங்க தமிழக அரசு மேலும் 223 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்ய ஒப்புக்கொண்டு உள்ளது என்று சென்னை ஏற்றுமதி பதனீட்டு மண்டல மேம்பாட்டுப் பிரிவு ஆணையர் திரு டி.எம். ஆறுமுகம் 8.9.88 அன்று சென்னையில் கூறினார்.

—அ. மருது



## ''விபத்து இல்லாமல் விருது''

விபத்து இல்லாமல் பேருந்துகள் ஓட்டிய திருவள்ளுவர் போக்குவரத்துக்கழக ஓட்டுநர்கள் 35 பேருக்கு, 'இந்துஸ்தான் பெரடோ' நிறுவனத்தின் சார்பில் பதக்கங்கள் வழங்கும் விழா 10-9-88 அன்று சென்னையில் நடைபெற்றது. விழாவிற்குத் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத் தலைவர் திரு எஸ். ஜெயராமன் தலைமை வகித்தார்.

பரிசுகளை தமிழக அரசின் போக்குவரத்துத் துறைச் செயலாளர் திரு எஸ்.சிவசுப்பிரமணியன் வழங்கினார். விழாவில் போக்குவரத்துத்துறை ஆணையர் திரு எம். பி. பிரானேஷ், திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக நிர்வாக இயக்குநர் திரு. கோட்டீஸ்வரன், 'இந்துஸ்தான் பெரடோ' நிர்வாக இயக்குநர் திரு. அமர்சிங் ஆகியோர் உரையாற்றினார்கள்.




# உங்கள் வளர்ச்சிக்கு எங்கள் பாதுகாப்பான திட்டங்கள்

தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி உங்கள் வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கான சிறந்த பல சேமிப்புத் திட்டங்களை வகுத்துள்ளது.

இன்றே வருவீர்—உங்கள் வாழ்க்கை வளம்பெற செய்திடுவீர்.

உங்கள் சேமிப்பிற்கு $\frac{1}{4}$% கூடுதல் வட்டி உண்டு.

- சேமிப்புத் திட்டம்
- நிரந்தர வைப்புத் திட்டம்.
- தொடர் வைப்புத் திட்டம்.
- ரொக்க சான்றிதழ்.
- சிறப்பு வைப்பீட்டுத் திட்டம்.

TNSC BANK

தமிழ்நாடு மாநிலத்
தலைமைக் கூட்டுறவு வங்கி லிட்.,
233, என்.எஸ்.சி. போஸ் சாலை,
சென்னை-600 001.

*TNSC வங்கி—வாழ்வுக்கு வளமூட்டும் வங்கி*

# நூல் நயம்

**அறிவுச்சுடர் ஏற்றிய அவினாசிலிங்கப் பெருந்தகை**

ஆசிரியர்: நா. கிருஷ்ணபாரதி, ஐ.ஏ.எஸ்

வெளியீடு: பூங்கொடி பதிப்பகம், 14, சித்திரைக்குளம் மேல் தெரு, மயிலாப்பூர், சென்னை-4.

விலை ரூ. 12 பக்கம்: 116

நாட்டு விடுதலைப்போரில் ஈடுபட்டு, அண்ணல் காந்தி அடிகளின் நெறியைப் பின்பற்றி கல்விப் பணியிலும் சிறந்து விளங்கி-ஆன்மீகத் துறையிலும் அங்கம் வகித்து, வாழ்க்கைப் பாதையில் வெற்றிக் கொடி நாட்டிய பெருமகன் இன்றும் நம்மிடையே வாழ்ந்து வரும் அருளாளர் அவினாசிலிங்கம் அவர்களின் வாழ்க்கை வரலாற்றை விளக்கும் நூல் இது.

அவினாசிலிங்கப் பெருந்தகை அவர்களால் தொடங்கப்பெற்ற ஸ்ரீஇராமகிருஷ்ண மிஷன் வித்யாலயத்தினால் உருவாக்கப்பட்ட அவரது மாணவரான திரு நா. கிருஷ்ணபாரதி அவர்களால் இந்நூல் எழுதப் பெற்றிருப்பது சிறப்புக்குரியது.

விடுதலைப்போராட்டக் காலத்தில் சிறைப்பட்ட போதிலும் அவினாசிலிங்கம் அவர்களின் சிந்தை தமது கல்வி நிலையத்தைக் குறித்தும், அதில பயின்ற மாணவர்கள் நலன் குறித்துமே இருந்து வந்தது. என்ற செய்தியை இந்நூலின் வாயிலாகத் தெரிந்து கொள்ள முடிகிறது.

'வள்ளுவன் குறள் வையகமெல்லாம் வாரி இறையடா தமிழா' என்ற பாடல் ஒரு காலத்தில் தமிழகம் எங்கும் முழங்கியபோதும், வள்ளுவரின் குறள் - பள்ளிக்கூடங்களில அதிகமாக எட்டாதிருந்த காலம் இருந்தது உண்டு. அவினாசிலிங்கப் பெருந்தகை அவர்கள், தமிழகக் கல்வி அமைச்சராக இருந்த காலத்தில் பள்ளிகளில் திருக்குறள் வகுப்பு நடத்தப்படவேண்டும் என்ற ஆணை விதித்து - திருக்குறளைப் பரப்பினார்.

அகிம்சை நெறியாலும் ஆன்ம பலத்தாலும் -அந்நிய ஆதிக்கத்தை அகற்றிய அண்ணல் காந்தியடிகளின் இயக்கத்தில் பங்கு பெற்றது மன்றி அண்ணலுடன் பழகும் வாய்ப்பும் பெற்றிருந்தவர் அவினாசிலிங்கப் பெருந்தகை. அது மட்டுமல்ல; கதர் இயக்கம் குறித்து அண்ணல் காந்தியடிகளிடமே வினாத்தொடுத்து, உரிய விடையைப் பெற்று, உள்ள மகிழ்ச்சி அடைந்திருக்கிறார் அவினாசிலிங்கப் பெருந்தகை என்ற செய்தியைப் படிக்கும்போது, அவினாசிலிங்கனாரின் மீது நமக்கு அன்பு மேலிடுகிறது.

போராட்டத்தின் காரணமாகச் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருந்த காலத்தில் தம்முடன் இராமாயணம், வில்லிபாரதம், சிலப்பதிகாரம் போன்ற நூல்களை எல்லாம் அங்கு எடுத்துச்சென்று, அவற்றைப் பயின்று, சிறைச்சாலையை ஒரு நூலகமாக மாற்றிக் கொண்டிருக்கிறார் என்னும் செய்தி அவினாசிலிங்கனாரின் மனத்திண்மையை எடுத்துக்காட்டுகிறது.

அவர் கல்வி அமைச்சராகப் பொறுப்பேற்றிருந்த காலத்தில் கல்வித்துறையில ஆற்றிய அரும் பணிகள் யாவும், இந்நூலில் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. அவற்றைப் படிப்போர், 'இத்தனை சாதனைகளா' என எண்ணி வியக்காமல் இருக்க முடியாது.

தமிழ்க் கலைக்களஞ்சியம், சிறுவர் கலைக் களஞ்சியம் ஆகியவை உருவாவதற்கு அவினாசிலிங்கனாரின் அருந்தொண்டுதான் காரணம் என்பதை எண்ணும்போது, தமிழ்ச் சமுதாயமே அவருக்கு நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறது என்றுதான் சொல்லவேண்டும்.

அவினாசிலிங்கம் பெருந்தகையின் வாழ்வில நடைபெற்ற சில குறிப்பிடத்தக்க செய்திகளின் பட்டியல் இடம் பெற்றிருப்பது பாராட்டுக்குரியது. இடையிடையே இணைக்கப்பெற்றுள்ள அவர் தொடர்பான புகைப்படங்கள் நூலுக்கு அணி சேர்க்கின்றன.

இந்நூல், இனிய எளிய நடையில் எழுதப்பட்டிருப்பது பாராட்டுக்குரியது. திருக்குறள் பிரியரான அவினாசிலிங்கம் அவர்களைக் குறித்த நூல் என்பதை நினைவூட்டும் வகையில், நூலின் ஒவ்வொரு அத்தியாயத்தையும் ஒரு திருக்குறளைக் கொண்டு நூலாசிரியர் தொடங்கியிருப்பது பொருத்தமானது.

இந்நூலைப் படிக்கும் போது நாலுடைத் தலைவரான அவினாசிலிங்கம் பெருந்தகை ஒரு வினோபாவாக - ஒரு வள்ளலாராக நமக்குக் காட்சி தருகிறார். அந்த அளவுக்கு அவரது வாழ்க்கை அமைந்திருக்கிறது என்பதை நூலாசிரியர் தக்க வகையில் விளக்கியுள்ளார்.

கல்விப்பணி செய்யும் கடமையாளரை - சமூகப்பணி செய்யும் ஒரு மாபெரும் துறவியை இந்நூலின் வாயிலாகத் தமிழ்ச் சமுதாயத்துக்கு எடுத்துக் காட்டியிருக்கிறார் நூலாசிரியர் என்றால் அது மிகையல்ல. மாணவர்களுக்குப் பாட நூலாக அறிமுகம் செய்வதற்குரிய தகுதி இந்நூலுக்கு நிரம்ப உண்டு.

— புலவர் சண்முகசுந்தரம்




**சிற்பம் சித்திரம் கோபுரம் கோயில்**

ஆசிரியர் : விக்கிரமன்

வெளியீடு: விக்கிரமன் பதிப்பகம், 2, ஜெயசங்கர் தெரு, மேற்கு மாம்பலம், சென்னை-600 033.

விலை ரூ. 16. பக்: 208

பதினைந்து திருத்தலங்கள் குறித்து எழுதப்பட்டுள்ள கட்டுரைகளின் தொகுப்பு இந்நூல், தமிழகத் திருத்தலங்கள் மட்டுமின்றி, வடபுலத்துத் தலம் குறித்தும், கேரள மாநிலத் தலம் குறித்தும் இந்நூலில் கூறப்பட்டுள்ளது.

திருத்தலங்களுக்கெல்லாம் நூலாசிரியர் பயணம் செய்து, அவற்றைப் பற்றிய பல அரிய, பழஞ் செய்திகளும், இன்றைய தகவல்களும் இடம் பெறும்வண்ணம் நூலைத் தீட்டியிருக்கிறார்.

பயண நூலாக-தொல்பொருள் ஆய்வு நூலாக - இலக்கிய நூலாக-தல வழிகாட்டி நூலாக இந்நூல் திகழ்கிறது. விறுவிறுப்பும் நகைச்சுவையும் மிளிரும் நடை, நூல் முழுதும் காணப்படுகிறது.

பேராசிரியர் கல்கியின் பாணி இந்நூலில் கையாளப்பட்டிருப்ப

தால், நூலைப் படிக்கும்போது பயண நூலைப் படிப்பது போன்ற உணர்வு நமக்கு ஏற்படவில்லை; சுவையானதொரு நவீனத்தைப் படிப்பது போன்ற உணர்வே ஏற்படுகிறது. இடை இடையே, திருத்தலங்கள், சிற்பங்கள், மூர்த்தி வடிவங்கள் ஆகியவற்றின் புகைப்படங்கள் இணைக்கப்பட்டிருப்பது நூலுக்குச் சிறப்புச் சேர்க்கிறது.

—தமிழ்ப்பித்தன்.

**நீங்களும் எழுதலாம்**

ஆசிரியர் : ராஜபாரதி

வெளியீடு: சந்திரா பதிப்பகம்
சி-391 சந்திரசேகரன் சாலை,.
பெரியார் நகர்,
சென்னை-600 082.

விலை : ரூ. 15. பக:112.

இந்த நவீன யுகத்தில் மக்கள் தொடர்புச் சாதனங்களில் வானொலிக்குத் தனி இடம் உண்டு. வானொலியின் வாயிலாகப் பல்வேறு செய்திகள் பொது மக்களை எளிதில் எட்டிவிடுகின்றன.

வானொலி நிகழ்ச்சிகளில் சித்திரம் என்னும் நிகழ்ச்சி தனிச் சிறப்புப் பெறுகிறது. சித்திரம் எப்படி எழுதுவது, உரைச் சித்திரத்தை எப்படி உருவாக்குவது என்பது குறித்து இந்நூலில் விவரமாக எழுதியுள்ளார் நூலாசிரியர்.

சித்திரம் யாரால், எப்போது அறிமுகம் செய்யப்பட்டது, அதன் வடிவமைப்பு எப்படி இருக்க வேண்டும், அவற்றிற்குரிய உத்திகள் யாவை, ஆகிய விவரங்கள் எல்லாம் இந்நூலில் நன்கு விளக்கப்பட்டுள்ளன. பல்வகைச் சித்திரங்கள் மாதிரிகளும் இந்நூலில் இடம் பெற்றிருப்பது பாராட்டுக்குரியது.

எழுத்தாளர்களுக்கு ஊக்கம் ஊட்டும் வகையில் நூலின் தலைப்பு 'நீங்களும் எழுதலாம்' என அமைக்கப்பட்டிருப்பது சிறப்புக்குரியது. சிறந்ததொரு தொழில் நுணுக்க நூலாக இது திகழ்கிறது.

—எஸ். எஸ்.சுந்தரம்

**தமிழில் இலக்கிய வரலாறு**

ஆசிரியர் : கார்த்திகேசு சிவத்தம்பி

வெளியீடு: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்,
41-பி, சிட்கோ எஸ்டேட்,
சென்னை-600 098.

விலை : ரூ. 30. பக்: 292

தமிழ் தொன்மை வாய்ந்தது, வன்மை வாய்ந்தது, வரலாறு உடையது என்றெல்லாம் நாமறிவோம். அந்த வகையில் நம் தமிழ் இலக்கியங்கள் உலக அறிஞர் பெருமக்களையும் கவர்ந்து வருகின்றன.

தமிழ் இலக்கிய வரலாற்றைப் பல அறிஞர்கள் பல்வேறு கோணங்களில் எழுதி வெளியிட்டிருக்கிறார்கள். 'தமிழில் இலக்கிய வரலாறு' என்னும் இந்த நூலை, யாழ்ப்பாணத் தமிழறிஞர் கார்த்திகேசு சிவத்தம்பி அவர்கள் எழுதியுள்ளார். ஒரு நல்ல தமிழாராய்ச்சியாளரின் கைவண்ணம் நூல்முழுதும் பளிச்சிடுகிறது. முறையோடு எழுதப் பெற்ற இந்நூல் முழுமை பெற்று விளங்குகிறது.

இந்நூல் நான்கு அத்தியாயங்கள் கொண்டது. தமிழில் இலக்கிய வரலாற்று ஆய்வு, அதன் வளர்ச்சிக் கட்டங்கள், இலக்கிய வரலாற்று ஆய்வில் பிரச்சினை மையங்களாக உள்ள செய்திகள், கருத்து மோதல்களுக்கு இடமளிக்கும் கால வகுப்பு-ஆகியவை இடம் பெற்றுள்ளன.

தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு நூலாசிரியர் தரும் ஆய்வுரைகள், அவர்தம் நுண்மான் நுழைபுலத்தை புலப்படுத்துகின்றது. தமிழ் ஆர்வலருக்கும், ஆராய்ச்சி மனப்பான்மை உடையோர்க்கும் இது நல்ல கையேடு.

**பயிர்களின் நோய்கள்**

ஆசிரியர்கள்: டாக்டர் கோ. அர்ச்சுனன்
டாக்டர் கா.சிவப்பிரகாசம்

வெளியீடு: நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்,
41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
சென்னை-600098

விலை: ரூ. 30 பக்கம்: 288

நாட்டின் பொருளாதார வளர்ச்சியில், வேளாண்மை முக்கிய அங்கம் வகிக்கிறது.

வேளாண்மையில் அமோக மகசூல் பெற்றிட, விஞ்ஞான யுக்திகளைக் கையாளும் காலமிது. அந்த வகையில் விதை, உரம், பூச்சி மருந்து என்று பலப்பலக் கண்டுபிடிப்புகள் வெளிவந்த வண்ணமிருக்கின்றன.

வேளாண்மை வளத்திற்கு எதிராகப் பயிர் நோய்கள் முக்கிய இடத்தை வகிக்கின்றன. பயிர் நோய்களினால் ஆண்டுதோறும் 10 சதவிகிதத்திற்குமேல் இழப்பு ஏற்படுகின்றது என்றும், இந்தியாவில் கோதுமைப் பயிரில் ஏற்படும் துரு நோயினால் ஏறத்தாழ 50 கோடி ரூபாய் இழப்பு ஏற்படுவதாகவும் இந்நூல் மூலம் தெரிந்து கொள்கிறோம்.

பயிர்நோய்களிலிருந்து பயிர்களைக் காப்பாற்றும் வழிமுறைகள் இந்நூலில் கூறப்பட்டுள்ளன. பயிர்களின் முக்கிய நோய்கள் என்னும் தலைப்பில், 86 வகையான நோய்கள் உள்ளன என்பதை அறியும் போது நமக்கு வியப்பு ஏற்படுகிறது.

நோய்த்தன்மை, பரவும் முறை, காப்பாற்றும் முறை எல்லாம் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளன. வேளாண்மைத்துறையில் உள்ளோர்க்கும், உழவர் பெருமக்களுக்கும், உழவர் மன்றங்களுக்கும் இந்நூல் சிறந்த கையேடாகும்.

— பி.வி. கிரி.

**மடியில் விழுந்த கனி**

ஆசிரியர்: பி.வி.கிரி
வெளியீடு; பூவழகி பதிப்பகம்,
29-2, சீனிவாசபெருமாள் சன்னதித் தெரு,
இராயப்பேட்டை சென்னை-14

விலை: ரூ.11 பக்கம்:148

கறுப்பு மச்சம், மானம், மனமாற்றம், மடியில் விழுந்த கனி, உள்ளத்தில் இல்லை ஊனம், மறுபிறவி முதலான 15 சிறுகதைகளைக் கொண்ட நூல்.

அநாதைப் பிணமாகக் கிடந்த ஒரு பெண்ணின் மானத்தைப் போக்கும் எண்ணம் அவ்வழியே சென்ற ஆயிரக் கணக்கானோர்க்கு இல்லை; படிப்பறிவில்லாத நாகரிகமில்லாத ஒரு கிராமத்தான் தனக்கு அபூர்வமாகக் கிடைத்த வேட்டியை அவள்மீது போர்த்தி அவளுடைய மானத்தைக் காக்கிறான் என்ற கருத்தமைந்த நல்ல கதை 'மானம்' என்பது.

உள்ளத்தில் ஊனமில்லை என்றால், வாழ்வில் நிச்சயம் வெற்றி பெறமுடியும் என்பதை உணர்த்தும் கதை 'உள்ளத்தில் இல்லை ஊனம்' என்பது.

சாதமத வேறுபாடற்ற சமுதாயம் மலர வேண்டும் என்றும், சுயமாகத் தொழில் செய்யும் இளைஞர்கள் பெருக வேண்டும் என்றும் ஆசிரியர்தம் கதைகளின் வழி அறிவுறுத்துகின்றார்

நல்ல கருத்தமைந்த கதைகளைக் கொண்ட நூல்.

—டாக்டர் சிவஅரசி முத்துக்காளத்தி

❀ படிப்போருடைய காலத்தை வீணாக்காமல் அதிகமான அறிவைக் கொடுக்கும் நூலை இயற்றும் ஆசிரியனே அதிகப் பயன் தருபவன் ஆவான்.

— சிட்னி ஸ்மித்

# குமரி மாவட்டத்தில் மேதகு ஆளுநர்



கடற்கரையை ஒட்டியுள்ள இணையம் கிராமம், நண்பகல் நேரம். பள்ளிச்சிறுவர்களும், சிறுமியர்களுமாக, கிராமத்துப் பெரியவர்களும், இளைஞர்களுமாக ஆயிரக் கணக்கில் ஆர்வத்தோடு குழுமியிருந்தனர்.

மேதகு தமிழக ஆளுநரின் குமரி மாவட்டச் சுற்றுப்பயணம் தங்களது சின்னஞ்சிறு கிராமத்திலிருந்து தொடங்குவதில் அவர்களுக்கு ஒரு பெருமை-பெருமிதம்!

**இணையம் கிராமத்தில் (21-8-88)**

ஆம்! ஆகஸ்ட் 21-ல் குமரி மாவட்டத்துக்கு வருகை தந்த ஆளுநரின் முதல் நிகழ்ச்சி இணையம் கிராமத்தில்தான்.

கடல் அலைகளின் அரிப்பால் கடந்த பல ஆண்டுகளாக-சொல்லப் போனால் பல நூற்றாண்டுகளாக, அவதிப்பட்டவர்கள் அந்த மக்கள். அவர்களது முறையீடு ''கடலின் சீற்றத்திலிருந்து தங்களது கிராமத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்காக ஒரு தடுப்புச்சுவர் கட்டவேண்டும்'' என்பதுதான்.

இந்தச் சுவர் எப்படி கட்டப்பட வேண்டும், அதனால் மீனவர்களுக்கு எந்த வகையில் பாதுகாப்பு கிடைக்கும் என்பதை விளக்கும் வகையில் வரைபடங்களும் தயாரிக்கப்பட்டிருந்தன.

மாவட்ட ஆட்சித்தலைவருடனும், சம்மந்தப்பட்ட மற்ற அலுவலர்களுடனும் விவாதித்த ஆளுநர், 'விரைவில் இந்த கோரிக்கையின் மீது நடவடிக்கை எடுக்கப்படும்' என்று கூறி உறுதி அளித்தார்.

**பத்மனாபபுரம் அரண்மனையில்**

ஆளுநரின் சுற்றுப்பயணத்தில் அடுத்த இடம் பத்மனாபபுரம் அரண்மனை. திருவாங்கூர் சமஸ்தான மன்னர்களின் உறைவிடமாக விளங்கிய சரித்திரச் சிறப்பு வாய்ந்தது இந்த அரண்மனை. அங்குள்ள மூலிகைக்கட்டில், ஓணவில், அணையாவிளக்கு ஆகியவை இங்கு தினந்தோறும் வரும் நூற்றுக்கணக்கான பார்வையாளர்களைக் கவரக்கூடியவை.

**அழகப்பபுரத்தில்**

ஆளுநர் முதல் அரசு நிகழ்ச்சியாக அழகப்பபுரம் என்ற கிராமத்தில் இந்திரா நினைவுக் குடியிருப்புத் திறப்பு விழாவிலும் மற்றும் குடிநீர்த்திட்டத் தொடக்க விழாவிலும் கலந்து கொண்டார். 42 குடியிருப்புகளைத் திறந்து வைத்த ஆளுநர் 'ஏழை-எளிய மக்களின் நலன்களைப் பாதுகாக்கும் வகையில் தொடர்ந்து திட்டங்கள் செயல்படுத்தப்படும்' என்று உறுதி அளித்தார். இந்த விழாவிற்கு ஊரக வளர்ச்சித்துறை ஆணையாளர் திரு வி. சுந்தரம் அவர்கள் தலைமை வகித்தார்கள். விழாவில் குமரி மாவாட்ட மக்கள் சார்பில் விவேகானந்தர் மண்டபம் பொறித்த நினைவுச் சின்னத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. என்.சுந்தரதேவன், அவர்கள் ஆளுநருக்கு வழங்கினார்:

**விவேகானந்தர் நினைவு மண்டபத்தில் (22-8-88)**

22.8.88 அன்று காலை குமரி முனையில் அமைநதுள்ள விவேகானந்தா நினைவு மண்டபத்தைப் பார்வையிட்ட ஆளுநர் அங்குள்ள குறிப்பேட்டில் கீழ்வருமாறு எழுதியுள்ளார்.

''இந்த விவேகானந்தர் நினைவு மண்டபம் ஆன்மீகத்திற்கும், மன அமைதிக்கும் சிறந்த ஒரு இடமாக உண்மையிலேயே விளங்குகிறது. இப் புனித இடத்தில் கால் வைத்த உடனேயே, இதனுடைய புனிதத் தன்மை என்ன என்பது என்னால் உணர முடிந்தது. குறிப்பாக இந்த மண்டபத்தின் தூய்மை என்னை மிகவும் கவர்ந்ததாக இருந்தது''

**பழவிளையில் பெருந்தலைவர் காமராஜர் திருவுருவச் சிலைத்திறப்பு**

நாகர்கோவிலை ஒட்டியுள்ள பழவிளை என்ற சிற்றூரில் காமராஜ் தொழில் நுட்பப் பயிற்சி நிலையத்தில் பெருந்தலைவர் காமராஜரின் திருவுருவச் சிலையைத் திறந்து வைத்த ஆளுநர், அந்த தியாகச் செம்மலின் சீரிய தேச பக்தியையும், பொதுநலத் தொண்டினையும் போற்றி நினைவு கூர்ந்தார்.

**ஆசாரி பள்ளத்தில்**

அடுத்து, ஆசாரிபள்ளம் என்ற ஊரில் உள்ள மிகப் பழமையான காச நோய் சிகிச்சை மருத்துவமனையில் அமரர் நேருஜியின் நினைவாக 13 லட்ச ரூபாய் செலவில் தொழிலாளர் நல வாரியத்தால்

கட்டப்பட்ட 30 படுக்கைகள் கொண்ட கட்டடத்திறப்புவிழாவில் ஆளுநரும், அவர் தம் துணைவியாரும் கலந்து கொண்டார்கள். இக்கட்டடத்தை ஆளுநரின் துணைவியார் திறந்து வைத்தார்கள். இந்நிகழ்ச்சியில் அரியதொரு சொற்பொழிவாற்றிய ஆளுநர், ''நவீன மருத்துவவசதிகள் மற்றும் படுக்கை வசதிகள் பெரிய நகரங்களிலும், பேரூர்களிலும் அதிக அளவில் கிடைக்கின்றன. கிராமங்கள் புறக்கணிக்கப்படுகின்றன. இந்த நிலை மாறி இத்தகைய வசதிகள் பட்டி தொட்டிகள் எங்கும் பரவலாக்கப்பட வேண்டும்'' என்பதை வலியுறுத்தினார்.

''தமிழ்நாட்டில் உள்ள டாக்டர்களில் 80 சதவீதம் நகராட்சிகளிலும், 20 சதவீதம் கிராமங்களிலும் வேலை பார்க்கிறார்கள்.மருத்துவத் துறைக்கு அரசு செலவிடும் தொகையில் அதிகப் பணம் நகரப் பகுதிக்குள் செலவிடப்படுகிறது. கிராமப்பகுதிகளுக்குக் குறைவாகச் செலவிடப்படுகிறது. மற்ற மாநிலங்களில் பணம் படைத்தவர்கள் தொண்டு நிறுவனங்கள் மூலம் மருத்துவத் துறையில் பெருமளவு ஈடுபட்டு வருகிறார்கள். தமிழ் நாட்டில் பணம் படைத்தவர்கள் கல்வி நிலையங்கள் திறப்பதில்தான் அதிகக் கவனம் செலுத்துகிறார்கள். அவர்கள் தொண்டு நிறுவனங்கள் மூலம் கிராமப்பகுதிகளுக்கு மருத்துவ வசதி அளிக்க முன்வர வேண்டும்''என்றும்கேட்டுக் கொண்டார்.

மேதகு ஆளுநர் அவர்கள் கலந்து கொண்ட அரசு விழாக்களில் நலிந்த பிரிவினருக்கு அரசு நலத்திட்ட உதவிகளையும் வழங்கினார். ஆளுநர் கலந்து கொண்ட நிகழ்ச்சிகளில் நாடாளுமன்ற உறுப்பினர்களும், அந்தந்தப் பகுதி மக்கள் பிரதிநிதிகளும் ஆயிரக்கணக்கில் பொதுமக்களும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

**டி. கே. டி. துரைராஜன்**

**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்.**

**நாகர்கோயில்**

**நாகரிகம் என்பது வாழ்க்கையின் தேவைகளை அதிகரித்துக்கொண்டே போவது அல்ல; தாமாகத் தேவைகளைக் குறைத்து, உழைத்து வாழ்வதே உயரிய நாகரிகமாகும்.**

**—காந்தியடிகள்**

# சேலத்தில் சார்பிடால் தொழிற்சாலை

சேலம் மாவட்டம், குமாரபாளையத்தைப் பதிவிடமாகக் கொண்ட 'டேன் இந்தியா' நிறுவனம் சிறப்பாக இயங்கி வருகிறது. இந் நிறுவனத்தின் ''வாட்டில்'' பிரிவு 1967ஆம் ஆண்டில் தோல் பதனிடும் தொழிலில் பயன்படும் 'வாட்டில் எக்ஸ்ட்ராக்ட்' எனப்படும் மூலப்பொருளைத் தயாரிக்க ஆரம்பிக்கப்பட்டது. அதுவரையிலும் நமது நாட்டின் முழுத்தேவையும் இறக்குமதி மூலமாகவே நிறைவேற்றப்பட்டு வந்தது.

இந்தத் தொழிற்சாலை நமது நாட்டில் மட்டுமல்லாமல் ஆசிய மற்றும் பசிபிக் நாடுகளிலேயே முதலாவதாகும். இத் தொழிற்சாலையின் வாட்டில் மற்றும் கடுக்காய் எக்ஸ்ட்ராட்களின் தரம் உலகத்திலேயே மிகச் சிறந்ததாகும்.

இந்த நிறுவனம், விரிவாக்கத் திட்டத்தின் கீழ் பல்வகைப் பொருள் உற்பத்தியைப் பெருக்கும் வகையில் 'சார்பிடால்' என்னும் தொழில்முறை இனிப்பான்ஒன்றைத் தயாரிக்க இருக்கிறது. மேற்கண்ட பொருள், மருந்து மற்றும் உணவுப் பொருள் தயாரிப்பில் பெரும் அளவில் உபயோகிக்கப்படுகிறது.

டாபியோகா ஸ்டார்ச்சு என்னும் குச்சிக்கிழங்கு மாவுடன் இறக்குமதி செய்யப்படும் என்சைம்கள் மற்றும் பல இரசாயனக் கலவைகளின் மூலம் 'சார்பிடால்' தயாரிக்கப்படுகிறது. 'டேன் இந்தியா' இந்தத் தயாரிப்பில் இறங்க முக்கியக் காரணம் தயாரிப்புக்கான மூலப் பொருள் மிக அருகாமையில் தேவையான அளவு கிடைக்கிறது என்பதே ஆகும். சேலம் மாவட்டம், நாட்டிலேயே உயர்தரமுள்ள 'டாபியோகா' என்னும் குச்சிக்கிழங்கு விளைச்சலில் தலைசிறந்ததுவிளங்குகிறது. தயாரிப்புக்குத் தேவையான மூலப்பொருள்களை வாங்குவதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் நிறுவனம் ஏற்கனவே செய்து வருகிறது.

ஹைட்ரோஜனேஷன் குச்சிக் கிழங்கு மாவிலிருந்து தயாரிக்கப்படும் குளுக்கோசுடன் இரசாயனக் கலவை செய்யப்படுவதன் மூலம் சார்பிடால் தயாரிக்கப்படுகிறது. சார்பிடாலுக்கு 'கிளிசரின் கிளைக்கால்ஸ்' மற்றும் சர்க்கரைப் பொருட்களுக்குரிய குணங்கள் உள்ளன.

சார்பிடால் 70% சுத்தமான, நிறமற்ற முறையில் தயாரிக்கப்படுகிறது. சார்பிடால் திரவம் நல்ல இன்சுவை மிகுந்தது. அதாவது, மிதமான, குளிர்ந்த, கசப்பில்லாத சுவை கொண்டது.

'சார்பிடால்' பல்வகைத் தொழில்களில் பலவிதங்களில் உபயோகப்படுகிறது. வைட்டமின்-சி தயாரிப்பில் இது முக்கியமான மூலப் பொருளாகவும், பல்வேறு மருந்து மற்றும் உணவுப் பொருள் தயாரிப்புத்துறைகளில் 'நிலைப்பானாக'வும், பிரட், கேக், கிரீம் மற்றும் இவை தொடர்பான இனிப்புப் பொருட்கள் தயாரிப்பிலும் பயன்படுகிறது. பொருட்களில் நீரளவை ஒரு குறிப்பிட்ட வரையறைக்குள் நிலைபெறச் செய்வது, புதியவையாகப் பாதுகாக்கும் தன்மை,சேதாரத்தடுப்பு ஆகியவை 'சார்பிடா'லின் தன்மைகளாதலின், அது குளிர்பானத் தயாரிப்பிலும், அவற்றில் சேர்க்கப்படும் பசை சேர்ப்பான்களை 'ஹார்மோனைஸ்' செய்வதற்கும் பயன்படுகிறது.

ஃபெர்மென்டேஷனைத் தடுத்து, புத்துணர்ச்சியுடன் கூடிய மிருதுத் தன்மையை வாய்க்கு அளிப்பதால் 'சார்பிடால்' பற்பசைத் தொழிலில் பெருமளவில் மூலப்பொருளாக உபயோகிக்கப்படுகிறது. தோலுக்கு இதமளிக்கும் திட, திரவ நிலை ஒப்பனைப் பொருட்கள்/ சாறுகள் தயாரிப்புத்துறையிலும் உபயோகிக்கப்படுகிறது.

'ஸர்ஃபாக்டண்ட்' எனப்படும் உணவு, ஒப்பனை, டைஸ் மற்றும் பெயிண்ட் தயாரிப்பில் பயன்படும் அயனிக் வகைப் பொருள் தயாரிப்பில் உபயோகமாகிறது.

இந்நிறுவனம் அமைப்பதற்கு மொத்தத் திட்டச் செலவு ரூ.5.66 கோடியாகும். இதில் இறக்குமதி செய்யப்பட்ட எந்திரங்கள் தொழில்நுட்பம் ஆகியவை மட்டும் ரூ. 2.25 கோடியாகிறது. அதிநவீன தயாரிப்புக் கட்டுப்பாடு இயந்திரங்கள் இந்தத் தொழிலகத்தில் நிறுவப்படும்.

''சார்பிடால் தொழிலகம்'' சேலத்தின் வளர்ச்சிக்கு ஒரு மைல் கல்.

**இரெ. மருதமுத்து,**

**உதவி மக்கள் தொடர்பு அலுவலர்,**

**சேலம்.**

# சிதம்பரனார் மாவட்டத்தில் மேதகு ஆளுநர் வருகை!

மேதகு தமிழக ஆளுநர் திரு. பி. சி. அலெக்சாண்டர் அவர்கள் 2 நாள் சுற்றுப்பயணமாக 22.8.88 அன்று சிதம்பரனார் மாவட்டத்திற்கு வந்தார். முதல் நிகழ்ச்சியாக அன்று மாலை தூத்துக்குடியில் சின்னக்கோவில் வளாகத்தில் நடைபெற்ற பொதுமக்கள் வரவேற்பில் கலந்து கொண்டார். விழாவில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு ரெ. ஆறுமுகம் தலைமையுரையாற்ற, வ. உ. சி. கல்லூரி தாளாளர் வரவேற்புரை ஆற்றினார்.

தனக்கு அளிக்கப்பட்ட வரவேற்புக்கு நன்றி கூறி, மேதகு ஆளுநர் அவர்கள் உரையாற்றும்போது,

''39 ஆண்டுகளுக்குப்பின் தூத்துக்குடி நகர மக்களை மீண்டும் சந்தித்ததில் மகிழ்ச்சி அடைகிறேன். 1950 முதல் 1952 வரை உதவி கலெக்டராக இங்குதான் நான் பணியைத் துவங்கினேன். தமிழக ஆளுநர் பொறுப்பை ஏற்றுக் கொள்ள வந்தவுடன், தூத்துக்குடி மக்களைச் சந்திக்க வேண்டும் என்று ஆவலில் இருந்தேன். 2 நாள் அந்த மகிழ்ச்சியை அனுபவிக்க வந்துள்ளேன். இந்தப் பழம்பெரும் புகழ் வாய்ந்த மண்ணில் பிறந்த சுப்பிரமணிய பாரதியார், வ.உ. சிதம்பரனார், வீரபாண்டிய கட்டபொம்மன் போன்ற வரலாறு படைத்தவர்களை நினைவுகூர்கிறேன்.

''தமிழக முன்னேற்றத்திற்குத் தொழில் வர்த்தக முன்னேற்பாடுகள் அவசியம் வேண்டும். சிறு தொழில்கள் முன்னேற்றம் இருந்தால்தான் நல்ல எதிர்காலம் அமையும். இதற்கு மூன்று வழிமுறைகள் உள்ளன. தேவையான மின் சப்ளை, நிதி வசதி, சிறுதொழில் முனைவோருக்குத் தேவையான ஊக்கம் தரப்பட வேண்டும். சிறு தொழிலுக்கான நல்ல சூழ்நிலையை உருவாக்கவும், மக்கள் மனதில் நம்பிக்கையை உருவாக்கவும் கடந்த 5 மாதங்களாக உரிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறேன். மற்ற மாநிலங்களைப் போல தமிழ்நாட்டில் தொழில் தகராறு இல்லை. தமிழ்நாட்டைப் போல தொழில் அமைதி எந்த மாநிலத்திலும் கிடையாது. அந்த வகையில், தமிழ்நாடு பெருமையுடையது'' என்று குறிப்பிட்டார்.

விழாவில், படகு கட்டுவதற்கு 2 பேருக்குத் தலா ரூ. 3 இலட்சம் வீதம் மானியத்துடன் கூடிய கடன் தொகையும், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தில் தொழில் துவங்க 199 பேருக்கு 7 இலட்சம் ரூபாய் மானியத்துடன் கூடிய கடன் தொகையையும், சமூகநலத்துறையின் கீழ் 33 ஆயிரத்து 300 ரூபாய் மதிப்பில் 3 சக்கரச் சைக்கிள், தையல் இயந்திரங்கள், இஸ்திரிப் பெட்டிகள், சலவைக் கருவிகள், விதவை மகளிர் திருமண உதவித் தொகை ஆகியவற்றையும் வழங்கினார்.

பின்னர் தூத்துக்குடி டி. ஆர். நாயுடு தெருவில் இந்திய அதிகாரிகள் சங்கம் சார்பில் ரூ. 1 லட்சம் செலவில் கட்டப்பட்ட சிதம்பரனார் திருமண மண்டபத்தைத் திறந்து வைத்து, வ. உ. சிதம்பரனார் பெயரில் சேமநலத் திட்டத்தைத் துவக்கி வைத்தார்.

இரண்டாவது நாளான 23.8.88 அன்று காலையில், ஆளுநர் அவர்கள் ஸ்பிக் விருந்தினர் மாளிகையில் அமைக்கப்பட்டிருந்த கண்காட்சியினைத் துவக்கிவைத்த பின், மாவட்ட அலுவலர்கள் கூட்டத்தில் மாவட்ட வளர்ச்சிப் பணிகள் பற்றிய ஆய்வு நடத்தினார்.

பின்னர், தூத்துக்குடி மாவட்ட அரசுத் தலைமை மருத்துவமனையில் ரூ. 52 இலட்சம் செலவில் 260 படுக்கைகள் கொண்ட புதிய கட்டடத்தைத் திறந்து வைத்தார். மாநில மருத்துவத்துறை இயக்குநர் டாக்டர் முத்துக்குமாரசாமி தலைமையுரை ஆற்றினார். பொதுப் பணித்துறை கட்டடத் தலைமைப் பொறியாளர் திரு. சத்தியராமன் அறிக்கை வாசித்தார்.

> **நமது பெண்களை நாம் நமது அன்னையாக, சகோதரியாக, மகளாக மதிப்பதற்குக் கற்றுக் கொள்ளாவிட்டால் புத்துயிர் பெற்ற இந்தியாவை உருவாக்க முடியாது.**
>
> **—காந்தியடிகள்**

ரூ. 3.70 இலட்சம் மதிப்புள்ள 'அல்ட்ராசவுண்ஸ்கேனர்' கருவியை இயக்கவைத்து, கட்டடத்தையும் திறந்து வைத்து, ஆளுநர் அவர்கள் உரையாற்றும்போது, ''கிராமப் பகுதியில் மருத்துவ வசதியைப் பெருக்கவேண்டும் என்ற கருத்தை மனதில் கொண்டு, ஆரம்பச் சுகாதார நிலையங்களை அதிக அளவில் தமிழக அரசு திறந்து வருகிறது. இதுவரை 264 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் இருந்தன. ஆளுநர் ஆட்சியில் இதுவரை 414 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன. 1989 மார்ச் மாதத்திற்குள் இன்னும் புதிதாக 110 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் திறக்கப்பட்ட உள்ளன''.

''டாக்டர்கள், நர்சுகள் கிராமப் புறங்களிலும் வேலைக்குச் செல்லத் தயாராக வேண்டும். பெரிய நகரங்களில்தான் வேலை செய்ய முன் வருகிறார்கள். சுதந்திரத்திற்குப்பின்னர் 40 ஆண்டுகள் ஆகியும் கிராமப் புறங்களில் தேவையான மருத்துவ வசதி ஏற்படவில்லை. தமிழ்நாட்டில் உள்ள ஏழை மக்களுக்குக் குடிநீர், வீட்டுவசதி, உடைமைகள், உணவு வசதி முதலியவை செய்து கொடுக்கப்பெரும் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டியுள்ளது. ஆகையால் மருத்துவத்துறைக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்ய இயலவில்லை.

மாலை 3.30 மணியளவில் திருச்செந்தூரில் சிதம்பரனார் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் சார்பில் நடைபெற்ற ஆதிதிராவிடர்கள் குடியிருப்பு மற்றும் சமுதாய நலக்கூடங்கள் திறப்பு விழாவில் கலந்துகொண்டார்.

ஊரக வேலைவாய்ப்புத் திட்டம், இந்திரா நினைவுத் திட்டம் ஆகியவற்றின்கீழ் ரூ. 40 இலட்சம் செலவில் கட்டப்பட்ட 511 ஆதிதிராவிடக் குடியிருப்புகள், 20 சமுதாய நலக் கூடங்கள் ரூ. 40 இலட்சம் செலவில் கட்டப்பட்ட அருள்மிகு செந்தில் ஆண்டவர் அரசு மேல்நிலைப் பள்ளிக்கட்டடம் ஆகியவற்றைத் திறந்து வைத்தும், ரூ. 71 இலட்சம் செலவில் அமையவிருக்கும் திருச்செந்தூர் பேரூராட்சிக் குடிநீர்த்திட்டத்திற்கு அடிக்கல் நாட்டியும், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 2772 நபர்களுக்குக் கறவைமாடுகள் மற்றும் மானியத்துடன் கடன் உதவிகளையும் வழங்கியும் பேருரை ஆற்றினார்.

பின்னர், அன்று இரவு 7.30 மணியளவில் ஆழ்வார்திருநகரில் நடைபெற்ற குடிநீர்த் திட்டத் துவக்க விழாவில் கலந்து கொண்டு குடிநீர்த் திட்டத்தைத் துவக்கி வைத்தார்.

இவ்விழாவில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையேற்க குடிநீர் வடிகால்வாரிய மேலாண்மை இயக்குநர் திரு நா. ஆதிமூலம் அவர்கள் வரவேற்புரை ஆற்ற, தென்மண்டலத் தலைமைப்பொறியாளர் திட்டம் பற்றி விளக்கவுரை வழங்க, நாடாளுமன்ற உறுப்பினர் திரு தனுஷ்கோடி ஆதித்தன் வாழ்த்துரை வழங்கினார்.

ரூ. 50 இலட்சம் ரூபாய் செலவில் முடிக்கப்பட்ட இத்திட்டத்தினைத் துவக்கிவைத்து மேதகு ஆளுநர் அவர்கள் உரையாற்றும்போது, ''ஆழ்வார் திருநகருக்கு வந்து இந்நிகழ்ச்சியில் கலழ்ந்து கொள்வதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். இரண்டு நாட்களில் எனது சுற்றுப் பயணத்தில் 12 நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு உள்ளேன். எங்கும் மக்களின் மகிழ்ச்சியான முகத்தையும், உற்சாகத்தையும் காண்கிறேன்'' என்று குறிப்பிட்டார்.


தகவல்:

**கா. சம்சுதீன்**

**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்**

**சிதம்பரனார் மாவட்டம்**

# நெல் நுணுக்கங்கள்



தஞ்சையில் நடவு செய்தே நெல் சாகுபடியில் பழக்கப்பட்ட தஞ்சை விவசாயிகளுக்குத் தொடர்ந்து சில ஆண்டுகளாகக் காவிரிப் பாசன நீர்த் தட்டுப்பாடு காரணமாக, பருவத்தில் குறுவை நெல் விளைவிக்க முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இப்பகுதிக்குப் பழக்கமில்லாத நேரடி நெல்விதைப்பு முறையை விவசாயிகள் பின்பற்ற வேண்டிய ஒரு சூழ்நிலை 1987ஆம் ஆண்டு ஏற்பட்டது.

சென்ற ஆண்டு இம்முறையில் இம்மாவட்டத்திலும், இதர சில அண்டை மாவட்டங்களிலும் நேரடி நெல் விதைப்புச் செய்து நல்ல வெற்றியினை விவசாயிகள் அடைந்திருக்கின்றனர். மேலும், இவ்வாண்டு நிலவும் தட்பவெப்ப நிலையையும், மேட்டூர் நீர்த்தேக்கத்திற்கு வந்து சேரும் நீர் அளவையும் நோக்கும்போது, நேரடி நெல் விதைப்பைத் தொடர வேண்டிய நிலையில் உள்ளோம். சென்ற ஆண்டு இம்முறையைக் கடைப்பிடித்த உழவர்களின் அனுபவத்தாலும், ஆடுதுறை நெல் ஆராய்ச்சி நிலையத்தில் நடத்திய ஆய்வுகளின் பலனாலும், இவ்வாண்டு நேரடி நெல் விதைப்பு முறையைச் சிறப்பாகக் கடைப்பிடிக்க முடியும் என்பது திண்ணம்.

**நேரடி நெல் சாகுபடி நுணுக்கங்கள்**

**1. கோடை உழவு\நிலம் தயாரித்தல்**

கோடை மழையினைப் பயன்படுத்திப் பலமுறை உழவு செய்து நிலம் தயாரிக்க வேண்டும்.

இதனால் கட்டிகள் உடைக்கப்பட்டு நல்ல புழுதி கிடைக்கும்.

களை இல்லா நிலையும், வாய்க்காலில் நீர் வரத் தாமதப்படும்போது நீர் சேமிப்பும், நிலம் தயாரிப்பதில் நேர மிச்சமும் ஏற்படுகின்றன.

கோடை உழவினால், நிலம் தயாரிப்பதற்கு ஆகும் நீர்த் தேவையில் 50 சதவிகித நீர்ச்சேமிப்பும், கூடுதல் உற்பத்தியாக எக்டருக்கு 200-400 கிலோ நெல்லும் கிடைக்கின்றன.

அடித்தாள்களில் தங்கியுள்ள பூச்சி, பூசணங்கள் அழிக்கப்படுகின்றன.

எள் சாகுபடி செய்த நிலங்களில் நேரடி விதைப்பிற்கு நிலம் தயாரிப்பது மிகவும் எளிது.

மிகவும் முன்கூட்டியே கோடையில் பல முறை நன்கு புழுதி கிடைக்கும் வரை உழவு செய்த வயல்களில் களைகளின் தோற்றம் மிகக் குறையும்.

புதிய டெல்டா பகுதியில் மணற்பாங்கான மண் அமைப்பால் சில முறை உழவு செய்தால் மட்டுமே போதுமானது.

பழைய பாசனப் பகுதியில் களிவாகான நிலங்களைப் பலமுறை உழவு செய்வது அவசியம்.

கோடை மழையிலேயே வயல் மூலைகளைக் கொத்தியும், வரப்புகளை அண்டை கழித்தும், களை இல்லா நிலம் தயார் செய்தல் வேண்டும்.

சரிவான வயல்களில் பெரிய பாத்திகள் பிரித்து வைப்பது நலம். இதனால், மண் அரிப்பு தடுக்கப்படுவது மட்டுமல்லாது நிலத்தில் நீரும் சேமிக்கப்படுகிறது. இவ்வாறு செய்வதால் சிறிதளவு மழைநீர் கிடைத்தாலும் வடிந்து விரையமாகாமல் சேமித்து நல்ல பயன் பெறலாம்.

**2. இரகத் தேர்வு**

ஆகஸ்ட் மாதம் 1 முதல் 30 தேதி வரை விதைக்க: பொன்மணி (சி.ஆர்.1009) (150-155 நாட்கள்).

செப்டம்பர் மீ 1 முதல் 30ம் தேதி வரை: விதைக்க கோ.43, ஐ.ஆர்.20 ஏடிடீ 38, ஏடிடீ 39 வெள்ளை பொன்னி மற்றும் பொன்னி (125-135 நாட்கள்). அக்டோபர் மீ 1 முதல் 10ம் தேதி வரை விதைக்க: ஏடிடீ 37, ஏடிடீ 36 (105-110 நாட்கள்).

ஜூலை 15ம் தேதிக்குப் பிறகு டிகேஎம். 9 மற்றும் ஐஆர்50 இரகங்களை விதைக்கக் கூடாது. தாமதமாக விதைப்பதால் இந்த இரகங்கள் குலைநோய் தாக்குவதற்கு இலக்காகின்றன.

1987-88ஆம் ஆண்டில், நேரடி விதைப்பில் சிஆர்.1009, ஏடிடீ39, ஐ-ஆர்.20, மற்றும் கோ.43 இரகங்கள் நல்ல மகசூலைத் தந்திருக்கின்றன.

**3. விதை அளவு**

விதை முளைப்புத் திறன் குறைவாக இருக்கும் தருணத்திலும், வெறும் புழுதியில் விதைப்பதனாலும், நேரடி விதைப்பில் எலி மற்றும் அணில் போன்ற பிராணிகள் தாக்குதல் ஏற்பட வாய்ப்பிருப்பதாலும், இந்தச் சேதாரங்களைக் கருதி, எக்டேருக்கு 100 கிலோ விதை உபயோகிக்கலாம்.

நல்ல முளைப்புத் திறன் இருந்து, அனைத்து விதைகளும் முளைத்து விட்டாலும், தேவையான பயிர் எண்ணிக்கையை வைத்துக்கொண்டு எஞ்சிய நாற்றுக்களைக் களைந்து விடலாம். இந்நாற்றுக்களை நீர் வசதி இருப்பின் இதர வயல்களிலும் நடவு செய்யலாம்.

ஆனால் பல சூழ்நிலைகளில் விதைகள் முளைக்காத நிலையில் இடைவெளி நிரப்பப் போதுமான அளவு நாற்றுக்கள் கிடைக்க இந்த அளவு விதை உபயோகிப்பது பயனுள்ளதாக அமையும்.

அதிக தூர் விடும் பொன்மணி (சிஆர்.1009) போன்ற இரகங்களுக்கு எக்டேருக்கு 75 கிலோ விதை போதுமானது.

மேலும், நன்கு நிலம் தயார் செய்யப்பட்டு, அதிக அளவு முளைப்புத் திறன் கொண்ட விதைகளைப் பயன்படுத்தும்போதும், விதை முளைப்பதிலேயே எவ்வகை இழப்பும் ஏற்படாது என்பது திண்ணமானால், எக்டேருக்கு 75 முதல் 80 கிலோ விதை போதுமானது.

**4. விதை நேர்த்தி**

வறட்சியைத் தாங்கும் திறனை ஊக்குவிக்கும் வகையில் விதைகளை ஒரு சதவிகித பொட்டாஷ் (10கிராம் லிட்டர்) கரைசலில் விதை நேர்த்தி செய்ய வேண்டும்.

ஒரு கிலோ விதைக்கு, ஒரு லிட்டர், ஒரு சதவிகித பொட்டாஷ் கரைசல் என்ற அளவில் 18 மணிநேரம் ஊற வைத்து, பின் விதைகளை உலர்த்த வேண்டும்.

சென்ற ஆண்டு நேரடியாக விதைத்த நெற் பயிர்களில் சில இடங்களில் குலைநோய் தோன்றியது. இதற்கு ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் என்ற அளவில் கார்பென்டிசிம் அல்லது பைரோகுய்லான் என்ற மருந்தைக் கொண்டு விதை நேர்த்தி செய்வதால், சுமார் 45 நாட்கள் வரை நோயிலிருந்து பயிரைக் காக்கலாம்.

பின்பு 100 கிலோ விதைக்கு, உயிர் உரமான 2 கிலோ அசோஸ்பைரில்லத்தைக் கலந்து விதைக்க வேண்டும். 45 நாட்கள் வரை எவ்விதப் பாதிப்பும் இல்லாமலிருந்து, நீர் வந்தவுடன் செயல்படுகிறது.

இதனால், நாற்றுக்களின் வேர்கள் நல்ல வளர்ச்சி பெற்று ஆழத்தில் கிடைக்கும் நீரையும் பயன்படுத்தும் நிலை ஏற்படும். அவ்வகையில் வறட்சியைத் தாங்கி நிற்கும் நல்ல சூழ்நிலை உருவாகும்.

**5. விதை உறக்கம் நீக்குதல்**

சில நேரங்களில், தாளடி அல்லது பின் சம்பாப் பட்டங்களுக்குக் குறுவையில் அறுவடை செய்த விதைகளைப் பயன்படுத்த வேண்டிய நிலை ஏற்படலாம்.

இச்சூழ்நிலையில், ஏடிடீ.37 இரகத்தை அறுவடை செய்தவுடன் பயன்படுத்தக் கூடாது. ஏனெனில் இந்த இரகம் சுமார் 50 நாட்கள் விதை உறக்கம் கொண்டுள்ளது.

இந்த விதை உறக்கத்தைப் போக்க, ஒரு கிலோ விதைக்கு ஒரு லிட்டர் 0.5 சதவிகிதப் பொட்டாசியம் நைட்ரேட் (5 கிராம்-லிட்டர்) கரைசல் என்ற அளவில் ஒரு இரவு முழுவதும் ஊற வைத்து, காலையில் வடித்து, விதை மூட்டம் கட்டி விதைக்கலாம். இம்முறை, விதை உறக்கத்தை நீக்குவதோடு நாற்றுகள் நல்ல வளர்ச்சி அடையவும் உதவுகிறது.

**6. உர நிர்வாகம்\அடியுரம்**

தொழு உரம் அல்லது கம்போஸ் ஒரு எக்டேருக்கு 12.5 டன் விதம்



**காந்தியடிகள், விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டுச் சிறையிலிருந்த நேரம். அப்போது, ஆங்கிலோ இந்தியச் சிறையதிகாரியொருவர் காந்தியாரின் கையெழுத்துக் கேட்டுத் தனது சிறு கோட்புக்கை நீட்டினார்.**

**மகிழ்வுடன் அதைவாங்கிய அவர்- அன்போடிருக்கக் கற்றுக்கொள்; அதற்குக் காசு பணம் செலவில்லை. (It does not cost to be kind) என்றெழுதி, அதன்கீழே கையெழுத்திட்டுக் கொடுத்தார்.**

**முரட்டுச் சுபாவம் உடையவராயிருந்த அந்த அதிகாரி, அதற்குப் பிறகு முற்றிலும் மாறிவிட்டார்!**

---

கடைசி உழவிற்கு முன் இட்டு உழுது மடக்க வேண்டும். இயலாத நிலையில், எக்டேருக்கு750 கிலோ ஊட்டமேற்றிய தொழு உரம் இடவும். ஜிப்சம் எக்டருக்கு 500 கிலோவைக் கடைசி உழவின்போது இடவும்.

விதைக்கும்போது. எக்டேருக்கு 4 கிலோ அசோஸ்பைரில்லம் வயலில் இடுவதனால் வேர் வளர்ச்சி பெற்று, வறட்சி தாங்கும் சக்தியைப் பயிருக்குக் கிடைக்கச் செய்கிறது.

சிபாரிசு செய்யப்படும் எக்டேருக்கு 50 கிலோ மணிச்சத்தை விதைக்கும் போது அடியுரமாக இடவும்.

சிபாரிசு செய்யப்படும் எக்டேருக்கு 50 கிலோ சாம்பல் சத்தில், பாதி அளவில் (25 கிலோவை) அடியுரமாக இடவும்.

தழைச்சத்து உரத்தை அடியுரமாக இடத் தேவையில்லை.

நிலத்தில் ஈரமில்லாமையால் தழைச்சத்து பயிருக்குக் கிடைக்காது. மேலும், வெய்யிலில் ஆவியாகி விரையமாகும்.

**7. விதைப்பு**

நன்கு பண்படுத்திய நிலையில், நிலத்தில், மழையை எதிர்பார்த்து புழுதியில் சீராக வயலின் குறுக்கும் நெடுக்குமாக விதைக்க வேண்டும்.

விதைக்கும் கருவி கொண்டும் விதைக்கலாம்.

விதைகள் 2.5 செ.மீ. ஆழத்திற்குக் கீழ் போகாமல் விதைப்பதால் நன்கு முளைக்கும்.

விதைத்தவுடன் மாறு / மிலாறு அல்லது கொத்து / கம்பி கலப்பையைக் கொண்டு உழவு சால்கள் மறையும் வகையில் குறுக்காக ஓட்டி அல்லது இழுத்து இழுத்து விதைகளை மூட வேண்டும்.

**8. களைக் கட்டுப்பாடு**

முளைத்த 8வது நாளில், நிலத்தில் ஈரமிருக்கும்போது களை முளைக்குமுன், புடாகுளோர் அல்லது தயோபென்கார்ப் களைக்கொல்லியை எக்டேருக்கு 2.5 லிட்டர் என்ற அளவில் 50 கிலோ மணலுடன் கலந்து சீராகத் தூவவும்.

பிறகு 30-35 நாளில் ஒருமுறை கைக்களை எடுக்கவும்.

அல்லது விதை முளைத்த 2 வாரத்தில், களைக்கொல்லி இடாத நிலையில், களைக் கொத்து அல்லது கம்பி கலப்பை கொண்டு ஒருமுறை களை எடுக்க வேண்டும். இதனால், நீர் பற்றாக்குறையினால் வெடிப்பு ஏற்பட்டு கெட்டியான நிலை சரி செய்யப்படும்.

மீண்டும், ஒருமுறை, மழை அல்லது வாய்க்கால் நீர் வந்த பின் களை எடுக்கவும்.

**9. பயிர் கலைத்து நடுதல்**

மழை அல்லது வாய்க்கால் நீர் கட்டியவுடன், களை எடுத்து மிகவும் நெருக்கமாக இருக்கும் இடங்களிலிருந்து நாற்றுக்களை எடுத்து அதிக இடைவெளி உள்ள இடங்களில் நடுதல் வேண்டும்.

நேரடி விதைப்பில் தூர் வெடிக்கும் தன்மை குறைவாக இருப்பதால், சிஆர் 1009 இரகத்திற்கு சதுர மீட்டருக்கு சுமார் 100 குத்துகளும் இதர ரகங்களும் 150 முதல் 200 குத்துக்கள் இருக்கும் அளவுக்கு பயிர் எண்ணிக்கை பராமரிக்க வேண்டும்.

கலைத்து நடும்போது, பட்டம் பிரித்தால், பயிர் பாதுகாப்புச்

செயல் முறைகளுக்கு இலகுவாக இருக்கும்.

கலைப்பதிலே மீதமுள்ள நாற்றுக்களை இதர நிலங்களில் நடுவதற்கு உபயோகிக்கலாம்.

**10. மேலுரத் தேவை**

பொதுவாக, தூர் கட்டும் பருவமும் பஞ்சு கட்டும் பருவமும் மேலுரம் இடுவதற்கான முக்கியப் பருவங்களாகும்.

சிபாரிசு செய்யப்படும் அளவான எக்டேருக்கு 125 கிலோ தழைச் சத்தை 3-4 முறையாகப் பிரித்து இடுவது நல்லது.

முதல் மேலுரமிடும் போது எக்டேருக்கு 24 கிலோ துத்தநாக சல்பேட் இடலாம்.

எள் பயிரிடப்பட்ட இடங்களில் பரிந்துரைக்கப்படும் தழைச்சத்து உரத்தைவிட 20 சதவிகிதம் கூடுதலாகக் கொடுக்கவும்.

வயலில் நீர் கட்டியவுடன் அல்லது மழை பெய்து நீர் தேங்கியவுடன் முதல் முறையாகத் தழைச் சத்து மேலுரமாக இடவேண்டும்.

அடுத்து, மீதமுள்ள தழைச் சத்து உரத்தை 10 நாட்களுக்கு ஒருமுறையாகப் பிரித்து இடலாம்.

புதிய பாசனப் பகுதி மணற்பாங்கான நிலமாக இருப்பதால், முக்கியமாக அப்பகுதியில் பல முறை பிரித்து உரமிடுவது மிகவும் அவசியம்.

சிபாரிசு செய்யப்படும் பாதி அளவு சாம்பல் சத்தை (25 கிலோ-எக்டேர்)பஞ்சு கட்டும் தருணத்தில் மேலுரமாக இட வேண்டும்.

**11. இலைவழி உரமிடல்**

மழை இன்றி மேலுரமிட இயலாத நிலையில் 2 சதவிகித (2கிலோ லிட்டர்) டிஏபி கரைசலில் தெளிக்கவும்.

பயிரின் இளம் பருவத்தில் நீர் பற்றாக்குறையால் வாடும் அறிகுறிகள் தென்பட்டால் இயன்ற இடங்களில் பொட்டாஷ் உரக்கரைசலைத் தெளிக்கலாம்.

பயிரின் வளர்ச்சிப் பருவங்களில் வறட்சி ஏற்பட்டால், 2 சதவிகித பொட்டாஷ் அல்லது 1 சதவிகித பொட்டாசியம் நைட்ரேட் கரைசலைத் தெளிக்கலாம். இதில் 2 சதவிகித பொட்டாஷ் (20 கிராம்-லிட்டர்) கரைசல் உபயோகிப்பது நடைமுறைக்கு ஏற்றது. இதனால் பயிர்களுக்கு வறட்சியைத் தாங்கும் சக்தியை அளிக்க இயலும்.

**12. நீர் மேலாண்மை**

பொதுவாக நெற்பயிருக்கு நாற்றில் வளர்ச்சிக் காலங்களான, தூர் கட்டும் பருவம், பஞ்சு கட்டும் பருவம், பூக்கும் பருவம் மற்றும் பால் பிடிக்கும் பருவம் முக்கியமான நீர் தேவைப்படும் பருவங்களாகும்.

குறைந்த அளவு மழை நீர் கிடைக்கும் தருணத்தில், வயலின் குறுக்கே சரிவுக்கு ஏற்றாற்போல் சிறு கை வரப்புகள் வைக்கலாம்.

இதனால் தண்ணீர் வடியாமல் பயிர்களுக்கு நல்ல முறையில் நீர் கிடைக்க ஏதுவாகும்.

அதிக அளவு நீர் கிடைக்கும் போது, சுமார் 5 செ.மீ அளவுக்கு மேற்படாமல் நீர் தேக்குவது நல்லது.

போதிய அளவு நீர் கிடைக்கும் போது, நடவு செய்த பயிருக்குப் பரிந்துரைக்கும் நீர் மேலாண்மை சிபாரிசுகளையே கடைப்பிடிக்கலாம்.

புதிய பாசனப் பகுதிக்கு அடிக்கடி நீர் கட்ட வேண்டியது அவசியமாகும்.

நடவு நெல் சாகுபடிக்குப் பொதுவாக சுமார் 1000 முதல் 1200 மி.மீ. நீர் தேவைப்படுகிறது.

நேரடி நெல் விதைப்பு முறையில் நடவு நெல் சாகுபடியை விட, சுமார் 40 முதல் 50 சதவிகிதம் பாசன நீர் மிச்சப்படுகிறது.

**13. பயிர்ப் பாதுகாப்பு**

நடவு செய்த பயிர்களுக்குப் பரிந்துரைக்கப்படும் சிபாரிசுகளை, தேவையறிந்து பூச்சி மற்றும் நோய்களைக் கட்டுப்படுத்த உதவும் முறைகளையே கடைப்பிடிக்கலாம்.



**14. சாகுபடிச் செலவு**

பல முறை கோடை உழவு செய்வதால் நேரடி விதைப்பில் நிலம் தயாரிப்பதில் சற்றுக் கூடுதல் செலவாகிறது.

நேரடி விதைப்பில், நடவு செலவு முற்றிலும் இல்லை.

தகவல்: **இயக்குநர்**
**தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம், ஆடுதுறை.**

# குடிநீருக்கு ரூ.150 கோடி



தமிழகக் குடிநீர் வசதிகளுக்காக் இந்த ஆண்டில் 150 கோடி ரூபாய் செலவிடப்படும் என ஆளுநரின் ஆலோசகர் திரு ஜி.வி.இராம கிருஷ்ணா கூறினார்.

30.8.88 அன்று சிதம்பரனார் மாவட்டம் ஸ்ரீவைகுண்டம் பேரூராட்சியில் குடிநீர்த் திட்டத்தைத் துவக்கி வைத்து, நலிந்த பிரிவினருக்கான கடன் தொகைகளையும் வழங்கி ஆளுநரின் ஆலோசகர் பேசுகையில் கூறியதாவது:

"நடப்பு நிதி ஆண்டில் தமிழக மக்களின் குடிநீர் வசதிகளைக் கவனிக்க 150 கோடி ரூபாய் செலவிட தமிழக அரசு முடிவு செய்துள்ளது.

ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட நிறைவிற்குள் தமிழகத்திலுள்ள எல்லாக் கிராமங்களிலும் குடிநீர் வசதிகளை ஏற்படுத்த அரசு திட்டமிட்டுள்ளது.

இந்த ஐந்தாண்டுத் திட்டப்பணிகள் நிறைவடைய இன்னமும் ஒரே ஆண்டுதான் உள்ளது. இந்த ஓராண்டில் எல்லாக் கிராமங்களுக்கும் குடிநீர் வசதியைச் செய்து கொடுக்க மிகவும் சுறுசுறுப்பாகச் செயலாற்றி வருகிறோம்.

நெல்லை ,சிதம்பரனார் மாவட்டங்கள் வறட்சிக்கு உள்ளாகும் மாவட்டங்களாகும். இந்த மாவட்டங்களில்பருவமழைநீரைச்சேமித்து வைத்துப் பயன்படுத்த வேண்டியுள்ளது.

ஆகவே இம்மாவட்டங்களில் நிலத்தடி நீரை ஆழ்குழாய்க் கிணறுகள் மூலம் வறட்சிக் காலங்களில் பயன்படுத்தத் திட்டமிட்டுள்ளோம்.

இந்த ஆண்டு ஏப்ரல் முதல் ஜூலை மாதம் முடிய தமிழகத்தில் 4 ஆயிரம் ஆழ்குழாய்க் கிணறுகள் போடப்பட்டுள்ளன. கோடைக் காலப் பிரச்சினைகளைத் தீர்க்க இது பெரிதும் உதவும்.

இப்படிப்பட்ட திட்டங்களை ஊராட்சி ஒன்றியங்கள் பாதுகாத்து எந்திரப் பழுதுகளை அவ்வப்போது போக்கி சரிவரப் பராமரித்து வர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

நடப்பு நிதி ஆண்டில் இலவச மனைப்பட்டா வழங்கும் பணிகள் எல்லா மாவட்டத்திலும் சுறுசுறுப்பாக நடந்து வருகிறது.

70 ஆயிரம் ஆதிதிராவிடர் குடியிருப்புகள் இந்த ஆண்டில் கட்டி முடிக்கப்படும். தற்போது தமிழகம் முழுவதும் 42 ஆயிரம் குடியிருப்புகள் கட்டிமுடிக்கப்பட்டுவிட்டன.

இன்னும் நாலு அல்லது ஐந்து மாதங்களில் மீதமுள்ள அனைத்து வீடுகளும் கட்டி முடிக்கப்பட்டு விடும்," என்று கூறினார்.


# ஒருங்கிணைந்த வேளாண்மை வளர்ச்சிக்கு உதவும் "ஜீவன் தாரா" திட்டம்

தமிழகத்தில் நிறைவேற்றப்படும் வறுமை ஒழிப்புத் திட்டங்களின் செயல்முறை பற்றி ஆய்வு செய்ய மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகளின் திட்ட அலுவலர்கள் கூட்டம்தலைமைச்செயலகத்தில்2.9.88 அன்று நடைபெற்றது. இதுவரை நிறைவேற்றப்பட்ட திட்டங்களின் முன்னேற்றம் கண்டு ஆளுநரின் ஆலோசகர் டாக்டர் ஆ.பத்மநாபன் அவர்கள் மகிழ்ச்சி தெரிவித்தார். திட்டங்களைச் சிறப்பாகச்



செயல்படுத்துவதிலுள்ள தற்போதைய வேகம் மன நிறைவு அளிப்பதாகவும் வறுமை ஒழிப்புத் திட்டங்கள் நிறைவேற்றப்படும் விதம் பற்றி மகிழ்ச்சியடைவதாகவும் தெரிவித்தார். திட்டங்களின் பயன், தேவைப்பட்டோருக்கு முறையாகச் சேரவேண்டும் என்பதில் கவனமாக இருக்க வேண்டுமென அவர் அலுவலர்களைக் கேட்டுக் கொண்டார்.

ஆதிதிராவிடர் பழங்குடியைச் சார்ந்த சிறிய மற்றும் நடுத்தர விவசாயிகளுக்கு நன்மை பயக்கும் வகையில் ஓர் ஒருங்கிணைந்த செயல்முறை இருக்க வேண்டுமென்று வலியுறுத்தி, இவ்வகையில் ஜீவன் தாரா திட்டம், இத்தகையோருக்குத் தங்களுடைய நிலங்களின் முழுப்பயனையும அடைய உதவியாக இருக்கும் என்றார். ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், வேளாண்மை உற்பத்திக்கான பெருந்திட்டம் ஆகிய துணைத் திட்டங்களின் மூலம் நீர் இரைக்க டீசல், மின்சார மோட்டார் ஆகியவை கிணறு தோண்டியவர்களுக்கு அளிக்க வேண்டும்' என்றார். இவ்வகையான நிலங்களை வளம் பெறச் செய்ய ஓர் ஒருங்கிணைந்த திட்டத்தைக் கடைபிடிக்க வேண்டும். பயன் பெறுவோருக்குத் தங்கள் நிலத்தை மேம்படுத்தத் தேவையான வசதிகளாகிய கருவிகள், விதை, பூச்சிக் கொல்லி மருந்துகள், உரம் தவிர வேளாண்மைப் பல்கலைக்கழகம், வேளாண்மைத் துறையின் வழிமுறைகள் கிடைக்க உதவி செய்ய வேண்டும்" என்று அலுவலர்களை ஆலோசகர் கேட்டுக் கொண்டார். அனைத்துத் திட்டங்களிலும், நிர்ணயிக்கப்பட்ட குறியீடுகளை குறிப்பிட்ட கால அளவில் முடிக்க வேண்டும் என்று ஊரக வளர்ச்சி ஆணையாளர் திரு. வி. சுந்தரம் அவர்கள் கேட்டுக் கொண்டார்.




# தமிழரசு

தமிழ் — மாதம் இருமுறை

## சந்தா விவரம்

| | | |
|---|---|---|
| ஆண்டுச் சந்தா | ரூ. | 24.00 |
| 6 மாதச் சந்தா | ரூ. | 12.00 |

'தமிழரசு' — ஆங்கிலம்

| | | |
|---|---|---|
| ஆண்டுச் சந்தா | ரூ. | 12.00 |

6 மாதச் சந்தா ஏற்பதில்லை.

சந்தாத் தொகையை மணியார்டராகவோ, பாங்க் டிராஃப்ட் மூலமோ செலுத்தலாம்.

அனுப்பவேண்டிய முகவரி

உதவி இயக்குநர்
'தமிழரசு' அலுவலகம்,
அரசினர் தோட்டம்,
சென்னை-600 002.




# மீண்டும் பிறந்தால்!

ஒரு திங்கள் தமிழ்ப் பயிற்சி, காந்தியடிகளைப் பெரிதும் கவர்ந்ததெனில், முழுப் பயிற்சி அவரை என்ன செய்திருக்கும்? சபர்மதியிலிருந்துஅவரைத் துரத்தித் தாமிரபரணியிலன்றோ கொணர்ந்துசேர்த்திருக்கும். அவர் கூர்ஜரத்தில் பிறந்தவராயினும் அவரது வடிவ அமைப்பானது தமிழ் மகன் வடிவம்போல் தோன்றுதலும் உன்னத் தக்கது.

கோஹத்தியில் நடைபெற்ற இந்து-முஸ்லீம் குழப்பங்கேட்டு இருபத்தொரு நாள் உண்ணா நோன்பு அடிகள் ஏற்றபோது, 'திக்கற்றவருக்குத்தெய்வமேதுணை' என்னும் தமிழ்நாட்டுப் பழமொழியே அவருள்ளத்திலுற்று, அதுபற்றிய கட்டுரையும் 'யங் இந்தியா'வில் எழுதுவித்தது. "பிறப்புண்டேல் இறப்புண்டு" என்கிற பழமொழியிலும் அடிகட்கு அதிகப்பற்றுண்டாம்.

அடிகட்கு மீண்டும் பிறப்புண்டேல் அவர் தமிழ் நாட்டில் பிறப்பர் என்னும்உறுதி எனக்கு இருக்கிறது. ஆண்டவனே! காந்தியடிகளைத் தமிழகத்தில் பிறக்குமாறு செய்து, அவரைத் தமிழராக்கி, அவர் வாயிலாக, எனது அருமைக் கன்னிமொழியை வளர்க்கத் திருவருள் செய்க!

**திரு.வி. கல்யாணசுந்தரனார்**
'மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்'

# மகாத்மா வாழ்வில் சில மைல் கற்கள்!

**அண்ணல் மகாத்மா காந்தியடிகள் வாழ்க்கையில் நடந்த அரிய சம்பவ காலங்கள் இங்கே தொகுத்துத் தரப்படுகின்றன.**

குஜராத் மாநிலம் போர்ப்பந்தர் நகரில் *1869* அக்டோபர் *2*-ந்தேதி கரம்சந்த்-புட்லிபாய் தம்பதிகளுக்கு மகனாகப் பிறந்தார் அண்ணல் காந்தியடிகள்.

*1883*-ல் தனது *13*-வது வயதில் கஸ்தூரிபாயை மணந்தார். *1888*-ல் மேல்படிப்புக்காக இங்கிலாந்து பயணம்.

*1891* பாரிஸ்டர் பட்டம் பெற்று இந்தியா திரும்பினார்.

*1893* வழக்கறிஞர் தொழில் செய்ய தென் ஆப்ரிக்கா பயணம்.

கறுப்பர் என்பதால் வெள்ளையர்களின் அவமதிப்பு தாக்குதல்.

*1894* நேடால் இந்தியன் காங்கிரசை தொடங்கி வைத்தல்.

*1896* இந்தியா வந்து தென் ஆப்ரிக்கா- இந்தியப் பிரச்னை பறறி பிரச்சாரம்.

*1897*, மீண்டும் தென் ஆப்பிரிக்கா பயணம். துறைமுகத்தில் தாக்கப்பட்டு உயிர் தப்பினார். நிற வெறி ஆட்சியின் சட்டங்களுக்கு எதிர்ப்பு. இந்தியர்களைப் பதிவு செய்யும் சட்டத்தை ஏற்க மறுப்பு. வெள்ளை ஆட்சியின் வழக்கு, தனது போராட்டத்துக்கு சத்தியாக்கிரகம் என்று பெயரிட்டார்.

*1908*-ம் ஆண்டு ஜனவரி *10*-ந் தேதி *2* மாத சிறைத் தண்டனை. தென் ஆப்ரிக்க அரசுடன் சமரச உடன்பாடு. ஜனவரி *30*-ல் விடுதலை. அதே ஆண்டு அக்டோபரில் மீண்டும் கைது. டிசம்பரில் விடுதலை.

*1909* பிப்ரவரியில் மீண்டும் கைது. கைவிலங்கிட்டனர். மே *24*-ல் விடுதலை. ஜூன் மாதம் லண்டன் சென்று நவம்பர் மாதம் தென் ஆப்ரிக்கா திரும்பினார்.

*1913* நவம்பர் *11*-ல் சத்தியாக்கிரகம். *9* மாத சிறைத் தண்டனை.பலருடைய தலையீட்டால் டிசம்பர் *18*-ல் விடுதலை.

*1914* ஆகஸ்ட் *4* லண்டன் வந்தார். உலகயுத்தம் தொடங்கியது. தென் ஆப்ரிக்க சத்தியாக்கிரக வெற்றியைத் தொடர்ந்து *1915* ஜனவரி *9* பம்பாய் வந்து சேர்ந்தார்.

*1915* டிசம்பரில் பம்பாய் காங்கிரசில் பேசினார்.

*1916* நாடெங்கும் சுற்றுப் பயணம். காங்கிரசில் மிதவாதிகள் தீவிரவாதிகள் இடையே சமரசம் செய்ய முயற்சி.

*1916* டிசம்பரில் லட்சுமணபுரி காங்கிரசில் பங்கேற்றார்.

*1917* ஜனவரி முதல் மே வரை பீகார் மாநிலம் சாம்பரான் விவசாயிகளுக்காக அறப்போர்.

*1918* உலகயுத்தத்தில் ஈடுபட்ட இங்கிலாந்து அரசுக்கு ஆதரவு. அரசியல் சீர்திருத்தங்கள் அறிவிப்பு.

*1919* பிப்ரவரி *26*-ல் கொடுமையான 'ரவுலட்' சட்டத்தை எதிர்த்து சத்தியாக்கிரக உறுதிமொழி ஏற்றார். நாடெங்கும் இயக்கம். கைதாகி விடுதலை.ஏப்ரல் *13* ஜாலியன்வாலாபாக் படுகொலை. டிசம்பரில் காங்கிரஸ் மாநாட்டில் பங்கேற்பு.





எப்பொழுதும் உண்மையை மறையாது சொல்லுகின்ற மனத்திண்மை வேண்டும். மன அழுக்கு உடல் அழுக்கிலும் ஆபத்தானது. ஆனால், வெளி அழுக்கு உள்ளத்து அழுக்கின் ஓர் அறிகுறியே ஆகும்.

— காந்தியடிகள்

*1920* ஜூலை ஒத்துழையாமைப் போர் தொடக்க அழைப்பு. டிசம்பர் 30 காங்கிரஸ் மாநாட்டில் ஒத்துழையாமை இயக்கத் தீர்மானத்தின் மீது பேசினார்.

பம்பாயில் *1921* ஜூலை 31-ல் அந்நியத்துணி எரிப்பு இயக்கத்தைத் தொடங்கினார். அகிம்சை வழி, ஒத்துழையாமை பற்றி அகமதாபாத்தில் நடந்த காங்கிரஸ் மாநாட்டில் விளக்கம்.

*1922* பிப்ரவரி பர்தோலி விவசாயிகள் அறப்போர். அதே மாதம் உத்திரப்பிரதேசத்தில் சவுரிசவ்ரா என்ற இடத்தில் போலீஸ் நிலையம் கொளுத்தப்பட்டு 22 போலீசார்கொலை. இந்த வன்முறை காரணமாக ஒத்துழையாமை இயக்கம் நிறுத்தம். மார்ச் 10-ல் கட்டுரை எழுதியதற்காகக் கைது.

*1924* பிப்ரவரி 5-ல் விடுதலை, செப்டம்பர் 17 முதல் இந்து முஸ்லீம் ஒற்றுமைக்காக 21 நாள் உண்ணாவிரதம். டிசம்பர் 25 பெல்காம் காங்கிரசுக்குத் தலைமை.

*1925, 1926, 1927* மூன்று ஆண்டுகளும் நாடு முழுவதும் சுற்றிப் பிரச்சாரம்.1928 ஜனவரியில் சைமன் கமிஷன் வருகை. நாடெங்கும் அர்த்தால், கொந்தளிப்பு.

*1929* டிசம்பர் 31 லாகூரில் காங்கிரஸ் மாநாட்டில் பூரண சுதந்திரத் தீர்மானத்தைக் கொண்டு வந்தார்.

*1930* மார்ச் 12 உப்பு சத்தியாக்கிரகத்துக்காகத் தண்டியாத்திரை புறப்பட்டார். மே 4ல் கைது.

*1931* ஜனவரி 26ல் விடுதலை. பிப்ரவரி 17-ல் டில்லியில் வைசிராய் இர்வினுடன் சந்திப்பு-மார்ச் 4ல் காந்தி-இர்வின் ஒப்பந்தம். செப்டம்பர் 12 லண்டன் சேர்தல். நவம்பர் 5 ஜார்ஜ் மன்னருடன் சந்திப்பு. நவம்பர் 28 வட்ட மேஜை மாநாட்டு நிகழ்ச்சிகள். காங்கிரசின் கொள்கையை வலியுறுத்தினார். பாரிஸ், ரோம் வழியாக டிசம்பர் 28-ந் தேதி பம்பாய் வந்தடைந்தார். வட்டமேஜை மாநாடு தோற்றதால் அறப்போருக்கு அழைப்பு விடுத்தார்.

*1932* ஜனவரி 4-ல் மகாத்மா கைது. காங்கிரஸ் கட்சி தடை செய்யப்பட்டது. ஆதிதிராவிடர்களுக்கு தனித் தொகுதி என்ற அறிவிப்பை எதிர்த்து செப்டம்பர் 20-ல் சிறையில் உண்ணாவிரதம், சமரச உடன்பாடு. செப்டம்பர் 26-ல் உண்ணா நோன்பை முடித்தார். 1933 மே 8-ல் விடுதலை. ஜூலை 31-ல் கைது, ஆகஸ்ட் 4-ல் விடுதலை, கைது. ஆகஸ்ட் 23-ல் விடுதலை.

*1934, 35, 36*-ஆம் ஆண்டுகளில் அரிசன நலனுக்காகப் பிரச்சாரம்.

*1936* ஜூன் 20ந் தேதி முதல் நாகபுரியை அடுத்த வார்தாவைத் தனது இருப்பிடமாக ஆக்கிக் கொண்டார்.

*1937* தேர்தலில் காங்கிரஸ் வெற்றி. அமைச்சரவை அமைக்க மகாத்மா அனுமதி.

*1938-39* காங்கிரசில் ஏற்பட்ட கருத்து மோதல்களைத் தவிர்க்க முயற்சி.

*1939* அக்டோபர், இந்தியாவைக் கேட்காமல் யுத்தத்தில் ஈடுபட்டதைக் கண்டித்து காங்கிரஸ் மந்திரி சபைகள் பதவி விலகின. வைசிராயுடன் மகாத்மா நடத்திய சமரசப் பேச்சுக்கள் முறிந்தன.

*1940* அக்டோபரில் தனிநபர் சத்தியாக்கிரக இயக்கத்தைத் தொடங்கினார். பல லட்சம் தொண்டர்கள் கைது.

*1941* மார்ச் ஜனாப் ஜின்னா பாகிஸ்தான் கோரிக்கையை வலியுறுத்தினார்.

*1941* டிசம்பர்-காங்கிரஸ் தலைவர்கள் அனைவரும் விடுதலை.

*1942* இங்கிலாந்து அரசு அனுப்பிய கிரிப்ஸ் தூதுக்குழுவுடன் நடந்த பேச்சு முறிந்தது.

*1942* ஆகஸ்ட் 8-ல் பம்பாயில் காங்கிரஸ் மாநாடு. 'வெள்ளையனே வெளியேறு' தீர்மானம். ஆகஸ்ட் 9, காலை மகாத்மாவும் தேசத்தலைவர்களும் கைது. நாடெங்கும் புரட்சி, பிரிட்டிஷ் ஆட்சியில் பொய்ப் பிரச்சாரத்தைக் கண்டித்து சிறையில் பிப்ரவரி 10-ந் தேதி உண்ணாவிரதம். மார்ச் 3-ல் உண்ணாவிரதம் முடிந்தது.

*1944* பிப்ரவரி 22, மகாத்மாவின் துணைவி அன்னை கஸ்தூரிபாய் சிறையில் மரணம்.

*1944*-ஆம் ஆண்டு மே 6-ந் தேதி 21 மாத சிறைவாசத்துக்குப்பின் மகாத்மா விடுதலை.

*1944*-ஆம் ஆண்டு பிற்பகுதியிலும் 1945-ஆம் ஆண்டு முழுவதிலும் பல்வேறு சமரச முயற்சிகளை மகாத்மா மேற்கொண்டார். பிரிட்டிஷ் அரசின் பல்வேறு பிரதிநிதிகள் தூதுக்குழுவினருடன் பேசினார்.

*1946*ஆம் ஆண்டு நடந்த வகுப்புக் கலவரங்கள் அவர் மனதையும் உடலையும் பாதித்தன.

*1946* செப்டம்பரில் இடைக்கால சர்க்கார் அமைந்தது. வகுப்பு ஒற்றுமைக்காக மகாத்மா உண்ணாவிரதம் இருந்தார்.


*1946* இறுதியில் வங்காளம் சென்றார். பிரிவினையும், சுதந்திரமும் ஒன்றாக வந்தன. அண்ணலோ அந்த 1947 ஆகஸ்ட் 15 அன்று வங்காளத்தில் நவகாளி பகுதியில் இந்து முஸ்லிம் ஒற்றுமைக்காக, காலில் செருப்பின்றி நடந்து கொண்டிருந்தார்.

*1947* செப்டம்பரில் டில்லி திரும்பினார். பிரிவினை காரணமாக அகதிகள் படும் துன்பம் கண்டு வருந்தினார். வகுப்புக் கலவரத்தை சில தலைவர்களே தூண்டி விப்பதாகக் கூறினார்.

பாகிஸ்தானுக்குத் தரவேண்டிய 55 கோடி ரூபாயைக் கொடுக்கவும், இந்தியா முஸ்லீம்களைப் பாதுகாக்கவும் உறுதிமொழி கோரி 1948 ஜனவரி 13-ந் தேதி உண்ணாவிரதம் தொடங்கினார். மகாத்மாவின் நிபந்தனைகள் ஏற்கப்பட்டதால் உண்ணாவிரதத்தை நிறுத்தினார்.

*1948* ஜனவரி 30 வெள்ளிக்கிழமை. மாலை 4.30 மணி. மாலை உணவு அருந்திவிட்டு 5 மணி பிரார்த்தனைக் கூட்டத்துக்குப் புறப்பட்டார். 5 மணி தாண்டி சில நிமிடங்கள். ஒருவன் வந்து வணங்கிவிட்டு துப்பாக்கியால் மூன்று முறை சுட்டான். ''ராமா'' என்றவாறே சாய்ந்தார். மறைந்தார். உலகின் உள்ளமெலாம் நிறைந்தார்.

**—ஆர். சீனிவாசமூர்த்தி**



# சிந்திக்கத் தெரிந்த மனிதர்

பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்களின் பாசறையில் வளர்ந்த பேரறிஞர் அண்ணா அவர்களின் 80-வது பிறந்த நாள் 19.9.'88 அன்று ஈரோட்டில் உள்ள வ.உ.சி. பூங்கா மைதானத்தில் நடைபெற்ற்து.

'ஜீவா' இசைக் குழுவினரின் இன்னிசை நிகழ்ச்சியுடன் விழா தொடங்கியது.

கவியரங்கிற்குக் கவிஞர் முருகு சுந்தரம் தலைமை தாங்கினார். கவிஞர் வள்ளிவேலன், கவிஞர் புதியவன், கவிஞர் சொ.கு.திருநாவுக்கரசு ஆகியோர், பேரறிஞர் அண்ணாபற்றிக் கவிதை பாடினர். கவியரங்கம் முடிவுற்ற பிறகு சிறப்புக்கூட்டம் நடைபெற்றது.

சிறப்புக் கூட்டத்திற்கு, செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு நா. கிருஷ்ணபாரதி தலைமை தாங்கிப் பேசுகையில் கூறியதாவது:

''பேரறிஞர் அண்ணா சிறந்த மொழிபெயர்ப்பாளர் என்பதை முத்தமிழ்க்காவலர் சொல்லித் தெரிந்து கொண்டோம். அண்ணா உலகப் பேரறிஞராகத் திகழ்ந்தார். 90 வயதுடைய முத்தமிழ்க்காவலர் அண்ணா அவர்களின் 80-வது பிறந்தநாள் விழாவில் கலந்து கொண்டு சிறப்புச் செய்வது மகிழ்ச்சி தருகிறது. 19-வது நூற்றாண்டின் இறுதியிலும், 20-வது நூற்றாண்டின் ஆரம்பத்திலும் மிகப் பெரிய தலைவர்கள் இந்தியாவில் தோன்றினார்கள். உதாரணத்திற்கு, காந்தியடிகள், தந்தை பெரியார், பண்டிதநேரு, அண்ணா, முத்தமிழ்க்காவலர் கி.ஆ.பெ. முதலானோரைக் கூறலாம். புலவர்கள், கவிஞர்கள், பிறந்தநாள், நினைவு நாள் விழா மூலம் பெருமைகளையும் சிறப்பையும் அறிய முடியும். அந்த வகையில் அரசு விழா எடுத்துச் சிறப்பிக்கிறது."

பேரறிஞர் அண்ணா திருவுருவப் படத்தைத் திறந்து வைத்து, முத்தமிழ்க்காவலர் திரு கி.ஆ.பெ.விசுவநாதம் அவர்கள் பேசுகையில் கூறியதாவது:


''ஈரோட்டு மக்கள் முன்பு, அண்ணா அவர்களின் 80-வது ஆண்டு பிறந்தநாள் விழாவில் கலந்து கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றேன். நூறு வயதுக்குள் ஒருவன் முதல் 20 வயதுக்குள் பெற்றோருக்கும், ஆசிரியருக்கும் அடங்கி நடப்பவன். பின் 80 வயதில் நாடே அவனுக்கு அடங்கி நடக்கும் என்பதற்கு எடுத்துக்காட்டு பேரறிஞர் அண்ணா ஆவார். உழைப்பால் உயர்ந்தவர். திருச்சியில் நடைபெற்ற நீதிக்கட்சி மாநாட்டில் 21 வழக்கறிஞர்களால் மொழிபெயர்த்துச் சொல்ல முடியாததை அண்ணா அவர்கள் மொழிபெயர்த்துச் சிறப்பாகச் செய்தார்கள். இந்த மொழிபெயர்ப்பில் தன்னுடைய குறும்புத்தனத்தையும் செய்தார். அண்ணாவைத் தம்பி என்று அழைப்பேன். சொற்பொழிவில் ஒரு இலக்கணத்தையும், புரட்சியையும் ஏற்படுத்தியவர். வடசொற்களைக் களைந்து தூய தமிழில் உரையாற்றியவர் அண்ணா. தமிழிலே தமிழறிஞர் திருமணத்தை நடத்தினால் செல்லும் என்று ஆக்கினார் அண்ணா. எதிரியை அறிவற்றவன், முட்டாள் என்று எண்ணாமல் பணியாற்றியவர் அண்ணா. மாற்றான் தோட்டத்து மல்லிகையும் மணக்கும் என்றார் அண்ணா."

40 பேருக்கு, இரண்டு இலட்சம் செலவில் அரசின் நலத்திட்ட உதவிகளை வழங்கி பெரியார் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு இரா. கிருஸ்துதாஸ் காந்தி பேசுகையில் கூறியதா்வது:

''அண்ணா பற்றி பல நிலைகளில் சொல்ல வேண்டும். அண்ணா அரசியல் நுணுக்கம், திறமை மிக்கவர். அவருடைய நினைவை நாம் இன்று நிலைநிறுத்தி வருகிறோம். எல்லாப் பெருமைகட்கும் பெருமை அவரது எளிமையாகும். அண்ணா உணர்த்திய தத்துவங்களை நீங்கள் பயன்படுத்தி, அண்ணாவாக வேண்டும் என்று விரும்புகிறேன்.''

விழா இறுதியில், பெரியார் மாவட்ட செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர் திரு நா. தில்லை கோவிந்தன் நன்றி கூறினார் ●

**நமது செய்தியாளர்**



# பொம்மைக் கண்காட்சி

நான்காம் அட்டை சொல்லும் கட்டுரை

ஒலிம்பிக் விளையாட்டுப்போட்டிகள் தொடங்கப்பட்ட இந்த நேரத்தில், அதை நினைவுபடுத்தும் வகையில் வைக்கப்பட்டுள்ள ஒலிம்பிக் விளையாட்டுப் பொம்மைகள் நம்மை வெகுவாகக் கவர்கின்றன.

சென்னைக் குறளகத்தில், தமிழ்நாடு கதர்கிராமத் தொழில் வாரியத்தின் சார்பில் நடைபெற்று வரும் பொம்மைக் கண்காட்சி (12.9.88 முதல் 21.10.88 முடிய) நம் கண்ணையும் கருத்தையும் கவரும் வகையிலே அமைந்திருக்கின்றது.

நுழை வாயிலிலே அமைக்கப்பட்டிருக்கும் இந்திய நடன பொம்மைகள், தேசிய ஒருமைப்பாட்டை உணர்த்தும் எழிலார்ந்த கைவண்ணங்கள்!

இந்த ஆண்டு சிறப்பு வகையாக, உழவுத் தொழிலை விளக்கும் பொம்மைகளின் தொகுப்பு அமோகமாக விற்பனை ஆவதைப் பார்க்க முடிந்தது. இந்தப் பொம்மைகள் நம்மை கிராமத்துக்கே அழைத்துச் செல்கின்றன.



அதோ, பெரிய அளவில் உருவாக்கப்பட்டிருக்கும் மீனாட்சிக் கல்யாணம் திருவுருவச் சிலையைப் பார்க்கிறோம். கலை நுட்பத்தோடு உருவாக்கப்பட்டிருக்கும் இதுவே, கண்காட்சியில் பெரிய பொம்மை. இதன் விலை 1250 ரூபாய்.

அங்கே ஒரு தட்டில் வாழைப் பழங்கள், தக்காளி, கேரட் இப்படி காய்கறிகள், பழங்கள் எல்லாம் உள்ளன. நம் கைகள் அதை எடுக்க முற்பட்டபோது, ''சார், இவையெல்லாம் மெழுகு பொம்மைகள்!'' என்றார் ஒருவர். அவை அவ்வளவு இயல்பாக, தத்ரூபமாக இருந்தன! இவை மேற்கு வங்கக் கைவினைஞர்களால் உருவாக்கப்பட்டவை.

வெள்ளைக் களிமண், காகிதம், மரம், துணி முதலானவற்றால் ஆன அழகிய சிறிய பெரிய பொம்மைகள் நம்மைக் காந்தம் போல் கவர்கின்றன.

பொம்மைகள் மிகுதியாக, சென்னை கொசப்பேட்டை, தென்னார்க்காடு மாவட்டம் பண்ருட்டி, செங்கை மாவட்டம் காஞ்சிபுரம், வட ஆர்க்காடு மாவட்டம் வேலூர், தஞ்சாவூர், தருமபுரி ஆகிய மாவட்டங்களில் உற்பத்தி செய்யப்படுகின்றன.

உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் வகையிலே, ஒவ்வொரு பொம்மையும் ஒவ்வொரு வகையிலே சிறப்புப் பெற்று விளங்குகிறது. குழந்தைகளையும், பெரியவர்களையும் கவரும் அந்தப் பொம்மைகள் எல்லாம், நம் வீட்டில் இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்? என்ற பேராசை ஏற்படுவது இயல்பு தானே?



அங்கே பார்க்கிறோம். வயதானவர்கள் படித்துக் கொண்டிருக்கிறார்கள். ஒரு பக்கம் வளைகாப்பு நடந்துகொண்டிருக்கிறது. ஆம். முதியோர் கல்வி, வளைகாப்பு இவற்றை விளக்கும் தொகுப்பு பொம்மைகள் தாம் இவை!



*12.9.88* அன்று பொம்மைக் கண்காட்சியின் தொடக்க விழா சென்னைக் குறளகத்தில் நடந்தது. முதல் விற்பனையை, ஆளுநரின் ஆலோசகர் திரு ஆ. பத்மநாபன் அவர்கள் துவக்கிவைத்தார். கைத்தறி, துணி, கைவினைப் பொருட்கள் மற்றும் கதர்த்துறை ஆணையர் மற்றும் செயலர் திரு மு. பரமசிவம் அவர்கள் தலைமை வகித்தார்.

தேசத் தலைவர்கள் அண்ணல் காந்தியடிகள், பண்டித நேரு, இந்திராகாந்தி, பேரறிஞர் அண்ணா மற்றும் மகாகவி பாரதியார், தாகூர் முதலான திருவுருவங்களும் உண்டு.

இவை மட்டுமா?

மரங்கள், செடிகொடி, மலர்கள், விலங்குகள் எல்லாம் நம் மனத்தைக் கவரும் பொம்மைகள்.

கண்ணாடியிலான பொம்மைகள், ஓலையிலான உருவங்கள், கிளிஞ்சல்களிலான தோரணங்கள், மணிமாலைகள் எல்லாம் ஏராளம் உண்டு இங்கே!

பொம்மைகள் எனறால், எந்த நாட்டில் தயாரானால் என்ன? இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த ஒருவர், தமிழ்நாட்டுப் பொம்மையின் அழகில் மயங்கி வாங்கிச் சென்றார் என்றால், நமக்கெல்லாம் பெருமையாக இல்லையா?

அதுமட்டுமல்ல, நம் தமிழகக் கைவினைஞர்களின் பொம்மைகள் ஜெர்மன், ஜப்பான் முதலான உலக நாடுகளுக்கும் கூட ஏற்றுமதியாகின்றன.

மண் பொம்மைகளோடு, மரப் பொம்மைகள், உலோகப் பொம்மைகள், சந்தனமரப் பொம்மைகளும் காட்சிக்கும், காசு கொடுத்து வாங்குவதற்கும் வைக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு ஆண்டும் தமிழ்நாடு கதர் கிராமத்தொழில் வாரியம், நவராத்திரித் திருவிழாவை முன்னிட்டு குறளகம், காதி கிராப்டில் பொம்மைக் கண்காட்சி நடத்தி வருகிறது.

தமிழ்நாட்டில் வழக்கமாக ஒவ்வொரு இல்லத்திலும், பொது இடங்களிலும் இத்திருவிழாக் காலத்தில் பொம்மைக்கொலு நடக்கிறது. இதனைப் பயன்படுத்தி, வாரியத்தின் மூலம் உதவி பெற்ற கைவினைஞர்கள் தயாரித்த பொம்மைகளை விற்பதற்கு வாரியம் ஏற்பாடு செய்து வருகிறது.

பொம்மைக் கண்காட்சி மூலம் 1986-87இல்விற்பனைக்குறியீடான ரூ. 4.50 இலட்சத்தையும், 1987-88இல் ரூ. 8.25 இலட்சத்தையும் எய்தியுள்ளது. இவ்வாண்டு ரூ.10 இலட்சம் விற்பைனயாகும் எை எதிர்பார்க்கப்படுகிறது.


இந்த ஆண்டு மதுரை, கோவை, வேலூர், திருச்சி ஆகிய மாவட்டத் தலைநகர்களில் பொம்மைக் கண்காட்சி நடத்தப்படுகிறது என்ற தகவலும் நமக்கு மகிழ்ச்சியைத் தருகிறது.

குறளகத்தில், பொம்மைகள் குறிப்பிட்ட கண்காட்சியின்போது மட்டும் அல்ல, எப்போதும் வந்து வாங்கிக் கொள்ளலாம். பொதுவாக மற்ற பொருள்களோடு, பொம்மை விற்பனை அரங்குகளும் இங்கே இருக்கும்.

வண்ண பொம்மைகள் உள்ளத்துக்கு உற்சாகத்தையும், இல்லத்துக்கு எழிலையும் தர வல்லவை.


சின்னஞ்சிறு வயது முதல் நம் வாழ்க்கையோடு பின்னிப்பிணைந்த பொம்மைகளை விரும்பி வாங்குவதன் மூலம், எண்ணற்ற ஏழை எளிய கைவினைஞர்களை வாழ வைக்கிறோம். அவர்களுக்கு மறைமுகமாக உதவுகிறோம் என்ற மனத்திருப்தி நமக்கு ஏற்படுகிறதல்லவா?

**—பி. வி. கிரி**




"தமிழ்நாடு கதர் கிராமக் கைத்தொழில் வாரியம், இவ்வாண்டு 200 கோடியே 58 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள கைவினைப் பொருள்களை உற்பத்தி செய்துள்ளது. இந்த வாரியத்தின் சார்பில் தயார் செய்யப்படும் காகிதப் பொம்மைகள் தேசிய அளவில் புகழ் பெற்றவையாக உள்ளன. ரூ. 5லிருந்து ரூ. 1500 வரை விலையுள்ள பொம்மைகள் இங்கே உள்ளன. தமிழகப் பொம்மைகளுக்கு ஜப்பான், தைவான் போன்ற நாடுகளில் நல்ல வரவேற்பு உள்ளது" என்ற தகவலை, தமிழ்நாடு கதர் கிராமத்தொழில் வாரியத்தின் தலைமைச் செயல் அலுவலர் திருமதி ஷீலாபாலகிருஷ்ணன் செய்தியாளர்களிடம் கூறினார்.

# தமிழ்நாட்டில் காந்தியடிகள்




பொது மக்கள் வரவேற்பில்

ஸ்ரீராமகிருஷ்ண வித்யாலயம் அடிக்கல் நாட்டு விழாவில்





முதறிஞர் ராஜாஜியுடன்





திரு சீனிவாச ஐயங்கார், தீரர் சத்தியமூர்த்தி ஆகியோருடன் சென்னையில்




கர்மவீரர் காமராசருடன் ஆவடியில்

சென்னை மகளிர் கூட்டத்தில்



ரயில் வரவேற்பிலும் வீர உரை



# சென்னை வானொலி: முக்கிய நிகழ்ச்சிகள்

[1.10.88 முதல் 11.10.88 வரை சென்னை வானொலியில் ஒலிபரப்பாகவிருக்கும் முக்கிய நிகழ்ச்சிகள் விவரம்.]

1.10.1988 (சனி) உலக இன்னிசைத் திருநாளையொட்டி டாக்டர் எம். எஸ். சுப்புலட்சுமி இன்னிசை காலை 8.30

மாலை 6.05 'சமுதாய முன்னேற்றத்திற்குக் குடும்பநலம்' என்பது பற்றி டாக்டர் ராஜகுமாரி சந்திரசேகர் வழங்கும் உரை.

2.10.1988 (ஞாயிறு)

பிற்பகல் 1.05 அண்ணல் காந்தியடிகளின் சீரிய வாழ்க்கையோடு தன்னையும் இணைத்துக் கொண்ட கஸ்தூரிபா அம்மையார் பற்றி டாகடர் எஸ். விஜயலட்சுமி வழங்கும் உரை 'முன்னோடிகள்' என்ற தலைப்பில்.

3.10.1988 (திங்கள்)

மாலை 6.05 புலன்களில் தலையானதாக விளங்கும் கண்களை எங்ஙனம் பாதுகாக்க வேண்டும் என்பது குறித்து, கண் மருத்துவ நிபுணர் டாக்டர் எஸ். காளிதாசனுடன் நேர்முகம்.

புதிய தொடர் நாடகம்

திரு சங்கரநாராயணன் எழுதியுள்ள புதிய தொடர் நாடகம் 'சொன்னால்தான் தெரியும்' வெள்ளிக்கிழமை தோறும் காலை 7.45 க்கு ஒலிக்கும். தொடரின் முதல் பகுதி 7.10.1988 (வெள்ளி) காலை 7.45 அன்று. பிற்பகல் 1.05க்கு 'அம்பேத்காரின் மனிதாபிமானம்' என்ற தலைப்பில் திருமதி மீனாம்பாள் சிவராஜ் பேச்சு.

9.10.1988 (ஞாயிறு)

இராமாயணம் பாலகாண்டத்தில் முழுவதுமாக வரும் விசுவாமித்திர முனிவரை முதன்மைப் பாத்திரமாகப் படைத்து, திரு. கோ. செல்வம் அவர்கள் அமைத்துள்ள ஒரு மணி நேர கவிதை நாடகம், பிற்பகல் 3.30க்கு. இந்நிகழ்ச்சியைத் திருச்சி கோவை, புதுவை, திருநெல்வேலி ஆகிய வானொலி நிலையங்களும் அஞ்சல் செய்கின்றன.

பிற்பகல் 1.05 ஜெயகுமாரி பாஸ்கரன் எழுதியுள்ள 'தேவியரும் திருவிழாவும்' இசைச்சித்திரம்.

மாலை 6.05 'பெண்டிரும் முன்னேற்றமும்' கருத்துக்கோவை மனைமங்கலத்தில் இடம்பெறும். அக் கருத்துக்கோவையில் செல்வி பார்கவி தேவேந்திரா, டாக்டர் கே.ஜி. ரஷ்யா ஆகியோர் நாட்டு முன்னேற்றத்திற்குப் பெண்கள் ஆற்றவேண்டிய பணிகளையும் கடமைகளையும் எடுத்துரைப்பார்கள்.

11.10.1988 (செவ்வாய்)

குடும்ப நலத்திட்ட இருவார விழாவைக் குறிக்கும் வகையில் பிற்பகல் 1.05க்கு ஐ.நா. குடும்பநலத் திட்ட வல்லுநர் டாக்டர் காமாட்சி சுந்தரம் அவர்களுடன் நேர்முகம். மாலை 6.05 தமிழக அரசு குடும்பநலத்திட்டத் துறையின் ஆணையர் செயலாளருமான திரு. என். நாராயணன் இ.ஆ.ப. ஆற்றும் 'தமிழகத்தில் குடும்ப நலத்திட்டங்கள்' என்ற உரை.

## ராஜாஜியும் காந்திஜியும் - முதல் சந்திப்பு



1919 ஏப்ரல் 6-ந் தேதி பஞ்சாப் படுகொலையைக் கண்டித்துத் தேசம் முழுவதும் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. அன்றே இந்தியாவில் அரசியல் தலைமையைக் காந்திஜி ஏற்றார் என்று சொல்லலாம். சென்னையில் மகாத்மாவின் தலைமைக்கு ஆதரவு தந்தவர்களில் முதன்மையானவர் ராஜாஜி. ஆனால் அதுவரையில் அவர் காந்தியைச் சந்தித்ததில்லை. காந்திஜியும் இவரைப் பற்றிக் கேள்விப்பட்டதில்லை.

இச்சமயத்தில்தான் காந்திஜி கஸ்தூரிரங்க அய்யங்கார் அழைப்பின்பேரில் சென்னைக்கு வந்திருந்தார். ராஜாஜியின் விருந்தினராக அவர் வீட்டிலேயே தங்கினார். ஆயினும் அந்த வீட்டுக்காரர் யார் என்பது அவருக்குத் தெரியாது. ராஜாஜியும் பின்னணியிலேயே இருந்துகொண்டு வேண்டிய உதவிகளைச் செய்து வந்தார். ராஜாஜியை முதன் முதலில் இன்னார் என்று கண்டுபிடித்தவர், காந்திஜியின் காரியதரிசியான ஸ்ரீ மகாதேவ தேசாய் தான். அவர் மகாத்மாவிடம், ''இந்த வீட்டின் சொந்தக்காரர் யார் என்பதை நீங்கள் இன்னும் தெரிந்து கொள்ளவில்லையே? அவர் பெயர் ராஜகோபாலாச்சாரியார். சி.ஆர். என்பது சுருக்கப் பெயர். ஒத்துழையாமை இயக்கத்துக்காக வக்கீல் வேலையை விட்டவர். (சென்னை மாகாணத்தில் இத்தியாகம் செய்த முதல் வக்கீல் இவர்தான்) சிறந்த அறிவாளியாகத் தோன்றுகிறார். தாங்கள் அவரை அவசியம் தெரிந்து கொள்ள வேண்டும்'' என்றார். பிற்பாடுதான் காந்திஜி ராஜாஜியைக் கூப்பிட்டு அவருடன் பேசிப் பழக்கம் செய்து கொண்டார்.

காந்திஜியின் சத்தியாக்கிரகத் திட்டத்தைப் பற்றிக் கேட்கப்பட்ட சில சந்தேகங்களுக்கு ராஜாஜி அளித்த விளக்கத்தைக் கேட்ட சேலம் விஜயராகவாச்சாரியார் ''மகாத்மாஜி சத்தியாக்கிரகத் தத்துவங்களைப் பற்றி ஏதாவது புத்தகம் எழுதியிருக்கிறீர்களா? சி.ஆர். அதைப் படித்திருப்பார் போல் தோன்றுகிறதே!'' என்றார்.

காந்திஜி சிரித்துக் கொண்டே, ''நான் புத்தகம் எதுவும் எழுதவில்லை. ஆனால் உங்கள் சி.ஆர். எப்படியோ என்னுடைய வழிகளையும் தத்துவங்களையும் நன்றாகத் தெரிந்து கொண்டிருக்கிறார். அது எனக்கே வியப்பாக இருக்கிறது'' என்றார்.

—நன்றி: 'கல்கி' (காந்திமலர்-1969)

ஆசிரியரும் வெளியிடுபவரும்: தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி: தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.


கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி
100 சதவிகிதம் அசல் பட்டு மற்றும் தங்க சரிகைகளைக் கொண்டு நெசவுசெய்யப்பட்ட புதுமையான பட்டுச்சேலைகளை கோ-ஆப்டெக்ஸ் அளிக்கிறது.
இந்தியாவின் மிகப்பெரிய கைத்தறி கூட்டுறவு விற்பனை நிறுவனம் கோ-ஆப்டெக்ஸ். அதற்குச் சொந்தமான 560 விற்பனைக்கூடங்கள் மூலமாக கோடிக்கணக்கான வாடிக்கையாளர்களின் தேவைகளை பூர்த்தி செய்கிறது
DIPR: Efficient

தமிழரசு
பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23





சென்னைக் குறளகத்தில்
பொம்மைக் கண்காட்சி





